ஆதிநாதர் துணை.

மேருமந்தரபுராணம்.

இஃது,

காஞ்சிமாநகரத்துக்குச் சமீபத்திலிராநின்ற

நரியம்புத்தூர்

குந்தியப்பநயினாரவர்கள்

கனிஷ்ட புத்திரராகிய

பாகுபலிநயினாரவர்களாலும்

புதுக்கோட்டைசமஸ்தானம்வித்வான்

பிள்ளையஞ்சேரி

முருகேச கவிராயரவர்கள்சகோதரராகிய

அரங்கசாமி கவிராயரவர்களாலும்

திருத்தப்பட்டு;

ஜைநசித்தாந்தம் இவ்வகைத்தென்று

யாவருமெளிதிலுணர்ந்துகொள்ளும்படி

ஷை பாகுபலிநயினாரவர்கள் சகோதரராகிய

சக்கரவர்த்திநயினாரவர்களால்

சென்னபட்டணம்

ஊ - புஷ்பரதசெட்டியாரது

கலாரத்நாகரம் என்னும்

அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

ஈஸ்வரவருஷம் ஆனிமீ.

இதன்விலை ரூ - க.

திருமணம்
செல்வக் கேசவராய முதலியார், எம். ஏ.
1864 - 1921

ஆதிநாதர்துணை.

மேருமந்தரபுராணம்.

இஃது,

காஞ்சிமாநகரத்திற்குச் சமீபத்திலிராநின்ற

நரியம்புத்தூர்

குந்தியப்பநயினாரவர்கள்

கனிஷ்ட புத்திரராகிய

பாகுபலிநயினாரவர்களாலும்

புதுக்கோட்டைசமஸ்தானவித்வான்

பணையஞ்சேரி

முருகேச கவிராயரவர்கள்சகோதரராகிய

அரங்கசாமிகவிராயரவர்களாலும்

திருத்தப்பட்டு,

ஜைநமதசித்தாந்தம்இவ்வகைத்தென்று

யாவருமெளிதிலுணர்ந்துகொள்ளும்படி

ஷை பாகுபலிநயினாரவர்கள் சகோதரராகிய

சக்கரவர்த்திநயினாரவர்களால்

சென்னபட்டணம்:

ஊ - புஷ்பரதச்செட்டியாரது

கலாரத்நாகரம் என்னும்

அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

ஈஸ்வர௵ வைகாசிமீ.

இதன்விலை ரூ-க.

Registered Copy-right.

முகவுரை.

சகல நற்குணங்களும் அமைந்த மஹாஉசித சத்தியவந்தனு கிய, சிம்மசேன மஹாராஜனும், செந்தாமரைமலரி லெழுந்த ருளியிராநின்ற, திருமகட்கு மேலாகிய அழகையும், கற்பையு முடைய இராமதத்தை யென்னும் உத்தம இராஜஸ்திரியும், அவர் கள் செய்த அருந்தவத்திலுற்பவித்த சிம்மசந்திரன், பூரணசந்தி ரன் என்னு மிராஜகுமாரர்களுமாகிய இந்நால்வரும், பொய், பொறாமை, பொருளாசை முதலிய துர்க்குண நிறைந்த சத்திய கோட னென்னும் மந்திரியின் காரணத்தால் அநேக பிறவிகளி லுழன்று முடிவில் தேவர்களாய்ச் சுவர்க்கமடைந்ததும், பின் னும் பூலோகத்தில் மனிதராய்-அவதரித்து உத்தமர்கள் நினைத் தற்கரிய அற்புதத் தவஞ்செய்து முத்தி யடைந்ததையும், அக் கொடியோனுகிய மந்திரி அதோகதியாகிய நரகத்தில் அநேகநாள் முழுகி மிக்க உபத்திரவங்களை யனுபவித்ததையும், இந்நூல் விளக்குகின்றது.

முகவுரை.

[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible] (௧)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] (௨)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] (௩)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] (௪)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] (௫)

[illegible]

𑌫𑌲𑌶𑍍𑌰𑍁𑌤𑌿.

[illegible] (௬)

𑌸𑌂𑌪𑍂𑌰𑍍𑌣𑌂.

வெண்பா.

ஆயிரத்து நானூற்றின் மேலுமிரு மூன்றும்
பாயபுகழ் மேருக்கள் மந்தரர்பாற் — றூய
தவராஜ ராஜன் குறுமுனிவன் ஈந்த
பவரோக மந்திரமாம் பாட்டு. (எ)

𑌇𑌷𑍍𑌟𑌦𑍇𑌵𑌤𑌾𑌯𑍈 𑌨𑌮𑌃.

[illegible]

உ

இஃது,

தில்லையம்பூர்ச் சந்திரசேகரகவிராஜ

பண்டிதரியற்றிய

சிறப்புப்பாயிரம்.

நிலமண்டிலவாசிரியப்பா.

திருமலியசோகின்பெருநிழலுறையும்
பண்புறுகின்றவெண்குணப்பண்ணவன்
பூமிசைநடந்தமாமலர்த்தாளோன்
எல்லாவுயிர்தொழூஉங்கொல்லாவிரதன்
சாரணர்க்கருளுங்காரணமுதல்வன்
காவுந்திக்கருளியமாவிந்தவுறுவன்
ஆத்தனறிவனருகனமைவன்
சீர்த்தன்மாக்கள்சிவகதிபெற்றுய
அறமுதனான்கும்பெறவருள்கொண்டு
ஓதிடுவேதவுண்மைப்பொருடனை
நீதிசேர்முதல்வனருளுறநிகழ்த்திய
மேருமந்தரமாந்திருநூலினை
யாருமெளிதினறிதாற்பொருட்டே
பூமகள்மாமுகமென்னப்பொலிந்திடு
தேமலிதொண்டையெனுந்திருநாட்டின்
புலிமுனிமகற்குஞ்சிலைதருமகட்கும்
பாலளித்தாண்டபாலத்திருக்கினன்
கச்சியென்னுமுச்சிதப்பதிக்குப்
பக்கந்தன்னிற்றக்கவனப்புறு
தாழைவருக்கைவாழைகமுகு
மாழைகேதகைமாவுறுநாகம்
செங்நெலுங்கன்னலுஞ்சீர்பெறுமாம்பலும்
பொன்னுறைதடமும்போதவுடுத்திடு
அரியவளஞ்சேர்நரியம்புத்தூர்க்
குந்தியப்பக்கோமான்றவத்தால்
வந்தவுருவுடைமாரனாகிய
சுந்தரத்தினுக்குந்துகளறுநிதிக்கும்
நந்தலில்குபேரனற்கருணைக்கடல்
அருந்தமிழ்க்கடலின்பெருங்கரைகண்டவன்
வாகுக்குளையுளாமாமறுமார்பினன்
பாகுபலிநயினாரெனும்பண்புசேர்
ஓகையுமீகையுமொருங்கேகொண்டவன்
நயனாரெனுநல்லாதிப்பெயரினன்
சயமெனுமாணத்தன்னுரங்கொண்டவன்

வழுவுக்களைந்தீந்திடவானமுதிஃதெனக
குழுவுக்கொளீஇப்புலவர்கொண்டுளங்களித்திட
திக்குவரையர்கடிருமுடிக்கொண்டிடு
சக்கரவர்த்தியெனும்பெயர்தரித்திடு
திக்கினர்புகழ்ந்திடுசீருளெழுத்தால்
பக்குவமாகப்பதித்தனன்மாதோ.

சென்னை-கவனர்மெண்டு நார்மல்பாடசாலைத்

தமிழ்ப்புலவர்

சோடசாவதானம்

தி - சுப்பராயசெட்டியார்.

நேரிசையாசிரியப்பா.

நீர்மலிபடுகரின்ஏர்பெறமுற்றிக்
கண்முத்தரும்பியவெண்மலிகன்னலும்
பருமுத்தரும்பிமரகதங்காய்த்துத்
திவளொளியுமிழும்பவளம்பழுத்த
பச்சிளங்கமுகமுமெய்ச்சிவன்போல
மூன்றுகண்ணுடையமுப்புடைக்காய்கள்
ஆன்றதென்னையுமணிபெறக்கஞன்று
கண்டவரயிர்ப்பக்கவினவோங்கி
விண்டலத்தமரர்வேந்துவீற்றிருக்கும்
பட்டிமண்டபத்தின்பாங்குறவெழிலசெய்யுங்
கட்டுமைபொதிந்தகச்சிநன்னகர்க்கோர்
மணிவிளக்கென்னத்தணிவறவிளங்கும்
நரியம்புத்தூர்நன்னகராளீ
வரிசிலையேந்துமாரனைவென்ற
பூமிசைநடந்தவாமனைவாழ்த்தும்
புண்ணியம்பழுத்ததண்ணியநடையான்
குந்தியப்பனென்னுங்குரிசில்
முந்தியதவமேமுளைத்தெழுந்தனையான்
கசபதிமுதலியோர்கருதுபுகழ்பூண்ட
புசபலியென்னும்பூபனுடுவங்தோன்
கல்வித்துறையிற்கசடறச்சென்றோன்
சொல்வித்தகத்திற்சோர்விலாவல்லோன்
கவிஞர்க்குதவுங்காட்சியாளன்
குவிதலில்கல்வியுங்கோடாச்செல்வமும்
ஒப்பவுடையசெப்பரும்புகழோன்
பாகுபலியெனும்பாவலர்பெருமான்
சோகறுதன்மதத்துகடீர்கொள்கையைப்
பாருலகறிவான்புளகறவாய்ந்து

மேருமந்தரவிழுத்தகுபுராணம்
சிந்தையுவந்துதந்தனனாக
தன்னுடன்பிறந்ததகையனாதலின்
என்னையனையவரிருநிலத்தில்லெனா
ஆராமகிழ்ச்சியிற்பேரானாகி
அன்னதையேற்றேயச்சிட்டனனால்
அன்னவன்யாரெனில்அறையக்கேண்மோ
மன்னர்விழையும்நன்னர்சால்கவியும்
பல்லோர்விழையும்நல்லதிகாரமும்
திருமகள்விழையும்பெருமைசேர்செல்வமும்
கற்றோர்விழையுஞ்செற்றமில்குணனும்
நல்லோர்விழையும்தொல்லைநன்னடையும்
ஒருங்கேயுடையபெருங்குணமேரு
மிக்கவர்புகழும்விழுச்சீர்ச்
சக்கரவர்த்தியெனுந்தக்கோனே.

புதுக்கோட்டை சமஸ்தான வித்வானாகிய
பனையஞ்சேரி
முருகேசகவிராயரியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பேருமந்தரநாணப்பெரும்புலவரியற்றிடுநூல்
பின்னிட்டோட
மேருமந்தரப்பெயர்கொண்மேன்மைபெறு
மாருகதவிளக்கைவெண்மா
ஊருமந்தரநாடனைப்பரியகடைமருந்து
முவர்க்கவான்றோர்
யாருமந்தரங்காணாதகமகிழப்பாருபலி
யென்னுந்தூயோன். (௧)

குந்தியப்பமகிபாலன்கோதிறவத்தாலுதித்தோன்
குபேரநாண
நந்தியநன்னிதியுடையானரியம்புத்தூருடை
யானாநிலத்தில்
முந்தியசெந்தமிழ்க்கடலைப்பாரதியாற்
கரைகண்டோன்முனிவிலாதான்
சிந்தியலுங்கருணையுளான்சிறுவருக்கும்
பொருள்விளக்கத்திருத்தியீய. (௨)

இக்கரைபாகுங்கைக்குமின்சொல்லானெ
ந்நூலுமினிதினோர்வான்
சக்கரவர்த்திகளுளங்கொள்சக்கரவர்த்திப்
பெயரான்சாந்தமுள்ளான்

சிக்கறநன்றாயுணரச்சீருள்ளாலியன்றதிரு
வெழுத்திற்சீராய்
தக்கபடியச்சியற்றித்தந்தனன்றந்த
னமென்னச்சதுரர்போற்ற. (௩)

பேன்பிரசி அவுஸ்துபாசி

வ - அப்பாராவுபிள்ளை பாடியது.

ஆசிரியப்பா.

பூமலியசோகின்பொலிதருமுக்குடை
சேமமார்செல்வன்ஜெகதலம்புரக்கும்
தேவன்றனக்கேதிருவுளத்தன்புசெய்
காவலர்மகிழுங்கனமுளதிண்ணியன்
செல்வமாதெண்மருஞ்சேர்ந்தினிதுறையும்
நல்வளம்பொருந்தியநரியம்புத்தூர்
குந்தியப்பன்றன்குலமதுவிளங்க
வந்தவதரித்தவளம்பெறுபுதல்வர்
மூவரில்நடுவாய்முளைத்தெழுந்தோங்கிய
நாவலர்மகிழுந்திடுநயமுளசுந்தாள்
பாகுபலியெனும்பண்புளபெயரோன்
நாகரீகத்தினலமெலாமுணர்ந்தோன்
மிக்கப்பிரதாபமேவுஞ்சிலாக்கியன்
சக்கிரவர்த்தியின்றயையுளசோதரன்
நேசரிதையகிரிலம்புயத்தில்
வாசமாய்மருவுமனோகரபுண்ணியன்
சகலகலையெனுஞ்சாகரமதனை
அகமகிழ்ந்துட்கொளுமன்புறுமகத்தியன்
நல்லறத்தோர்க்குநயந்தினிதளித்து
இல்லறந்தன்னிலியங்குஞ்சிந்தையான்
பல்லறம்பலர்க்கும்பகருமுசிதன்
சொல்வளம்பொருந்தியதுகள்தீர்நாவலன்
எண்ணான்கறத்தையுமினிதாய்நடத்தும்
கண்ணார்கிளைஞராக்காதலித்தாள்பவன்
புலைகொலைகளவிலும்புணராதிரவலர்க்
கிலையெனுதீயுநல்லேலந்தெழில்வள்ளல்
அறம்பார்க்குநெஞ்சினர்க்கானந்தமாக்கி
மறம்போக்குமேருமந்தரபுராணம்
அச்சிற்பதிப்பித்தஅருளாளனுக்கே
மெச்சியகைம்மாறுலகமென்செயுமே.

ஆதிநாதர் துணை.

தெய்வீகம்பொருந்திய

மேருமந்தர புராணம்.

குற்றங்களில்லான்குணத்தானிறைந்தான்குணத்தான்
மற்றிந்தவையமளந்தான்வையநின்றபெற்றி
முற்றுமுணாத்தானுணாயீரொன்பதாய்த்தோன்றுற்
செற்றங்கடீர்ப்பான்விமலன்சரண்சென்னிவைத்தேன். (க)

மேதக்கசோதிவிமலன்கணத்துக்குநாதர்
மாதக்ககீர்த்தியுயர்மந்தரமேருநாமர்
போதக்கடலார்புராணப்பொருளான்மனத்தைச்
சோதிக்கலுற்றேன்றமிழாலொன்றுசொல்லலுற்றேன். (உ)

மலைபோலநின்றுவெயிலவன்பனிமாரிவந்தான்
நிலைபோதலில்லார்நிலையின்முன்னெண்ணுதுநின்றேன்
கலையானிறைந்தார்கடந்தகவிமாக்கடலின்
நிலையாதுமெண்ணுதிதுநீந்துதற்குமெழுந்தேன். (ங)

நல்லோர்கள்போய்வழிநாலடிப்போயினலும்
பொல்லாங்குநீங்கிப்புகழாய்ப்புண்ணியமுமாகுஞ்
சொல்லால்நிறைந்தசுதகேவலிசென்றமார்க்கஞ்
செல்வானெழுந்தேற்கொருதீமையுண்டாகவற்றே. (ச)

பொன்னைப்பொதிந்தகிழிபொன்னேடிருந்தபோழ்திற்
பொன்னைப்பொதிந்தகிழிதன்னையும்பொன்னின்வைப்பார்
புன்மைச்சொலேனும்புராணப்பொருளைப்பொதிந்தால்
நன்மைக்கண்வைத்தற்கினிநாமிரங்கும்படித்தோ. (ரு)

மணிமுடிகவித்துவேந்தன்மன்னவர்தன்னைச்சூழ
வணியினேடிருந்ததேபோலயங்கியங்கடலுந்தீவுந்
தணிவில்சூழ்மேருவென்னுந்தடமுடிகவித்துச்சம்பூ
வணியினேடிருந்ததீபத்தரசனதகலத்தம்பொன். (சா)

திருவெனத்திகழ்ந்துசெம்பொன்மலையினைச்சேர்ந்துதீர்த்தம்
மருவியேசெல்லுங்கந்தமாலினியென்னுநாடு,

விரவிலாவிதேகத்தென்றுமுறையுளாய்விதேயநாம்ம
மருவியநாட்டுச்சீதோதகைவடதடத்திலுண்டே. (எ)

ஐஞ்சிறப்பயருந்தேவர்நால்வகைக்குழுவோடம்பொ
னிஞ்சிசூழ்ந்திலங்குமேழுநிலத்திறைபிருக்கைவட்ட
மஞ்சிலம்பார்களாடலறிவனதெழுச்சியாதி
யெஞ்சிடாவந்தநாட்டின்பெருமையாரியம்பவல்லார். (அ)

மணியிலாமலையுமில்லைவனப்பிலாவனமுமில்லைக்
கணியிலாநிலமுமில்லைக்கரும்பிலாக்காடுமில்லை
அணியிலாமகளிரில்லையழகிலாண்மந்தரில்லைத்
துணிவிலாத்துறவுமில்லைத்தூய்திலாவொழுக்கமில்லை. (கூ)

கற்பிலாமகளிரில்லைக்கருணையில்லாருமில்லைப்
பொற்பிலாவறமுமில்லைப்போதமில்லாருமில்லைத்
தற்கமில்லாருமில்லைத்தானமில்லாருமில்லைச்
சொற்கண்மெய்யிலாதவில்லைத்தூயரல்லாருமில்லை. (க0)

மணிநலவயிரம்பைம்பொன்வரன்றிமாதிரையுஞ்சந்துந்
துணிநலவகிலுங்கொம்புந்தோகையுமயிருமேந்தி
வணிகநல்லொருவன்போலவயலகமடுத்தவாறு
பணிவிலாப்பழங்கொடெங்கினிலையெனப்பரந்ததன்றே. (கக)

குழைகளுமலருஞ்செற்றிக்குயில்களுமயிலுமார்த்து
மழையெனமதுக்கள்பெய்துவண்டொடுதும்பிபாடி
விழைவுறுந்தகையவாகிவேண்டினார்வேண்டிற்றீயு
மழகுடைமரங்கள்போன்றவம்மலர்ச்சோலையெல்லாம். (கஉ)

மதியொடுமீன்கணீலமணித்தலத்திருந்தவேபோற்
பொதியவிழ்கமலமாம்பல்பூத்தனபொய்கையெல்லா
மதிமிசைக்கறுப்பின்வெண்டாமரைமிசைவண்டின்பாடல்
மதியன்னமுகத்தினல்லார்வாய்ப்பண்ணினெழுச்சித்தொன்றே.

அன்னமென்குருகுதாராநாரைவண்டானங்கோழி
துன்னினபெடைகளோடுந்துறந்தவுமழைத்ததோற்ற
மின்னரிச்சிலம்பினல்லார்சில்லரிச்சிலம்பலாடிக்
கன்னியாழ்பயிலுஞ்சாலைபோன்றனகயங்களெல்லாம். (கச)

சாலிகள்கரும்பிற்செற்றிச்சாலவுமுயர்ந்துதம்மின்
மேலளாவொத்துச்செம்பொன்விரிந்துடனின்றுமேலோர்

காலுறவணங்குவாரிற்கமலத்தினிறைஞ்சிக்காய்த்த
நீலநற்பவழமுத்தின்கழுத்தவாநிறைந்தபூகம். (கரு)

சொற்பழியிலாமையானுந்தூயநல்லொழுக்கினலு
மிற்பிறப்போம்பலானுமெள்ளற்பாடின்மையானு
நற்றவர்க்கீதலானுநாதன்சீரோதலானுங்
கற்புடைக்காமவல்லியார்களேபோலுமூர்கள். (கசா)

வேறு.

பாரிலுள்ளவர்க்கெல்லாம்படுபயன்பொதுவுமாய்
ஏர்மலிந்திடங்களெங்குமின்பமேபயந்துநல்
வேரிசாந்தமூடுபோகிமேவியாடல்பாடலோடும்
வாரமாதர்போன்றுமாடவூர்கடோறுமாடெலாம். (கஎ)

சுந்தரத்தலமணிச்சுவர்ப்பளிக்குசெம்பொனல்
அந்தரத்தடக்கமாயனேகமாலைநான்றகம்
மைந்தரும்மயிலன்னருமல்குமாடமாளிகை
யிந்திரவிமானமிங்கிழிந்திருந்தநீரவே. (கஅ)

சாதுரியமில்லவருமில்லைமைந்தர்தஞ்சொலும்
மாதுரியமில்லவையுமில்லைமற்றவர்செயல்
போதுரியமில்லவையுமில்லைபொன்னெயிலிறைக்
காதரமுமில்லவருமில்லையந்நாடெலாம். (கசு)

சீலமும்வதங்களுஞ்செறிவுமில்லவரிலை
காலைமாலைநீதியோடுகல்வியில்லவரிலை
வேலைமுன்புநல்லதானமின்றியுண்பவரிலை
மாலைகாலைமாதவரைவந்தியாருமில்லையே. (உ0)

ஐங்கணைக்கிழவனைக்கடந்தமெய்த்தவரொனும்
புங்கவற்கிறைவனற்சிறப்புமுன்பிலாதன
மங்கலத்தொழில்களில்லைமானமாயமந்நாட்
டெங்குமில்லையாவருமிறைஞ்சிமெய்யொழுகலால். (உக)

நடுக்கடற்பிறந்தசங்கினுள்ளிருந்தபாலினற்
குடிப்பிறந்தமைந்தர்தங்குழைமுகம்பிறர்மனை
யிடைக்கண்வைத்தலில்லைகாதலார்கண்மேலுமார்வமூர்
கடைக்கணோக்கிலாதமாதர்கற்பையாவர்செப்புவார். (உஉ)

அணியினுக்கணியனர்களாடுமாமயிலனர்
மணியைமண்ணினின்வைத்தனர்வஞ்சமின்மனத்தினர்

பணிவிலாவொழுக்கினார்கள்பண்ணவற்பழிச்சுவார்
கணிகைமாதர்சீலமின்னகாமுறுந்தகையவே. (௨௩)

இடையறுதறிவொளியிரவியங்கெழுதலாற்
கடையிலாவறிவிறைவனாலயங்களல்லது
படரொளிவிமானத்தோடுபாயிருள்ளதிண்மைபோல்
விடையுலாவியாதியாயவேற்றிலிங்கமில்லையே. (௨௪)

குறையிலாக்குடிகளாற்குழீஇயவூர்கொரடைவளர்த்
திறையிடுமிவற்றினாலியல்பினாயநாடெழின்
நிறைமதிநடுவணெய்தநின்றமீன்குழாங்கள்போல்
இறைவனதிருக்கைசூழ்ந்தநாலெணாயிரங்களே. (௨௫)

வேறு.

அறைகழலரசர்கோமானிருக்கையதமைதிசெப்பிற்
குறைவிலாவீதசோகங்குபேரனதிருக்கைபோலும்
நெறியினாற்புகையிரண்டாறென்பதுநீண்டகன்று
மறுகுமாநதிகள்போன்றுவழங்குமாயிரத்ததாமே. (௨௬)

அறுபதுதலைவைத்திட்டமூன்றுநூறறிவன்கோயில்
செறிமலர்ச்சோலைகுன்றம்வாவியுஞ்செப்பினன்ன
வறுபதிற்குணிக்கப்பட்டவாயிரஞ்சேரிபாடி
யறுபதோடிசைந்தபத்தாற்குணித்தவாயிரங்கடாமே: (௨௭)

அஞ்சுநூறிரட்டிவாயிலேழுநூறுகும்பூழை
துஞ்சிலாப்பலிபெயபீடமாயிரஞ்சதுக்கமன்ன
குஞ்சரங்கடாவிவாழுங்குடிகளுநூற்றுக்கோடி
யிஞ்சிமாநகரமிவ்வாறியற்கையாலியன்றதன்றே. (௨௮)

வேறு.

சுந்தரமலர்களெண்ணெய்சுண்ணந்தாதுகுங்குமஞ்
சந்தனக்குழம்புமேற்பரந்துபாடிசூழ்ந்தகழ்
அந்தரத்தருக்கனையணிந்துசூழ்கிடந்ததோ
ரிந்திரதனுவின்வண்ணமென்னதன்னதாகுமே. (௨௯)

கிடங்கிடைத்தடங்கள்சூழ்ந்துகேடுதோற்றமின்றியே
மடங்கன்மொய்ம்பின்வானவர்க்குமீதுபோகொணாமதில்
தடங்கடல்மணாத்தலைத்தணாயுஞ்சூழமானவர்
கடந்திடாவகையினின்றநாகந்தன்னைக்காட்டுமே. (௩௦)

திக்கயமலைகள்போற்சிறந்துநின்றகோபுரங்க
ளொக்குமாளிகைநிரைக்குலமலைகளொத்தன
மிக்கமாசனஞ்செல்வீதிசீதையாதியாறெனச்
சக்கரன்றன்மாளிகையும்மேருவன்னதன்னதே. (௩௰௧)

முகிற்கணங்கள்பொன்மலையைமொய்த்தயானைபோன்மொய்ப்ப
பகற்கிடைகொடாதபைம்பொன்மாளிகைப்படிந்தன
வகிற்புகையளாயநீர்மதத்தருவிபோன்றன
துகிற்கணங்களந்நகர்மதிமறுத்துடைக்குமே. (௩௰௨)

பளிக்கறைத்தலத்தினூடுபந்தொடாடுபாவையர்
களிக்கயலனையகண்கள்காமர்பந்திமேற்செல்வ
வளைத்தநற்புருவவில்மலர்க்கணைதொடுத்துவில்
விளைப்பநீங்கமாரனம்பிலக்கிலெய்ததொக்குமே. (௩௰௩)

வேறு.

மாலைசாந்தெண்ணெய்சுண்ணங்கைசெய்வார்மறுகுமைந்தர்
கோலவார்குழலினார்போலிருந்தனவணிசெய்வீதி
மாலைமாமணியுமுத்துமவிழ்ந்தவைகிடந்ததோற்றம்
மேலுலாவானயாறுவீழ்ந்திவட்கிடந்ததொத்தே. (௩௰௪)

குழைமுகம்புரளவாங்கிக்கொடுஞ்சிலைப்புருவங்கோலி
யழலுமிழ்ந்திலங்கும்வேற்கணம்புகோத்தாடவாரை
யுழையின்மென்னோக்கத்தெய்திட்டுள்ளத்தைப்பறித்துக்கொள்ளு
மழலையாழ்மொழியினார்தம்வாழ்க்கையாருரைக்கவல்லார். (௩௰௫)

கள்ளுமிழ்ந்திலங்குவாசக்கமலவாண்முகத்துக்காமர்
உள்ளமுங்கண்ணும்வண்டோடுடன்சுழன்றாடவாடித்
தெள்ளொலியாழும்பாட்டுந்திருவனார்பயிலுஞ்சாலை
புள்ளொலித்தளிகள்பாடுந்தாமரைப்பொய்கைபோலும். (௩௰௬)

யானைதேர்குதிரைநிற்குமிடம்படையடைக்குஞ்சாலை
சேனைமாவேந்தர்தெவ்வர்தருதிறைகாணுஞ்சாலை
மானவேன்மன்னர்கோமான்மந்திரச்சாலையாதி
யேனையபிறவுமிவ்வாறியம்புதற்கரியதன்றே. (௩௰௭)

காமவேளனையமைந்தர்காவியங்கண்ணினாரும்
பூமகளிலங்கும்வீரர்போர்ப்புலிக்குழாங்கள்போல்வார்

தாமவெண்குடையினரும்சக்கரன்றன்னையொக்கும்
வாமஞ்சூழ்கமலஞ்சங்கின்வண்கையார் வணிகரெல்லாம். (௩அ)

மாலையுஞ்சாந்தும்பஞ்சவாசமும்வழங்குவாரும்
சாலியினடிசிலுண்பார்தமர்களுக்கூட்டுவாரும்
வேலைநல்லுலகில்விற்கும்விழுப்பொருள்வாங்குவாரும்
மாலைவாய்விருந்தோடுண்டிவகையுடனருந்துவாரும். (௩௯)

முழவமாமுரசஞ்சங்கங்கடலெனமுழங்கவம்பொற்
குழலும்யாழ்வீணையேங்கக்கொம்பனார்குலாவியாட
நிழலுலாமதியம்போலுங்குடைமும்மைநீழல்வேந்தன்
விழவருவீதிமூதூர்வீதசோகமாய்விளங்குநின்றே. (௪0)

வேறு.

பொன்னுலகுலாய்ப்போந்துபூமிசை
மன்னுமன்னவிம்மாநகர்க்கிறை
யன்னமென்னடையினர்க்கனங்கனும்
மன்னர்மன்னவன்வைசயந்தனே. (௪௧)

ஆறுபற்றியவகன்றகாட்சியான்
ஆறுநன்னயமமர்ந்தமாட்சியான்
ஆறுதொல்பகையடர்ந்தசூட்சியான்
ஆறிலொன்றுகொண்டகன்றவேட்கையான். (௪௨)

கற்பகம்மவன்கருதிற்றீதலாற்
சொற்பொருளறிசுருதிமாக்கடன்
மற்புயத்தினன்மால்வரைமலை
கொற்றவர்க்கெலாங்கூற்றமெனக்குமே. (௪௩)

சூட்சியாற்பகைசுருக்கினல்லது
வாட்செய்போரிலன்வன்சொலின்றிமண்
ணுட்சியாலிசைகேட்டவசுணமாத்
தாட்சிபோலுலகந்தானிறைஞ்சுமே. (௪௪)

நல்லதொல்குலத்தரசனுதலாற்
சொல்லுஞ்செய்கையுஞ்சோர்வெய்தாமையாற்
புல்லினர்புகழ்மாதுபூமகள்
சொல்லின்செல்வியுஞ்சுளிவுநீங்கியே. (௪௫)

வேறு.

கற்பகந்தனையணைகாமர்வல்லிபோல்
வெற்றிவேல்வேந்தனைவேள்விநீர்மையாற்
பொற்பமைந்தெழுதியகொடியனூர்ப்புணர்ந்
தற்புநீர்க்கடலிடையமூந்துநாளிலே. (சசு)

வேறு.

பூவிற்கொம்பும்புகழும்படிநல்வடிவின்மா
தேவிப்பட்டம்பெற்றனளெல்லாந்திருவன்னாள்
காவிக்கண்ணாள்வதனக்கமலத்தலியாய்மண்
காவற்கோமானியலும்நாளாற்கவின்பெற்றாள். (சஎ)

முல்லைக்கன்னிக்கொடிமுன்னரும்பைப்பயந்தாற்போற்
செல்வச்சிறுவற்பயந்தாள்அந்தத்திருவன்னாள்
மல்லிற்பொலிதோள்மன்னன்முன்னாள்மதிகாணா
வொல்லென்கடல்போலுவந்திட்டுலகத்திடர்தீர்த்தான். (சஅ)

வேறு.

சுண்ணமெண்ணெய்சொரிந்தனதூரியம்
விண்ணைவிம்மமுழங்கினவெண்கொடி
யண்ணறோன்றலுமெங்கணுமாடின
புண்ணியன்னகர்பொன்னகராயதே. (சகூ)

சஞ்சயந்தனெனும்பெயரானவன்
அஞ்சுதாயர்தங்கைவழியந்திவாய்
மஞ்சிலாமதிபோலவளர்ந்தபின்
அஞ்சிலோதியர்க்கின்னமிர்தாயினான். (ரு0)

வேறு.

குஞ்சிகணிமுல்மணிக்கதிர்க்குழாமுக
மஞ்சிலாமதியமணியெழுக்கள்மார்
வஞ்சிநுண்ணிடைமலராட்கிடந்துடை
யஞ்சொலார்மனக்களிறணைபொற்றம்பமே. (ருக)

மணியினைக்கடந்தாக்கியவானவிற்
கணைபெய்தூணிகளாங்கணைக்காலடி
பிணியவிழ்ந்தசெந்தாமரைப்பீடினா
லணியினுக்கணியும்மவனாயினான். (ருஉ)

இந்துவின்னுதையத்திலங்குந்திசை
வந்ததாரகைபோலமடந்தைபால்

மைந்தன்வந்துபிறந்துசயந்தனென்
றிந்தவையகமேத்தவளந்தநாள். (ருங)

புண்ணியமுதித்துழிப்போகமெய்துமா
றண்ணல்சஞ்சயந்தனற்குமரனுயுழி
விண்ணுறைதிருவனுள்வேள்விநீர்மையாற்
பண்ணமைமொழியளோர்பாவையெய்தினுள். (ருச)

வண்டுபூமலர்ந்துழிமதுவையுண்பதிற்
றெண்டைவாயவணலம்பருகுநாளவன்
வண்டிரைவலம்புரிமணியையீன்றவர்
புண்டவழ்வேற்கனுள்புதல்வற்பெற்றனுள். (ருரு)

வேறு.

மதிதலைப்பட்டபோழ்தின்மகிழ்ந்துவைசயந்தனென்றே
நிதியறைதிறந்துவிசிநீதியாற்செல்லுநாளுட்
டுதைமலரசோகமென்னும்வனத்திடைச்சுயம்புநாமத்
ததிசயமடையக்கண்டாரரசனுக்கறிவித்திட்டார். (ருசா)

விழுநிதியெளிதிற்பெற்றவறியவன்போலவேந்தன்
எழுதருவிசோதிதன்னுலெழுந்துசென்றிறைஞ்சிவாழ்த்தி
முழுதுடனவர்கட்கீய்ந்துமுனிவர்தங்கோன்சிறப்புக்
கெழுகெனவீதிதோறுமியம்பினமுரசநின்றே. (ருஎ)

இடிமுரசியம்புமெல்லைமித்திரநகரந்தன்னைப்
படிமிசையணிந்துவைத்துப்படங்களைந்திட்டவண்ணம்
கொடிநகரணிந்துபூணுமாரமுங்குழையுமின்னக்
கடிமலர்களபமேந்திக்கணத்திடையெழுந்ததன்றே. (ருஅ)

கால்பொருகடலிற்பொங்கிக்கடிநகரடையுமெல்லை
மாலையுஞ்சாந்துமேந்திமயிலனூர்சூழப்போகிக்
காலனைக்கடிந்தவேந்தன்கடிநகர்குறுகிக்கைம்மா
மேலிழிந்திறைஞ்சிப்புக்கான்விண்ணவர்க்கிறைவனைத்தான் (ருகூ)

வானவிற்கடந்துமானபீடத்தைவணங்கிவாழ்த்தி
மானதம்பத்தையெய்திவலங்கொண்டுபணிந்துபோகி
மானமெல்லார்க்குமொத்துமலர்மலிகிடங்குபின்ன
மானமில்லாதவல்லுவனத்திடைமலர்க்கையேந்தி. (சாo)

கோபுரஞ்சுரும்புண்சோலைகோபுரங்கொடியின்பந்திக்
கோபுரங்காவுஞ்செம்பொன்மாளிகைக்குழுவுங்குன்ற

மாபுரியணைய தூபைமணிமுத்தமணலின்முத்த
நூபுரத்தரவமார்ப்பநுவலியங்கடந்துபுக்கான். (௬௧)

பத்தொடுபதினாறாயபைம்பொன்னமணியவற்றிற்
சித்திரத்தியற்றப்பட்டதிருநிலையத்தையெய்தி
மத்தமால்களிறுசெம்பொன்மலையினைவலம்வந்தாற்போற்
றொத்தொளிர்மலர்கள்தூவிப்பலமுறைவலம்வந்திட்டான். (௬௨)

நிறைமதிகண்டநீலமால்கடல்போலநீடா
திறைவனதுருவங்காணாவெழுதருவிசோதிதன்னாற்
சிறையழிபுன்விற்செல்லுங்காதலனாகிச்சீர்சால
துறவினுக்கிறைவன்றன்மேற்றுதிவகைதொடங்கினானே. (௬௩)

வேறு.

பூமாலைமுதலாயபுனையாததிருமூர்த்தி
காமாதிவென்றுயர்ந்தகடவுளென்றறையுமே
காமாதிவென்றுயர்ந்தகடவுளென்றறைந்தாலுங்
கோமானின்றிருவுருவங்கொண்டுவப்பாரரியரோ. (௬௪)

விளக்ககத்துப்பளிங்கேபோல்விரிந்தொளிமூன்றுடைமேனி
யளப்பரியவொளியகத்துளிருந்ததென்றறையுமே
யளப்பரியவொளியகத்துளிருந்ததென்றறைந்தாலுந்
துளக்கறவென்றுயர்ந்தோயைத்தொழுதெழுவாரரியரோ. (௬௫)

அமலமாயருள்சுரந்திட்டறிவரியதிருமூர்த்தி
விமலமாய்விரிந்தநாற்குணத்தலைமைவிரிக்குமே
விமலமாய்விரிந்தநாற்குணத்தலைமைவிரித்தாலுங்
கமலமீதுலவுமுனைக்காதலிப்பாரரியரோ (௬௬)

வேறு.

என்றுநின்றிறைவனையேற்றிமாதவத்
தொன்றியமனத்தனாய்உலகநாதனை
நின்றதத்துவத்ததுநீர்மையென்னெனக்
குன்றனார்க்கருளினான்குற்றமற்றகோன். (௬௭)

வேறு.

உயிருமுயிரல்லதும்புண்ணியம்பாவமுற்றுஞ்
செயிர்தீர்செறிப்புமுதிர்ப்புங்கட்டும்வீடுமுற்றத்
துயர்தீர்க்குந்தூயநெறியுஞ்சுருக்காயுணர்ப்பன்
மயறீர்ந்தகாட்சியுடையோயிதுகேண்மதித்தே. (௬௮)

அறிவுகாட்சியதாயைந்துமூன்றுமாம்
பொறியொடுட்கரணத்துயிர்ப்பாயுவின்
நெறியின்வாழும்பொருளதுசீவனு
மறியின்விட்டதுமாற்றதுமாகுமே. (௬௬)

வீட்டிநின்றதுவெவ்வினையெண்மையின்
கேட்டிலெண்குணமெய்தியோர்கேடிலா
மாட்சியாலுலகந்தொழமாற்றற
வோட்டிவைத்தசெம்பொன்னைத்தொளிருமே. (௭0)

மாற்றிநின்றதுவையகமூன்றினு
மாற்றவும்பரியட்டமொராந்தினற்
றேற்றம்வீதல்தொடார்ந்திடைவல்வினைக்
காற்றினாற்கதிநான்கிற்சுழலுமே. (௭௧)

மானுடம்புவிடாக்கதிநான்கெய்து
மீனமில்விலங்கில்லுமோர்நான்கெய்தும்
வானின்வந்துவிலங்குமனிதனு
மீனமில்லவையெய்திடுநாரகன். (௭௨)

வேறு.

நால்றியீறுநான்குநரகருந்தேவர்தாமு
மாலுறுபோகபூமிமக்களும்விலங்குமாகார்
மேலுறவானதாதித்தேவர்கள்விலங்கின்வாரார்
சாலவீசானன்மேலாரீனாவர்சன்னியாவர். (௭௩)

நீர்மரநிலங்களாவர்நின்றநால்வகையதேவர்
நீர்மரநிலங்கள்செல்லும்விலங்கொடுமக்கடம்மிற்
சீர்மையில்விலங்குமக்கடீயொடுவளியுமாவர்
நீர்மையினெருப்பிற்காற்றினின்றனவிலங்கிற்றேன்றும். ()

அருகனதுருவமில்லாரகமிந்திரத்திற்றேன்று
ரருமையிற்சாசராந்தமடைவராசீவரன்றிப்
பிரமனையந்தமாகப்பரிப்பிராசகருஞ்செல்வர்
மருவுவர்சோதிடாந்தமற்றைத்தாபதர்கடாமே. (௭௫)

நற்காட்சியுடைவிலங்குமானிடரும்வதஞ்செறிந்துங்
கற்பாதிமுதலாகிக்கற்பாந்தமுறச்செல்வர்

நற்பாலவதஞ்செறிந்தநரர்விலங்குபவணாதி
கற்பாந்தஞ்சாசராந்தங்காண்பர்முறையுளியே. (எசு)

போகவிலவிலங்குநரர்பொருந்தியநற்காட்சியரோ
நாகமுதலாஞ்சோதமீசானநண்ணிடுவர்
மோகமிச்சாப்பவணர்வந்தரர்சோதிடராவர்
ஆகுபவரனுதிசானுத்தரத்தையமறத்தெளிந்தார். (எஎ)

மீனனும்பெண்ணுநாற்காலுங்காலிலவும்
வானமேல்வருவதவழ்வகுறியிலவு
மேன்மேல்வெழ்நரகின்கீழ்ச்செல்லாமேற்செல்லு
மேனன்குவீடுதவம்விரதம்விலங்காமுறையே. (எஅ)

இந்தியமொன்றினலுலகமெங்குமா
மைந்தினனளிகையகத்துவாழுமே
யைந்திலேடிரண்டளாத்தீபமாழிமூன்
றிந்தியநான்குமூன்றிரண்டினெல்லேயே. (எகூ)

இரண்டளாத்தீவினுண்மனிதனங்கண்டங்
திரண்டநூற்றெழுபதிற்றிருவறத்தன
முரண்கெடக்குலங்களோர்மூன்றிற்றோன்றினற்
றிரண்டதீவினையடச்சித்தியெய்துமே. (அ0)

குடங்கையில்விளக்கெனக்கொண்டகொண்டதம்
முடம்பினதளவுமாமுலகமெங்குமாம்
ஒடுங்குழிப்புளாத்தரங்கில்லேயோங்கிய
விடங்கொளிற்பிளத்தலுமின்றம்மூர்த்தியால். (அக)

பொறிகளாற்புலத்தெழுபோகந்துய்ப்புழி
இறுகியவினைகளுக்கிறைவனயபின்
பிறிதொருபிறப்பினவ்வினைப்பயத்தினுக்
கிறைவனுமிதுவுயிரியற்கைவண்ணமே. (அஉ)

நாற்றமுஞ்சுவையுமூறும்வண்ணமுந்தன்மைத்தாகிப்
போற்றல்பூரித்தல்வாடலுடையதாம்புற்கலந்தான்
மாற்றிடையுயிரொப்பற்றும்வினைமுதலாகித்துன்பம்
ஆற்றவுஞ்செய்துகந்தமணுவுமாய்நிற்பதாமே. (அங)

வேறு.

நுண்மையுநுண்மையுநல்லநுண்மையும்
நுண்மையிற்பருமையும்பருமைநுண்மையு
மெண்ணரும்பருமையுமிருபருமையுங்
கண்ணுறுமணுவினுருகுங்கந்தமே. (அச)

கருமத்தின்கிழனகருமநோகமம்
பெரியவானேகமிப்பொறிகொளாதன
ஒருபொறிபுலத்தனபலபுலத்தன
கருதியவறுவகைக்கந்தமாகுமே. (அரு)

ஊறிரண்டாகிநாற்றம்வண்ணமுஞ்சுவையுமொன்றாய்க்
கூறிரண்டாக்கலாகாநுண்மைத்தாயளவைக்கெல்லாம்
பேறுதன்வழியதாகிப்பிறங்கமூவுலகமுற்று
மாறுகந்தங்கட்காதியாகியதணுவதாமே. (அசா)

வேறு.

கருமநல்லுபசயங்காயநோகமம்
மருவியபுலம்வத்துப்போகங்காரண
மிருள்வெயிலொளியொலிநிழனற்பூதமாய்த்
திரிவுடைப்புற்கலந்தானசிவனே. (அஎ)

அத்தியாயமூர்த்தியாயளவிற்றேசியா
யொத்தளவுலகினேடுலகலோகமாந்
தத்துவந்தனைச்செய்துதம்மதம்மமா
மத்திகள்செலவொடுநிலையிற்கேதுவாம். (அஅ)

அளவதாம்பொருளுலகத்துக்கில்லையேல்
அளவிலாகாயத்திலணுக்களோடுயிர்
அளவளாவின்றியேயகன்றுபோயபின்
னுளவலகட்டுவீடுலகத்தோடுமே. (அகூ)

அச்சுநீர்தேரொடுமீனையீர்த்திடா
வச்சுநீரன்றியத்தேருமீன்செலா
வச்சுநீர்போலத்தம்மத்திச்சேறலை
யிச்சையுமுயற்சியுமின்றியாக்குமே. (கூ0)

அந்தரத்தறுபத்துமூன்றதாகிய
விந்திரபடலமுநிரையமேழ்களும்

மந்தரமலைமண்ணுமற்றுநின்றிடா
வந்தமினிலையதம்மத்தியிலலையே. (௯௧)

பறவையின்சிறகொடுபாதநின்றுழி
நெறியினுற்செலவொடுநிலையையாக்குமா
லுறவிபுற்கலமிவையோடநிற்றலைச்
செறிவுறித்தம்மதம்மத்திச்செய்யுமே. (௯௨)

அளவின்றியத்தியாயமூர்த்தியாதியா
யுளவென்றபொருட்கெலாமிடங்கொடுத்துடன்
றளவின்றிநிற்பதாகாயஞ்சார்வினு
லளவிலாக்காலத்தோட்சீவனைந்துமே. (௯௩)

வேறு.

கணம்வளியுயிற்புத்தோவமிலவமேநாளிமுத்த
மினையினுள்பக்கந்திங்களிருதுவேயயனம்யாண்டு
பணையுகம்பூவம்பல்லம்பல்லமேயனந்தமீருக்
ணமுதற்காலபேதஞ்சொல்லுறிற்காலமில்லை. (௯௪)

அருடெளியார்வஞ்சிந்தைப்பழகியநிகழ்ச்சிஞானம்
பொருவறுதவத்தினனும்புனிதனுமுயிரைப்புக்கு
மருவியவினைகள்மாற்றுமாசினைக்கழுவிவீட்டைத்
தருதலாற்புனிதமாக்குந்தன்மையாற்புண்ணியமாமே. (௯௫)

சாதமேபுருசவேதம்சம்மதந்தக்காமங்
கோதமேலாயதேவர்மானவராயும்வாழும்
போதமேபொருளோடின்பம்புகழ்ச்சிமிக்கூற்றமன்னர்க்
காதியாந்தன்மைநல்கியறவரசாக்குமன்னு (௯௬)

காதியுங்கருணையின்மையாதியாற்கட்டுநின்ற
வேதனைமுதலவெல்லாம்வெந்துயர்விளைக்கும்பாவம்
ஓதியவிரண்டும்யோகினுயிரினையுறுதலூற்றுந்
தாதுறக்காய்ந்தபோழ்திற்றுனுறுநீரையொத்தே. (௯௭)

ஈனமேயதிகமீராபதிகமேசாம்பராயம்
ஞானமேஞானமின்மைநல்லவாம்புண்ணியபாவம்
தேனுலாமலங்கல்வேந்தேதவியமேபாவமென்று
தானெலாவுயிர்க்குமாகுமுற்றிவைதாம்பத்தாகும். (௯௮)

கோபனஞ்சமிதிதம்மஞ்சிந்தையீராறடக்கந்
தாபனம்பரிசைவெல்லுந்தன்மையான்முனிவனின்றால்
வேபமொன்றிலாதசிந்தைவினைவழிவிலக்கிநிற்குந்
தீபநின்றகத்தைச்சேருமிருளுண்டோசிறப்பிதாமே. (கூகூ)

நின்றவந்தத்தின்மூன்றுவினைப்புணர்வுதிர்ப்பையாக்கு
முன்புசென்றுயிர்க்கணின்றவினையின்கண்மூழ்த்தமாகி
நின்றவத்திதியினோடுபயன்செய்யுமாற்றலுய்க்கு
மொன்றியவகையினாலேகணந்தொறுமுருவத்தாரோய். (க00)

அனந்தமாமணுக்கள்கூடியங்குலியங்கம்பாகிற்
குணங்களாற்செறியக்கட்டிக்குணங்களோடாற்றள்மூன்றிற்
றணந்திடாதயங்கலோபதேசமாஞ்சமையகால
மனந்தமாலோகமெல்லாமவற்கணூருபத்தாலே. (க0க)

யோகமேபாவந்தானுமுடனின்றவுயிரின்யோகின்
வேகத்தான்மூலமாகிவிகற்பமாய்விரிந்தகந்தம்
யோகத்தாலுயிர்ப்பதேசத்தொழிலின்றியொப்பச்சென்றாற்
பாகமுந்திதியுமோகபாவத்தாற்பந்தமாமே. (க0உ)

ஏழுமூன்றிரண்டுபத்தாலெறிந்தன்கோடாகோடி
யாழிகளாகுமான்றநிலையல்லதந்தமூழ்த்தம்
மோழைமோவத்தினுக்குமுதன்மும்மையீற்றினுக்கு
மாழியனுமகோத்ததாயுமுப்பத்துமூன்றே. (க0ங)

நஞ்செனவுணாக்கும்பாவநல்வினைநாவிலிட்ட
வஞ்சுவையமிர்தம்போலவின்பத்தையாக்குமாற்றப்
புஞ்சியபந்தசந்தமூதயமோடுதிர்ச்சியாக்கி
யைந்தினாலுதயஞ்செய்திட்டப்பயனுக்குமன்னா. (க0ச)

யோகமேபாவந்தம்மாலுயிரினையார்த்தகம்மம்
யோகமேபாவந்தாம்வந்துயிரினையுற்றபோழ்தின்
யோகமேபாவந்தாமுமுயிரின்கண்விடுதல்வீடாம்
யோகமேபாவந்தம்முளுவந்தெழுமரசவென்றான். (க0ரு)

வினையறவிட்டபோழ்தில்வெடித்தவெரண்டம்போல
நினைவருங்குணங்களெட்டுநிறைந்துமேனோக்கியோடி
முனிவருமுலகமூன்றுமிறைஞ்சமூவுலகினுச்சிக்
கனகழலரசநிற்றல்கைவலமாகுங்கண்டாய். (க0சா)

உரைத்தவிப்பொருளின்மெய்ம்மையுணர்வதுநல்லஞானம்
புரைப்பறத்தெளிதல்காட்சிபொருந்தியவிரண்டுமொன்றிற்
றரித்தநல்லொழுக்கமாகுஞ்சாற்றியமூன்றுமொன்றின்
விரைப்பெர்லிதாரோய்வீட்டின்மெய்ந்நெறியாவதாமே. (கo௭)

எழுதருபரிதிமுன்னரிறைஞ்சியகமலம்போலத்
தொழுதெதிர்முழுதுங்கேட்டுப்போய்நகர்துன்னிச்சுற்ற
முழுதையும்அழைத்துமுத்திக்கரசனாய்முயல்வனென்று
பழுதிலாப்புதல்வன்றன்மேற்பாரைவைத்திதனையசொன்னான் (கoஅ)

இளமையுமெழிலும்வானத்திடுவிலினீண்டமாயும்
வளமையுங்கிளையும்வாரிப்புதியதன்வரவுபோலும்
வெளியிடைவிளக்கின்வீயுமாயுவுமென்றுவிட்டுக்
குளபகலூக்கஞ்செய்வாருணர்வினற்பெரியநீரார். (கoகூ)

கடல்களுமலையுங்கானும்வானமுங்கடல்கள்சூழ்ந்த
திடர்களுங்கயமுமாறும்நாளிகைப்புறவுந்தீராப்
படுதுயர்நரகமேழுநிகொதமும்பதேசமுன்ன
முடல்கிடந்தழிந்திடாதவிடமில்லையுணரினென்றான். (ககo)

வெருவுறுதுயரந்துய்த்துவிலங்கினுண்மயங்கும்போழ்தும்
மருவியாங்கருவின்மக்கள்யாக்கையின்வருந்தும்போழ்து
மெரியன்னரகின்மூழ்கியெழுந்துவீழ்ந்தலறும்போழ்தும்
அருகனசரணமல்லாலரண்பிறிதில்லைகண்டாய். (ககக)

இறந்தநம்பிறவிமேனுளெண்ணுதற்கரியதம்முட்
கறந்துகொண்டுயிரையுண்ணுங்காலன்வாய்ப்பட்டபோழ்தும்
பிறந்துநாங்கதிகணன்கிற்பெருந்துயருய்க்கும்போழ்துந்
துறந்திடாவினைகளன்றித்துணைபிறிதில்லைகண்டாய். (ககஉ)

காதிகணன்குவீழ்ந்தகளத்துளேகாணப்பாட்டி
லாதியாய்ப்பிறிதினையபொன்றிடுமனந்தநான்மை
யோதினோர்வகையினற்றலுயிரினன்முடிந்தமுன்னே
காதியான்மேகஞ்சூழ்ந்தகதிமொனகின்றகண்டாய். (ககங)

குற்றமோர்மூன்றுநான்குகதிகளிற்பொறிகளைந்திற்
பற்றியகாயமாறிற்பழவினைத்திரிவோரேழிற்
சுற்றியவினைகளெட்டிற்றோற்றியசுழத்திகண்டாய்
கற்றவர்கட்கவெண்ணுமாற்றிகடிகொடாரோய். (ககச)

எழுகயிறகன்றுமீரேழ்கயிறுயர்ந்திடையிலொன்றாய்
முழுவெனவிடையிலேந்தாய்முடிவொன்றாயடியிலேழா
யழிவிலாவுலகிற்றோற்றமனந்தமாம்படிப்பதேச
மெழுவெனத்திரண்டதோளாயிறந்தநாட்பிறந்தவென்றான் (௧௧௫)

என்பினைநரம்பிற்பின்னியுதிரந்தோய்ந்திறைச்சிமெத்திப்
புன்புறந்தோலின்மூடியழுக்கொடுபுழுக்கள்சோரு
மொன்பதுவாயிற்றாயவூன்பயில்குரம்பைதன்மே
லன்பறாமாந்தர்கண்டாய் அறிவினாற்சிறியநீரார். (௧௧௬)

தோன்றிமாய்ந்துலகமூன்றிற்றுயரெய்துமுயிர்கடம்மை
யீன்றதாய்போலவோம்பியின்பத்துளிருத்திநாதன்
மூன்றுலகிற்குமாக்கிமுடிவிலாத்தன்மைநல்கு
மான்றநல்லறத்தைப்போலுமரியதொன்றில்லைகண்டாய். (௧௧௭)

வேறு.

அரியதிருவறமல்லதில்லையேல்
மருவியதிருவறமொருவிமன்னனா
யுருகெழுமுடிகவித்துலகமாள்வது
பெருவிலைமணியினைப்பிண்டிக்கீவதே. (௧௧௮)

ஆதலாலருளியதுறுதியன்றெனப்
போதுலாமுடியினான்புகழ்ந்துபூமிக்கு
நாதனாய்ச்சயந்தனைநாட்டவுற்றனன்
றாதுலாமலங்கலான்றானுநேர்ந்திலன் (௧௧௯)

வேறு.

அறிவினாற்சிறியநீராரான்றவர்தாங்கள்சென்ற
நெறியினைப்பிழைக்கப்போகின்மாற்றிடைச்சுழல்வர்நீடு
மறுவிலாக்குணத்தினீர்கள்மாற்றியவரசுமேவி
நெறியினாற்கதிகணான்கினின்றயான்சுழல்வனென்றான். (௧௨௦)

வானத்திற்றுள்ளியல்லால்வருந்தினும்விரும்பல்செல்லா
மானத்தையுடையபுள்ளின்மைந்தர்கள்மறுத்துநிற்பக்
கானப்போரேற்றின்பாரங்கன்றின்மேலிட்டதேபோற்
றேனாத்தமுடியைமன்னன்சிறுவன்றன்சிறுவற்கீய்ந்தான். (௧௨௧)

மண்ணினுக்கிறைமைபூண்டான்மன்னன்வைசயந்தனென்றே
திண்முரசறைந்துபின்றைச்சிறப்பொடுசென்றுபுக்குப்

புண்ணியக்கிழவன்றன்னைப்புகழ்ந்தடிபணிந்துபொய்தீர்
பண்ணவர்படிமங்கொண்டார்பார்த்திபர்குழாத்தினூடே (கஉஉ)

மணிமுடிகலிங்கமாலைமணித்துணரனையகுஞ்சி
பணியொடுபரிந்துநின்றார்பருமதயானையொத்தார்
குணமணியணிந்துகுன்றாப்பண்ணவர்குழாத்தைப்புக்கார்
இணையிலாச்சித்திரன்னாட்டிளவரசியன்றதொத்தார். (கஉங)

ஆங்கவரங்கபூவமாதிநூலோதியார்க்குந்
தாங்கருங்கொள்கைதாங்கித்தாமுடன்சென்றுபின்னாள்
ஓங்கியவுலகமூன்றுமொருவழிப்படுக்கலுற்றுப்
பாங்கினல்வைசயந்தன்பருப்பதச்சிகரஞ்சேர்ந்தான். (கஉச)

மழைபனிவெயில்கடாந்கிமலைமிசைமலையைப்போல
வெழில்பெறநின்றபோழ்தினெழுந்தசுக்கிலத்தியானம்
பழவினைமுழுதும்பாறப்பரந்தனவனந்தநான்மை
முழையிடைப்பழகிற்றேனும்விளக்கின்முன்னிருளுண்டாமோ.

சித்தநல்லிரதஞ்சென்றதாதுக்கள்போலத்தாது
வொத்தொருவகையதாகியொளியுமிழ்ந்திலங்குமேனி
சித்திரித்தியற்றப்பட்டபடமெனத்தேவர்சென்றார்
முத்திபெற்றிருந்தகோனுமதன்முன்னர்விளக்கையொத்தான். ()

தேமலர்மாரிசுண்ணஞ்சிந்தினர்திசைகள்முட்டத்
தூமமுமெழுந்ததீபஞ்சுடர்ந்தனமிடைந்ததேவர்
தாமமுஞ்சாந்துமேந்தித்தாம்பணிந்தெழுந்துநின்று
காமனைக்கடந்தகோமான்சழலடிபரவலுற்றார். (கஉஎ)

வேறு.

உவத்தல்காய்தலாலுன்றிருவடித்தலத்தெழுந்தோர்க்
குவத்தல்காய்தலாலுன்றிருவுளத்தொன்றுநீயிலையேற்
சுவர்க்கமாநரகத்தவர்துன்னுவதுனது
தவத்தின்றன்மையோதம்வினைத்தன்மையோவருளே. (கஉஅ)

இறந்தகாதிகளருமையுமழிந்தவக்கணத்தே
நிறைந்தநான்மையின்வானவர்கிலையுடன்றளராப்
பறந்துவந்துநின்றிருவடிபரவுவதிதுவுன்
சிறந்ததண்மையோதிருவறத்தியற்கையோசெப்பே. (கஉகூ)

குற்றமொன்றிலையெனிற்குற்றமூன்றையுமுணாத்தாய்
பற்றுநீயிலையெனிலுலகமுன்பற்றாஞ்

சுற்றநீயிலையென்னிலெவ்வுயிருமுன்சுற்றம்
அற்றமும்மிலாய்முனிவர்கோனுயதோர்மாயம். (க௩0)

அறிவுநீயிலையொன்றலதெமக்கவையனேகம்
பிறவிநீயிலையாங்களப்பிறவியிற்பெரியோஞ்
செறிவதோர்கதியுனக்கில்லையெமக்குநான்கிவற்றால்
வறியைநீயெம்மையாட்கொண்டவகையிதுபெரிதே. (க௩க)

வேறு.

என்றுவானவரிறைவனையிறைஞ்சுமப்பொழுதே
யன்றுமூவுலகத்துளவமரரும்வியப்ப
நின்றதோர்படிநிருமியாவரிவையர்சூழச்
சென்றனன்றரணேந்திரன்சிறப்பொடுவிளைந்தே. (க௩உ)

வேறு.

நிழலுமிழ்ந்திலங்குமேனிநிறைமதிமுகமுஞ்செம்பொற்
கழலணிந்திலங்கும்பாதங்கமலங்கள்காமனேயுங்
குழலணிந்திலங்குநல்லார்வடிவினுற்குழையவாங்குந்
தழலுறுந்தன்மைத்தந்ததரணனதுருவுதானே. (க௩௩)

ஆங்கவனுருவங்காணுவருந்தவன்சயந்தனந்தோ
வீங்கியதவத்தினன்மேலிவ்வுருவாகவென்று
நீங்கியகாட்சித்தாயநிதானத்தைநிறையநின்முன்
ஓங்கியதுலகம்வேண்டாதுமிக்கொண்டவொருவனைத்தான். ()

அருந்தவந்தாங்கிமேருவனையவர்க்கேலுமாசை
துரும்பிடைத்தோன்றுமேலுந்துகளினுஞ்சிறியராவர்
அருந்தவனிவனிற்கண்டாயாசையில்லாமையன்றே.
பெருந்தவமாவதன்றேற்பிறவிவித்துலத்தலன்றே. (க௩ரு)

கனிந்தநெய்கவளங்கையில்வைத்துடன்கழறுவளை
முனிந்திடுங்களிறுபோல்வார்முத்தியைவிளைக்குநீரார்
மனங்கொளத்துறந்திடாதேவால்குழைத்தெச்சிற்கோடுஞ்
சுணங்கனைப்போலுநீரார்மாற்றிடைச்சுழலுநீரார். (க௩௬)

நஞ்சினையமிர்தமென்றேயுண்டவன்நயந்துபின்னை
துஞ்சுவதஞ்சிக்கான்றநஞ்சையேதுய்த்தல்போலும்
புஞ்சியபொறியின்போகமாற்றிடைச்சுழற்றுமென்று
வஞ்சிமுன்றுறந்துபோகத்தருந்தவனுசைதானே. (க௩எ)

ஐந்தலையரவின் தன்வாயைந்துடன்கவர்ந்தநஞ்சிற்
றுன்பமோர்கடிகையல்லாற்றுஞ்சினுற்றொடர்ந்திடாவா
மைம்பொறியரவந்தன்வாயொன்றினாலாயநஞ்சு
துஞ்சினுல்னேககாலந்தொடர்ந்துநின்றடுங்கள்கண்டீர். (கநஅ)

காட்சியைக்கலக்கிஞானக்கதிர்ப்பினைத்திருத்திப்புக்கான்
மீட்சியிலுலகமேற்றுமொழுக்கத்தையழித்துவைய
மாட்சிபெற்றவனைவையமதனுக்கேயடிமையாக்கும்
மாட்சித்தானிதானந்தன்னைமனங்கொள்ளார்மதியின்மிக்கார். ()

ஒழிந்தநால்வினையும்வென்றிட்டுலகொருமூன்றுமேத்த
வெழுந்துசென்றுலகத்துச்சியெய்தினன்வைசயந்தன்
அழுந்தியநிதானத்தாலேசயந்தனவ்வமரனைப்பக்கீழ்
விழுந்தனனொழிந்தவீரன்சரிதையான்விளம்பலுற்றேன். (கசo)

முதலாவது வைசயந்தன் முத்திச்சருக்கம் முற்றும்.

இ ர ண் டா வ து
சஞ்சயந்தன் முத்திச்சருக்கம்.

பஞ்சமக்கதிகட்சென்றபரமன்றன்சரமமூர்த்திக்
கஞ்சலிசெய்துவாழ்த்திச்சிறப்பயர்ந்தமரர்போனார்
வஞ்சமிற்றவத்தினன்சஞ்சயந்தனும்வணங்கிப்போகி
யெஞ்சலில்கொள்கைதாங்கியிராப்பகல்படிமம்நின்றான். (கசக)

மான்கன்றும்புலியின்கன்றுமாறியேமுலையையுண்ணும்
ஆன்கன்றும்யானைக்கன்றும்சிங்கத்தின்கன்றோடாடு
மூன்றின்றுவாழுஞ்சாதியத்தொழிலொழிந்துவுள்ளந்
தான்சென்றசாந்தியாக்குமாதவன்றன்மையாலே. (கசஉ)

எலிசென்றுநாகந்தன்மேலேறிடுநாகங்கீரி
நலியுமென்றஞ்சலில்லைமானமாவாலின்முள்ளைப்
புலிசென்றுவாங்கும்புல்வாய்க்கிடந்துழிநடுங்குமென்று
நலிவுசெய்வேடர்செல்லார்செற்றபின்னற்றவத்தால். (கசங)

ஒருவகைப்பட்டவுள்ளத்திருவகைத்துறவுதன்னால்
மருவியகுத்திமூன்றிற்சன்னைகணைன்குமாற்றிப்
பொருவிலைம்பொறிசெறித்துப்பொருந்தியாவாசமாறி
னிருவகைச்செவிலித்தாயொழுவனாச்செறியவைத்தான். (கசச)

சுத்தியோரொட்டிற்றூயானெனென்பதாம்யோகிலூற்றுப்
பத்தைபுந்தடுக்கவங்கம்பதினென்றிற்பயின்றஞானஞ்
சித்தம்பன்னிரண்டிற்சென்றுசிந்தையைமுறுக்கியிட்டுப்
பத்துமூன்றாகினின்றகிரியையைப்பயின்றிட்டானே. (கசரு)

கரமமாமாணியத்தைக்கடந்தபின்மடங்கல்போலும்
வாமமார்ந்திலங்குமாடமனேகரபுரத்தைச்சேர்ந்த
பீமமாமாணியத்திற்பெரியவனின்றபோழ்திற்
சாமமார்ந்திலங்குமேனித்தானவனொருவன்வந்தான். (கசசு)

வித்துத்தந்தனென்பவன்விச்சாதரவேந்தன்
மத்தத்தந்திபோல்பவன்வானம்வழியாக
முத்தத்தந்தமொய்குழற்சாமையோடுஞ்செல்வான்
சித்தத்தந்தமின்றிநின்றவன்மேற்சென்றான். (கசஎ)

மண்மேனின்றமாதவர்கோன்மீதொடாதாய்
விண்மேனின்றவிமானங்கண்டுவியப்பெய்திப்
புண்மேல்வேலாலேறுண்டான்போற்புகைந்தாற்றான்
கண்மேற்கண்டான்கைவலச்செல்விக்கண்ணியானே. (கசஅ)

காணநின்றவேரங்கனற்றக்கடிதோடி
மாணனேந்திமாதவர்கோனைக்கொடுவந்து
சேணாறேடும்விமானமேற்றிச்செல்கென்றான்
வேணார்வெள்ளிமலையின்வடகிழ்பரதத்தே. (கசகூ)

வந்தான்குமுதாவதியும்மரிநற்சுவணம்போற்
கந்தார்கயமும்வதிபின்வைத்தநதிமூன்றுஞ்
சந்தார்சண்டவேகையுமாயகாமத்தி
லேந்தாறுஞ்சென்றொன்றாந்தடத்தினடுவாக. (கரு0)

சிந்தைமுருக்கிவிமானஞ்செல்லாவகைநோக்கி
யந்தத்தடத்தினடுவேமுனியையவனிட்டு
முன்செய்வினையாலவனம்முனிமேன்முறுகினான்
முன்செய்வினையின்மேலேமுனியுமுறுகினான். (கருக)

மத்தத்தந்திவடிவாய்வீரன்மார்வத்துக்
குத்தக்குறுகாமறியாவோடிக்கொன்மாவாச்
சத்தித்தண்டுதாரைவாள்வேல்தடியேந்தி
யெத்தாவெறியாவிழியாத்தெழியாவிடைந்தோடும். (கரு௨)

வேறு.

வாளெயிறிலங்கவங்காந்தரவமாய்வந்துதோன்றுங்
கோளரியேறுமாகிக்குப்புற்றுக்குலுங்கத்தோன்று
நீளெரிகொளவுஞ்சுற்றுநிலம்பிளந்ததிரவார்க்குந்
தோளினைத்துணிப்பனென்றுவாளினைச்சுழற்றித்தோன்றும். ()

அழலுமிழ்ந்திலங்கும்வெவ்வாயோரியாயழைத்துக்கத்துஞ்
சுழலும்வெங்கண்ணவாயவெருவையாய்ச்சுழலவோடும்
மழையெனத்துறுகற்பெய்யாமலையெடுத்திடவந்தெய்து
முழையவானடுங்கவெல்லாமூனமுமொருங்குசெய்யும். (கருச)

இனையனபலவுஞ்செய்யவிறைவனுமிவையெலாமென்
வினையினப்பயன்களென்றேவெகுண்டிலன்வினைகண்மேலே
நினைவினைநிறுத்திநின்றானீசனுநீங்கிப்போகித்
தனதிடங்குறுகியாருஞ்சலித்தெழும்படியிற்சொன்னான். (கருரு)

பிலமெனப்பெரியவாயின்பிணமலாலொன்றுந்தின்னான்
மலைபலவிழுங்கினாலுவயிறொன்றுநிறைதல்சொல்லான்
பலபகல்பசியின்வாடிப்பதப்பின்றியத்தம்பெற்று
லலைபலசெய்துநம்மைவிழுங்கவந்தரக்கனின்றான். (கருசு)

இன்றிராதெம்மையெல்லாம்பிடித்தவனடையத்தின்னு
மின்றிராவாராமுன்னேயீண்டநமடையக்கூடி
யின்றிராவண்ணஞ்செய்யாதொழிதுமேலிழந்தும்வாழ்நாள்
என்றிராவெவற்க்குஞ்சொன்னானெரிநரகத்துவீழ்வான். (கருஎ)

எமக்கிவன்செய்தகுற்றமில்லையென்றிகழவேண்டாம்
உமக்குநானுறுதிசொன்னேனுரைத்ததும்பின்னைமெய்யாஞ்
சுமக்கலாமலைகளேந்திச்சொரிந்தவன்றன்னைக்கொன்மி
னெமக்கிவன்செய்தவின்னாப்பின்னையுமறிந்துகொண்மின். (கருஅ)

அரக்கனென்றுரைத்தமாற்றஞ்செவிப்புறத்துறலுமஞ்சாத்
திரைத்தடித்தெழுந்துசென்றுசெறிதவன்பெருமைகாணு
வரக்கனேயிவனென்றஞ்சாவருந்தவமறிவிலாதார்
வரைத்திரளேந்திச்சூழ்ந்தார்வானவர்நடுங்கியிட்டார். (கருகூ)

மின்னொடுதொடர்ந்துமேகவெடிபடவிடித்துத்தோன்றிப்
பொன்மலைதன்னைச்சூழ்ந்துபுயலினைப்பொழிவதேபோல்
மின்னும்வெள்ளெயிற்றுமேனிக்கரியவர்வெடிப்பவார்த்துக்
கன்மழைபொழியவீரன்கனகமாமலையினின்றான். (சகூ0)

வேறு.

வந்ததானவர்வரையெடுத்தெறியவுமாதவன்சலியாதே [க்கி
நின்றதன்மையைப்பொறுக்கலாதான்செய்தவெறுப்பைமாதவனே
இன்றிவன்செய்தவெவ்வினைக்கழிந்தபின்னியாவர்க்குமரிதா
மென்றுசுக்கிலத்தியானவாளெடுத்திடர்வினைபகையுடைக்கலுற்றான்

வீரன்மேற்செல்லும்வெகுளிவெந்தீயினன்விரைந்தே
மாரிபோற்பன்மலையெடுத்தெறிந்திட்டனனெறிய
வீரன்மேற்செல்லும்வெகுளியைவிலக்கிப்பன்னூறு
வாரஞ்சென்றபின்பமத்தினைப்பறித்தெறிந்திட்டான். (கசூ௨)

விண்புதைக்கவெஞ்சரமவன்பொழிந்தனன்விண்ணோர்
கண்புதைத்ததுமெய்மயங்கினர்முனிவனுமறிவன்
பண்புமெய்த்தவர்தன்மையுநூலையும்பார்க்குங்
கண்புதைக்குமோரொழுவரையக்கணத்தழித்தான். (கசூ௩)

கவ்வைநூற்றுடனெறிகனல்கடுகினன்கடுகவே
வெவ்வந்தீர்முனிவினைகளைப்பழிப்பனென்றெண்ணுப்
பவ்வநூறுநூறுவினைப்பகைநிலைதளர்த்தான்
புவ்வியோடுநின்றணியட்டிதன்னையும்புணர்ந்தான். (கசூச)

வேறு.

காரட்டமேனியானுங்கண்டவர்நடுங்கும்வண்ண
மோரொட்டுத்திசைகள்மேலுமுருமெனத்தோன்றவீர
னாரட்டியோடுங்கூடாவினைப்படைத்தலைவராய
வீரொட்டுவினையர்தம்மையெடுத்தெறிந்திட்டுநின்றான். (கசூரு)

மயக்கப்போரரசன்மக்கள்வந்தெண்மர்தம்முளொன்றிக்
சயக்கறப்பொருதுமாயக்காய்ந்தலிமாய்ந்துபின்றை
வியக்களந்தொருத்திவீழ்ந்தாண்மெல்லியாறுவரோடு [ன்
முயப்பிழைத்தொருவனின்றுநெருங்குபோர்தொடங்கிமாய்ந்தா

கல்மழைகவணிற்பெய்துங்கணைமழைவில்லிற்பெய்து
மெல்லையிலிடும்பைசெய்தலிறைவன்மேலுருமைநோக்கிப்
புல்லியார்பொருதுநால்வர்போர்முறைமூவர்வீழ்ந்தார்
மெல்லியானொருவன்வீழ்ந்துகிடந்துபின்மாய்ந்துபோனான். ()

வேறு.

விளங்குவாளெயிறிலங்ககக்குருமெனத்தெழியாப்
புளங்கொள்கார்முகிலெனவிழியாப்பொடித்தவனெழுந்தான்

றுளங்குசுக்கிலத்தியானவாடுளக்கறப்பிடியாக்
களங்கொள்சிந்தையன்பசலைநீத்திரைகளைக்கடிந்தான். (கசு அ)

கணங்கடந்தபின்கணமிசைநால்வகைக்காணப்
பிணங்குமெல்லையிலறிவினைசெறிவுறுதகைதவ
ரிணங்கிவந்தைவரிடையுறுமவரொடுமெதிர்ந்தார்
மணந்துமற்றவ்வீரொழுவருங்கணத்திலேமடிந்தார். (கசுசு)

வேறு.

காதிநாலரசழிந்தனவழிதலுங்கைவலவொருநான்மைப்
போதியாதிகள்புணர்ந்தனபுணர்தலும்புகழ்ந்துலகொருமூன்றுஞ்
சோதிமாமலர்சொரிந்துவந்தடைந்தனர்அடைதலுந்துயமொய்தி
தீதுசெய்தவன்றிகைத்தனன்றிகைத்திடாநிலத்திடைப்போய்வீழ்
ந்தான். (கஎ0)

வேறு.

பகலவனெழுச்சியிற்பவணர்தோன்றினர்
இகலிடத்தவர்களெண்டிசையுமாயினர்
முகைமலர்சொரிந்துமேலவர்கண்மூடினர்
இகலுறுத்தவன்செப்பின்மணியையொத்தனன். (கஎக)

தாமநான்றனசந்தனமெழுகினசருப்பலதான்வந்த
தூமமார்ந்தனசுடர்விளக்கெழுந்தனசொரிந்தனமலர்மாரி
வாமவாரியின்வால்வளையரியினமங்கையர்நடைமுன்னாகக்
காமவேளைவென்றிருந்தவன்றிருந்தடிபணிந்துடன்துதிசெய்தார்.

வேறு.

விதிகணன்கையுங்கடந்தனையடைந்தனைவிகலமிலொருநான்மை
மதிகணன்கையுங்கடந்தனையடைந்தனையுலகெலாமதியொன்றிற்
கதிகணன்கையுங்கடந்தனையடைந்தனையகதியைக்கதியின்றித்
துதிகணன்கையுங்கடந்ததோர்துறவுடைச்சுத்தவெம்பெருமானே.

உலகமூன்றையுமேந்திடுமாற்றலையொருகணத்துலகத்தி
னலகினீளமுமகலமுமுயரமுமணுவினலளக்கிற்கு [ய்து
மிலகுதன்மையையியல்விலெவ்வுயிர்களுமியற்றுமத்தொழில்செ
விலகினின்றிடும்விசித்திரகிரியைநல்வீரியவிறல்வேந்தே. (கஎச)

மறைகள்மாய்ந்திடவான்பொறியைந்தையுமாற்றிமற்றவற்றுலா
முறையுநீங்கமூவுலகினெடுலகின்முக்காலத்தினிகழ்வெல்லா
முறலுமோர்தலுமின்றியேயோர்கணத்தகத்தொற்றுமைமுதலாய
வறிவுநின்னறிவறிவதோரறிவெமக்கருள்செய்யெம்பெருமானே ()

பொறிகளாறிலைம்புலத்தினுற்கதியின்முக்காலத்திருபோகத்
துறவியாவையுமுற்றவின்பத்தினேடுனதின்பந்தனையொப்பித்
தறியின்மற்றவையணுவுமாகாயமுமனையவுன்பேரின்பத்
துறைதியுன்னைநீயுன்னுள்ளேயனுபவித்துலகவுத்தமநீயே. ( )

வேறு.

செறிந்தமாதவன்றிருவடித்தலத்திலிப்படிச்சிலதுதிசொன்ன
னெறிந்தகாதியினெண்குணனுயினனெய்தினனுலகுச்சிப்
பறந்துவந்துநற்பழுமரப்பறவையிற்பன்னகர்முதலானோர் [லாம்.
நிறங்கொண்மாமலர்சொரிந்துநின்றேத்தினரொத்தனவினையெல்

வேறு.

அமிர்தினுநஞ்சுகண்ணுக்கழகிதென்றுண்டவன்போற்
றிமிரமாம்வினையைநீக்கிச்சித்திசெய்தவத்திற்காக்கு
மமரனதுருவங்கொண்டமுனிவனுங்குமரன்றானுந்
தமரொனமகிழ்ந்துநெஞ்சிற்சாலவும்பணிந்துநின்றான். (கஎஅ)

வில்லொடுகணைகள்வேல்கோல்விட்டெறிபிண்டிபாலங்
கல்லொடுமரமும்வாவிதிடர்படக்கிடந்தகாண
வெல்லைசெல்லவதியாற்பார்த்திவன்செயலோவிதென்னப்
பல்லவர்நடுங்கவோடிப்பாதத்தாலுதைப்பவீழ்ந்தான். (கஎகூ)

மேகபாசத்திற்றேன்றுமின்னன்னதந்தத்தானைப்
போகபாசத்தில்வந்துபொருந்தியசுற்றத்தோடு
நாகபாசத்திற்கட்டாநடுக்கடலிடுவனென்ன
சோகபாசத்தினுவாயுடைந்தவர்துயரமுற்றார். (கஅ0)

தரணன்றன்கோபங்காணத்தானவர்தலைவனொல்லா
மரணமின்றெய்தித்தென்னுமையங்கியமனத்தராகிச்
சரணமுன்சரணமென்னச்சார்ந்தனர்பலருஞ்சோர்ந்தார்
கரணந்தம்புலங்கள்காணார்கைதொழுதிறைஞ்சிமாதோ. (கஅக)

மின்னொத்ததந்தத்திந்தப்பாவிதான்விசேயத்தின்று
முன்னைத்தன்பாவத்தாலேமுனிவனைக்கொண்டுவந்து
கன்மொய்த்ததிணிதிண்டோளாய்கயத்திடையிட்டுநம்மைத்
தின்னத்தானரக்கன்வந்தானின்றெனச்செப்பலோடும். (கஅஉ)

அறிவிலான்சொல்லைமெய்யென்றஞ்சினேமடையக்கூடி
மறுவிலாத்தவத்தின்றன்மைப்பயத்தைநாமதிக்கமாட்டாச்

சிறியயாஞ்செய்ததீமைபெரியைநீபொறுக்கல்வேண்டு
மிறைவனேயெடுத்துக்காட்டாவென்றவர்பணிந்துநின்றார். ()

புலியினைக்கண்டுபொக்கற்றடைந்தபுல்வாய்கள்போல
மெலியவருனைக்குநெஞ்சங்குழைத்துப்பாசத்தைநீக்கிப்
பலனையும்போகவிட்டிப்பாவியைச்சுற்றத்தோடும்
ஒலிகடலிடுவனென்னவுடன்றவனெழுந்தபோழ்தில். (கஅச)

நீதித்தானத்தினலெண்வினைகளைவென்றவீரன்
பாதத்தாமரைகளேத்திப்பரிவிண்ணக்கிரியைமுந்தி
யாதித்தாபத்துநாமத்தமரனின்றவனைநோக்கிக்
கோபத்தாபத்தைநீக்கிக்குணங்கொளக்கூறலுற்றான். (கஅரு)

இவன்செய்தகுற்றமென்கொலெருதுபோலிருந்தவேழை
யிவன்செய்தபோழ்திற்சாலவருள்செய்யவேணுமென்றி
யிவன்றன்னையனையாருன்றன்கோபத்துக்கிடமுமல்ல
ருவந்தின்னமொன்றுகேளாய்உனக்கின்றேனுரகர்கோவே. ()

ஆதிவேதத்துநாதன்புருவிந்தவுலகமேத்த
நீதிமாதவத்தைத்தாங்கிநிறைந்தயோகத்தினின்ற
போதினதரத்தின்வந்தார்போகவாதரத்தினர்கள்
தீதிலாக்குணத்தினர்கள்விநமியுநமியுமென்பார். (கஅஎ)

வந்தவரிறைவன்பாதம்வலங்கொண்டுவணங்கிவாழ்த்தி
அந்தமில்நிதியுநாடுமரசருக்கீய்ந்தவன்னாள்
வந்திலமடிகளின்றேவந்தனமண்ணெமக்குத்
தந்தபினன்றிப்போகோமென்றுதாழ்ந்தேத்தினரே. (கஅஅ)

வேறு.

மூன்றுலகமேத்தவருமுத்திக்கிளவரசா
யான்றவனுத்தரத்துளன்றமர்ந்தாய்நீயே
யான்றவனுத்தரத்துளன்றமர்ந்துவந்தாயை
மூன்றுலகமேத்தியவாறுசொல்லமுடியாதே. (கஅகூ)

அந்தரமொன்றின்றிவருமுத்திக்கிளவரசாய்
மந்தரத்தின்மாண்டசிறப்பமர்ந்தாய்நீயே
மந்தரத்தின்மாண்டசிறப்பமர்ந்துமண்ணுலகத்
தந்தரத்தைநீக்குமரசளித்தாய்நீயே. (ககூ0)

ஆதியோடந்தமிலாமுத்திக்கிளவரசாய்
மாதவனாய்மண்ணின்மிசையமர்ந்தாய்நீயே
மாதவனாய்மண்ணின்மிசையமர்ந்தோய்வான்புகழே
யோதியமூவுலகுமேத்தவாறுண்டோ. (கசுக)

வேறு.

பாடினார்பறவையெல்லாந்தரையின்மேல்வீழ்ந்தமண்மே
லோடுவார்தாங்களெல்லாமொருங்குநின் றுவந்துகேட்டார்
பீடினாலிறைவனின்றான்பிறங்குதார்நிறங்கொள்சென்னி
யாடுமாநாகராசனவதியாலதனைக்கண்டான். (கசுஉ)

கண்டவன்கலைகளெல்லாங்கடந்துபசாந்திசென்ற
பண்டிதனொருவனாகிப்பாதம்வாய்கைமுகத்தாற்
புண்டரீகத்தைவென்றுபுவமையைநடிப்பான்போலக்
கொண்டதோர்வேடந்தன்னாலிறைவனைக்குறுகவந்தான். (கசுங)

வந்தவன்மைந்தர்செய்கைவடிவுகண்டுவந்துவானிற்
சுந்தரமலர்கடூவியிறைவனைவணங்கிச்சொன்னான்
இந்திரற்கிறைவன்செந்தாமரையடிக்கிசைவிலாத
வந்தரம்பலவுஞ்செய்திரறிவிலீர்போகவென்றான். (கசுச)

என்றலுங்குமரர்சொன்னாரிறைவன்றன்பெருமையாமே
யொன்றிமற்றறிதுநீர்போமுங்கருமத்துமேலே
யன்றெனிலறிவிலாமையும்மைவந்தடையுமென்னார்க்
கின்றுநீரிறைவன்றன்னையீர்க்கின்றதென்கொலென்றான். (கசுரு)

அரசராய்ச்சிலரைநாட்டியரும்பொருளீய்ந்துமண்ணை
விரகினாற்கண்டஞ்செய்துவேண்டுவார்க்கீய்ந்துபோந்தான்
அரசரோநாங்களெங்களவுனிக்குவந்தோமென்ன
வுரைசெய்தபொருளிங்குண்டோவுறுவனாயிறைவனின்றால். ()

உலகமூன்றுடையகோமாற்கொன்றுமற்றில்லையென்றீர்
பலமருந்துண்டுந்தீராப்பழம்பித்தநீவிரென்ன
நிலமெலாம்பரதனாட்சியவனுழைச்செல்லுமென்றார்க்
குலகினுக்குறுதிசொல்லவும்மையோவிடுத்ததென்றார். (கசுஎ)

மறுவிலாக்குணத்துநீர்தம்வடியொடுவாக்குண்டேலு
மறிவினாற்சிறியீர்சாலவப்பநீரோலுங்கேண்மின்
பிறவினவாமற்செப்பல்பேர்ந்துழிச்செறிதல்பின்சென்
றிறைவரைப்பிரிந்திடாமையேழைகளியற்கைகண்டீர். (கசுஅ)

நாதன்பானுங்களோன்றுபெற்றுநல்லவர்களேத்தப்
போதலோடொக்குமோவிப்பூமியந்தரங்கள்பெற்று
லாதலாற்பரதனன்றித்தேவர்கோனளித்ததேனும்
யர்துநாம்வேண்டல்சொல்லோமினியுரையொழிகவென்றார். ()

என்றலுமென்னைமன்னர்மைந்தர்தம்பெருமையென்னாச்
சென்றவன்சென்னிசாய்த்திட்டிறைவன்றான்செப்பக்கேட்ட
தொன்றுளதென்பவன்போன்றுருவுகொண்டதனிநீங்கி
நின்றனன்முடியும்பூணுங்கடகமுங்குழையுமின்ன. (உ00)

முன்னந்தன்னுருவங்காட்டிமுனிவனீர்வேண்டிற்றிய
வென்னையென்றருளிச்செய்தானெழுகநீயொன்றோடென்று
மின்னுமோர்விமானமேற்றிவேதண்டமவரோடெய்தி
மன்னராய்நாட்டியிட்டான்மலைமிசையரசர்க்கெல்லாம். (உ0க)

மனமலிவடக்கிற்சேடியறுபதுக்கரசனாக
வினமியைநாட்டிப்பூரங்கனகபல்லவத்தையீய்ந்தான்
யனையவைதெற்கிற்சேடியைம்பதுநமிக்குமீய்ந்து
புனைவருஞ்சக்கவாளமிரதநூபுரத்தைவைத்தான். (உ0உ)

விஞ்சைகளஞ்சுநூறுஞ்சிறியனவேழுநூறுந்
தஞ்சமாயவர்கட்கீய்ந்துதானவர்தம்மையெல்லா
மஞ்சுநீரிவர்களாணைகேட்டுவந்திறைஞ்சிராகிற்
றுஞ்சிநீரொன்றுகொண்மின்மலையுமோர்துகளதாமே. (உ0௩)

என்றவர்க்கரசுநாட்டியிலங்குபன்னகற்குநாதன்
சென்றுதன்பவனம்புக்கான்செழுமணிமுடிவில்வீச
வன்றுதொட்டின்றுகாறுமருளும்பிப்பேற்றுவந்த
மின்றிகழ்தந்தனந்தவினமிதன்குலத்தினுள்ளான். (உ0௪)

நஞ்சுடைமரத்தையேனுநட்டுநீராட்டியாக்கி
விஞ்சியவதனைத்தாமேவீட்டுதலரிதியார்க்கு
மென்பதிவ்வுலகினின்றதற்றிதியேனீவிர்நட்ட
விஞ்சையர்குலத்துமேனிவ்வகுள்வதென்விடுகவென்றான். ()

வினையறவெறிந்தவீரன்விதேகத்துவீதசோகன்
றனையுடைவைசயந்தன்றன்மகன்எம்முன்றன்மைக்
கினையவனெவற்குமேதம்மனைத்தினுநினைத்திடாதான்
றனையிவைசெய்தான்யாவனாயினுந்தடிவன்கண்டாய். (உ0௬)

உனக்கிவன்றமையனுயபிறப்புநீயறிந்ததொன்றே
புனக்குமுனிவனுமாயபிறப்பெண்ணிலுனைக்கலாற்ரு
வினைக்குவித்திட்டவேண்டாவெகுளியைப்பெருக்கியெம்மை
நினைத்திடிற்சுற்றமன்றிநின்றவரில்லேகண்டாய். (உ0எ)

வேறு.

வருதிரைமணலினும்வளியினுற்றிரள்
சருகிலேபோலவுஞ்சாயைபோலவும்
மருவியவினைவசம்வருவதல்லதிங்
கொருவர்கணுறவொருதாளுமில்லையே. (உ0அ)

மின்னினுமிகநனிதோன்றிவீதலின்
மன்னியவுயிர்தமின்மருவிலாதன
முன்னைமூவுலகினுள்ளில்லையாகிலும்
பின்னியவுறவிதுபெரிதுமில்லையே. (உ0கூ)

உற்றவரோயுறுபகைஞராகுவர்
செற்றவரேசிறந்தாருமாகுவர்
மற்றவரோமறித்திரண்டுமாகுவர்
அற்றவரொருவரிங்காருமில்லையே. (உக0)

அரசர்களேயருநரகராகுவர்
நரகர்களேநல்லரசராகுவர்
சுரரவரேதொழுபுலையராகுவர்
நரரவரேகருநாயுமாகுவர். (உகக)

மங்கையரேமணவாளராகுவர்
தங்கையரேமறுதாயுமாகுவர்
அங்கவரேயடியாருமாகுவர்
இங்கிதுபிறவியியல்பின்வண்ணமே. (உகஉ)

சுற்றமும்பகையுமென்றிரண்டுமில்லையாம்
மற்றிந்தவழக்கினுன்மதியின்மாந்தர்கள்
பெற்றியைப்பார்க்கொடாப்பெற்றதொன்றிலே
செற்றமுமார்வமுஞ்சென்றுநிற்பரே. (உகங)

அனந்தமாம்பிறவியுளருந்தவனைப்
புணர்ந்தவும்பகைவனுயனந்தம்போலுமா
லனந்தமேயிவனுறவாகிவந்தவும்
நினைந்தபினிதுபகையுறவுநீர்மையே. (உகச)

வேறு.

எப்பிறப்பினும்பகையுனக்கிவனலன்முனியுமோருறவலன்
எப்பிறப்பினும்பகையிவற்குண்டுமற்றுறவுமக்கிவனல்லன்
இப்பிறப்பிலிப்பகையுறவுமக்குநீயிப்படியெழுவராயேற்
செப்பிறந்துழிப்பகையுறவுமக்குநீசெய்வதென்னிருவாளா: ()

வேறு.

ஐம்பரிவட்டணையத்ததில்வாழுயிர்க்
கென்பலசொல்லிநின்றிவனைநீவிடு
முன்பிவன்றனக்கிந்தமுனிக்கணுயதோர்
என்புறுவேரத்தாலிவற்கிதாயதே. (உககூ)

ஆதலால்வெகுளியேபகைநமக்கெலாந்
தீதெலாம்வினையினூற்றீய்க்கத்தீப்பெயுங்
காதலார்தம்மையுமொருகணத்துளே
யேதிலாராக்குமிஃதிகழத்தக்கதே. (உகஎ)

வேறு.

மற்றிவன்செய்ததீமைக்கேதுவாமுனிவனேமுன்
கொற்றவனுக்கிச்செய்தகொடுமைசெய்கோபத்தீயால்
வெற்றிவேலுண்டநீர்போனின்றவேரத்தின்வீடி
யிற்றவிற்பிறப்பின்வேரத்திவனிவைசெய்ததென்றான். (உககூ)

இதற்குமுன்போனநான்குபிறப்பிலிவ்வீரன்செய்கை
மதித்தவன்பிறவிதோறும்வயிரத்தால்வானத்துய்த்தான்
அதற்கெலாஞ்செய்வதென்கொலருந்தவனறிந்துவாராக்
கதிக்கணின்றுனிவன்றன்றீமையாற்கண்டதுண்டோ. (உககூ)

இன்றிவன்செய்ததெல்லாமுறுதியேயிறைவற்கென்றும்
நின்றிடும்புகழைவித்திநெடும்பழிவிளைத்துக்கொண்டா
னன்றியுமிவன்செய்துன்பம்பொறுத்தலாலகதிபுக்கா
னென்றியிவ்விரண்டின்மிக்கதொன்றுண்டோவுரகர்கோவே. ()

என்றலுமுரகராசனிறந்தநாட்பிறவிதோறுஞ்
சென்றவன்செய்ததெல்லாஞ்செப்பெனத்தேவராசன்
நின்றநின்வெகுளிவெப்பங்கருணையாலவித்துநின்று
வென்றவற்பணிந்துவாநீவினவியதுரைப்பனென்றான். (உஉக)

என்றலுநின்றகோபமெரிமழையிடருற்றாற்போ
லன்றவன்சொன்னவின்சொன்மாரியாலவிந்ததாங்கண்

சென்றதுதெளிவுசிந்தைசினவரன்சரணமூழ்கி
நின்றனன்கமலமாதித்தாபனேர்ப்பட்டதொத்தே. (௨௨௨)

நின்றவன்றன்னைநோக்கிமுனிவனுநீயுநானும்
மின்றிகழ்தந்தனோடும்விரும்பியமனத்தராகிச்
சென்றவப்பிறவிதொட்டுவந்தனமின்றுகாறு
மொன்றுமஞ்சாமைகேணீருணாக்கின்றேனுரகர்கோவே. (௨௨௩)

௨ - வது சஞ்சயந்தர்முத்திச்சருக்கம் முற்றும்.

மூன்றுவது
பத்ரமித்திரன்றன் கேள்விச்சருக்கம்.

மந்தரநடுவதாகக்குலமலையாறின்வந்து
வந்தரத்தேழுநாடாமாறுமீரேழதாகிச்
சுந்தரத்தடங்களாமிற்சூழ்ந்தவேதிகைத்துமாகி
நந்தியமதியினின்றநாவலந்தீவினுள்ளால். (௨௨௪)

பாகதுண்டத்தைப்போலும்பரதகண்டத்துச்செம்பொன்
நாகதுண்டத்தையொக்குந்தருமகண்டத்துநல்ல
போகதுண்டத்தைப்போலுஞ்சியமாபுரத்தைச்சூழ்ந்து
மேகதுண்டங்கள்மேயுஞ்சோலைநாடுண்டுதிங்கள். (௨௨௫)

சியமாபுரத்தின்றன்மைசெப்புவன்சிறிதுகேண்மோ
காயமாருகச்செல்வோர்கண்டபின்கடந்துபோகார்
தூயவாந்தலஞ்செய்குன்றஞ்சோலைகண்மாடந்தமாற்
சேயிழைமடநல்லார்போற்சித்தத்துக்கினியதன்றே. (௨௨௬)

செப்பியநகர்க்குநாதன்சியமாசேனனென்பான்
வெப்பநின்றுருதவேலான்வேந்தரைவென்றவெறறிக்
கொப்புமையின்றிநின்றூனுதலிற்கற்பகத்தையொப்பான்
துப்புறழ்தொண்டைவாயார்தொழுதெழுகாமன்கண்டாய். ()

ஊனுமிழ்ந்திலங்கும்வைவேல்மன்னவனுள்ளத்துள்ளா
டேனுமிழ்ந்திலங்குமைம்பாற்றேவிதானிராமதத்தை
வானுமிழ்ந்திலங்குமின்போல்வருந்துநுண்ணிடையாள்வாரி
தானுமிழ்ந்தமிழ்தம்பெய்தகலசம்போல்முலையினளே. (௨௨௮)

வேதநான்கங்கமாறும்புராணமும்விரிக்குஞ்சொல்லில்
தீதிலாச்சத்தியகொடனுமஞ்சீபூதியென்பான்
போதுலாமுடியினனுக்கமைச்சனய்ப்புணர்ந்துபின்னைத்
தீதெலாமகற்றிவையஞ்செவ்வியாற்காக்குநாளில். (௨௨௯)

வேறு.

பத்மசங்கநிதிக்கிடமாயது
பத்மசண்டமெனப்பகர்மாநகர்
மற்றதன்கண்வணிகனொருவன்றன்
சொற்கிடந்தகொடைக்கைச்சுதத்தனே. (௨௩௦)

மற்றவன்றன்மனைக்குவிளக்கனாள்
சுற்றநன்மையினுமஞ்சுமித்திரை
விற்குனிப்புருவத்தொளிர்வேற்கணாள்
கற்பலர்ந்ததோர்காமருவல்லியே. (௨௩௧)

அந்தியுமகல்வானுமுன்னாளினால்
இந்துவைப்பயந்தாங்கிருவரும்
மைந்தனைப்பயந்தார்மதிபோல்வளர்ந்
தந்தமில்லுவகைக்கிடமாயினான். (௨௩௨)

சுரந்தகார்முகில்போலச்சுதத்தனென்
றிரந்தவர்க்கிடர்தீரவளித்தவன்
பரந்துலாம்பெயர்பத்திரமித்தனெம்
மரந்தைதீர்த்தலினாமெனவோதினார். (௨௩௩)

கலையினின்பமுங்காமருகண்ணியர்
முலையிலின்பமுமுத்தொடுமாமணி
விலையினின்பமும்வேண்டினர்க்கீந்தெய்துந்
தலையினின்பமுந்தானவனெய்தினான். (௨௩௪)

படங்கடந்தணிதங்கியவல்குலுங்
குடங்கையேயளவுள்ளகொழுங்கணும்
வடஞ்சுமந்தெழுகொங்கையுமங்கையர்
நுடங்குநுண்ணிடைக்குண்ணுகர்வெய்தினான். (௨௩௫)

வளஞ்சுருங்கிடின்மாநிதியும்பலோ
ரளந்துகொண்டுணலும்படிதானெழு
லுளஞ்செய்தூகியமுன்பொருள்கொண்டுபோய்
விளங்குமாமணித்தீவதுமேவினான். (௨௩௬)

சென்றுசாத்தொடத்தீவினைச்சேர்ந்தவ
னென்றும்வாணிபத்தாற்பெற்றவூதியம்
மன்றன்மாதவர்கைபிட்டவல்சியா
நின்றபோகநிலம்பெற்றதொக்குமே. (௨௩௭)

புண்ணியம்முதையஞ்செய்தபோழ்தினி
லெண்ணிலாதபொருட்குவையாவையும்
நண்ணுமென்றருணுதனுரையினுக்
கண்ணலேயெடுத்தீடதுவாயினன். (உ௩அ)

மணியுமுத்தும்வைரமுஞ்சந்தனத்
துணியும்கல்லகிலுந்துகிரும்புர
மணியுந்தூரியுங்கொண்டுவருமவ
னிணையில்சியபுரமதுவெய்தினன். (உ௩௯)

மிக்கலாபத்தின்மேவியசிந்தையான்
செக்கர்வானமெனத்திகழ்மேனியான்
திக்கனைத்துந்திகழ்ந்ததோர்தேசினன்
புக்கனன்புரம்வந்தெதிர்கொள்ளவே. (உ௪0)

அந்நகரினழகும்பெருமையும்
மன்னனன்மையும்வாணிப்த்தாக்கமும்
சொன்னவைப்பிழையாமையுஞ்சோர்தர
மின்மையுங்கண்டிருக்கையுமேவினன். (உ௪க)

மற்றிம்மாநகரத்திலிவ்வான்பொரு
ளற்றமாகநல்லார்கையில்வைத்தணி
பத்மசண்டமதெய்தியோர்பாங்கிலே
சுற்றமுமழைத்தென்வழித்தொக்கபின். (உ௪உ)

பீடினுற்பெயர்ந்திங்குவந்தோங்கிய
மாடமாநகரத்திடைவாட்கைமே
லோடுமுள்ளத்தனெண்பொருள்வைப்பிடந்
தேடுவான்சிரிபூதியைநண்ணினன். (உ௪௩)

மிக்கசீர்த்தியன்வேதியன்வேந்தற்குத்
தக்கமந்திரிசத்தியகோடனென்
றெக்கதைப்புராணஞ்சுருதிப்பொருள்
வக்கணிப்பவன்மானவனல்லவே. (உ௪௪)

தக்கதொன்றிவன்கைப்பொருள்வைத்தலென்
அக்கணத்தொருபாகுடமீய்ந்தபின்
மிக்கமாசனம்வீய்ந்ததோர்போழ்தினிற்
றொக்கதன்கருமஞ்சொலமற்றவன். (உ௪௫)

வைத்தல்கோடல்வழங்கிடன்மாய்த்திட
லுய்த்தன்மாற்றலிருந்தவிடஞ்சொல
லித்திறத்தபிறன்பொருண்மேற்செலச்
சித்தம்வைத்தலுந்தீவினைக்கேதுவே. (௨௪௬)

என்றலும்பணிந்தானுக்கியாவரும்
நின்றிடாப்பொழுதென்கையினீட்டென
வன்றவன்கையரும்பொருள்வைத்தபின்
மூந்தையூர்புகமொய்ம்பனுமேவினான். (௨௪௭)

வேய்கள்வெந்துவெடித்திடுமோசையும்
பாயகள்ளிபரற்பொடியோசையும்
ஆயர்தங்குழலோசையுமாலைகள்
பாயுமோசையும்பாய்விரியோசையும். (௨௪௮)

இன்னவோசையியம்பநிலந்தொறும்
பன்னரும்பத்மசண்டமதெய்தினான்
மன்னுசுற்றமெலாம்வரக்கொண்டுபோய்த்
துன்னினான்சீயபுரமதுதோன்றலே. (௨௪௯)

வழிவருத்தமொழித்தவன்வான்கிளை
கழிவிலாதவின்பத்தையளித்திரீஇத்
தொழுதகைச்சென்றமைச்சனைத்துன்னிநின்
றெழில்பெறச்சிலவின்மொழிகூறினான். (௨௫0)

செப்பமும்புகழும்மறிவுஞ்சிதைத்
தொப்பிலாதபிறப்பையுடைத்திடாச்
செப்பினன்மணிமேன்மனஞ்சிக்குணா
வொப்பிலாதவுளைப்பதற்குக்கினான். (௨௫௧)

மாயம்பெய்தமரச்செப்பனையவன்
மாயமில்லவன்றன்மணிச்செப்பினை
மாயஞ்செய்துகொளற்குமனத்தெணா
மாயமேசிலவார்த்தையுஞ்சொல்லினான். (௨௫௨)

எங்குநீயுறைவாயதுமற்றுநீ
யெங்குப்போவதெனச்சொலவேந்தலும்
வங்கமீதுவந்தன்றுமணிச்செப்புன்
னங்கைதந்துபோம்வாணிகனென்றான். (௨௫௩)

செப்பெனச்செப்பியிட்டதெள்செப்பென
வொப்பிலாதமணிச்செப்புவைத்தது
தப்பிலீர்மறந்திட்டதோதானென
வெப்படிபித்தனேவென்றுரைத்தனன். (உ௫௪)

என்றுநானுனைக்கண்டறியேனினி
மன்றவென்கைமணிச்செப்புவைத்தனு
ணின்றசான்றுளதாகிநீகாட்டினு
லொன்றுமன்றிமற்றுன்னுடைபோகுமே. (உ௫௫)

நன்றுசாலவுநம்பினும்பேரினுக்
கொன்றவேயுரைத்தாய்செப்புவைத்தநாள்
அன்றுமின்றுமலாதுளநாளினு
ளென்றுமென்னைநீகண்டதுமில்லையே. (உ௫௬)

சான்றுவேண்டினுஞ்சத்தியகோடரா
மான்றநீரன்றியில்லையன்றியாவர்க்குந்
தோன்றிடாமைத்தரவென்றுசொன்னநாட்
சான்றுவேண்டுஞ்சடத்தையறிந்திலேன். (உ௫௭)

கணமதோன்றிலேகண்புதைத்திட்டழப்
பிணமதாகுமிவ்வாட்கையைப்பேணுவா
னணிகளாமறிவும்புகழுங்கெட
மணிகண்மேன்மனம்வைத்ததோர்மாயமே. (உ௫௮)

செய்ததன்றிசிதைத்தறத்தேறினுற்
கெய்தவஞ்சனைசெய்துபிறர்மனை
மையலான்மகிழ்வார்க்கிந்தமண்மிசை
யெய்திடாப்பழியிம்மையறியிரோ. (உ௫௯)

வேறு.

பிறர்பொருள்வைத்தல்கோடல்பிறர்தமக்கீய்தன்மாற்றன்
மறமெனவன்றுசொன்னவாய்மொழிமறந்திட்டீரோ
திறமலதுரைக்கல்வேண்டாஞ்செப்புக்கொண்டிருப்பதன்றி
முறைமுறைபித்தராகிமுடிந்தனமோகத்தாலே. (உ௬௰)

என்றலுமெழுந்தகோபத்தெறியெறியென்னவோடிப்
பொன்றுமாறடித்துநின்றூர்புறப்படத்தள்ளப்போந்திட்
டன்றவனடித்துச்செப்புக்கொண்டதற்கவலமுற்றுச்
சென்றவன்றெருவுதோறுஞ்சிலபகல்பூசலிட்டான். (உ௬௧)

சத்தியகோடனென்னுஞ்சாதியால்வேதியன்றான்
வித்தத்தாற்பெரியன்றூயனென்றியான்மிகவுந்தேறி
வைத்தவென்மணியைக்கொண்டுதருகிலன்மன்னகேண்மோ
பித்தனுமாக்குமென்னைப்பெரும்பொருளடக்குவானே. (உசூஉ)

தன்வழிக்குற்றங்காணக்கண்ணெனத்தான்செய்குற்ற
முன்னிடாதவனைக்கோபித்தூர்வயிற்கடியலுற்று
மின்னெனக்கரக்குங்கள்ளர்தங்களைவிட்டான்வீட்டி
லுன்னுதற்கரியவாயபொருளெலாமொருங்குகொண்டார். ()

பணிமணிக்கிரங்குநாகம்பணத்தையுமிழந்ததேபோற்
றுணிமணிக்கிரங்குநாய்கன்றூடுபொருண்முழுதும்போக்க
குணமணியிலாதகோடன்கள்வனென்பொருட்கொண்டானென்
றணிநகரிரங்கவாற்றப்பூசலிட்டவலமுற்றான். (உசூச)

மன்னவனதனைக்கேட்டுமந்திரிதன்னைக்கூவி
யென்னிவனுரைத்ததென்னவிறைவகேளிவனோர்பித்தன்
றன்னையானறிவதில்லைத்தருகவென்மணிச்செப்பென்னுப்
பின்னைப்போயென்னைக்கள்வனென்றிட்டான்பெரியபூசல். ()

கருமமேயிறைவகேளாய்களவின்றன்விளைவையோதுந்
தருமநூலுரைக்குநானேதகையிலாக்களவுசெய்யி
லொருவருமுலகிற்கள்ளரல்லவரில்லையென்னுப்
பெரியதோர்சபதஞ்செய்தானரசனும்பிறருந்தேற. (உசூரு)

பறையணிக்கள்வன்றன்னைப்பார்த்திபனென்னைப்போல
மறையவனென்றுகொண்டான்சபதத்தால்வஞ்சிப்புண்டு
பிறரிவன்செய்கையோராரொன்னையேபித்தனென்னக்
குறையுண்டோவென்றுபின்னுங்கூப்பிட்டான்நீதியோதி. (உசூஎ)

சிறகமைப்பறவையொப்பானுடம்பெலாஞ்செடியின்மூடிப்
பறவையைச்சிமிழ்ப்பின்வாங்கும்பாவியைப்போலுநீயு
மறையவனறிவனென்னுமாயத்துமறைந்துநின்றென்
பெறலருமணியைக்கொண்டாய்என்றவன்பேசக்கேளா. (உசூஅ)

படுமதயானைவிட்டும்பாசத்தினுயைவிட்டுங்
கொடிக்கரப்பேயன்றன்னைக்கடிக்கவென்றமைச்சன்கூறக்
கடியவர்படியிற்கண்டுசெய்தவற்கஞ்சிக்காலை
நெடியதோர்மரத்தினேர்நித்தமாயழைத்திட்டானே. (உசூசு)

தூயநல்வேதநான்குஞ்சொல்லியசாதியாதி
மேயநல்லமைச்சனென்னும்விருதுமெய்யுரைத்தலென்னுந்
தீயிலாத்தொழிலனென்றுந்தேறியான்வைத்தசெப்பை
மாயநீசெய்துகொண்டால்வரும்பழிபாவமன்றோ. (௨௭௦)

கொற்றவெண்குடையுஞ்சீயவணையுஞ்சாய்மரையுமுற்றால்
வெற்றிவேல்வேந்தனென்னநீயென்னவேறிலாதாய்
குற்றமென்றறிந்துமென்னகுறையிலென்செப்பைக்கொண்டாய்
மற்றிதோபூதிமாயமாகுமிவ்வையத்தையா. (௨௭௧)

மறம்பழிசிறுமைநிந்தைவந்தெய்தமணியைவவ்வி
அறம்புகழ்பெருமைகீர்த்தியறிவொடுசெறிவிலாய்க்கும்
பிறந்துவைத்தூறுதொட்டுவைப்பினைவவ்வுவாரைத்
துறந்திடுந்திருவென்றோதுஞ்சுருதியும்விருதுமாய்த்தே. (௨௭௨)

வடிநுனைப்பகழிநூறும்மன்னரைமாயஞ்செய்திட்
டடுமதயானைவவ்வல்அமைச்சருக்காயவஞ்சம்
வடுவிலார்தேறித்தங்கைப்பொருளினைவைத்துவந்து
மடிமிசையுறங்கும்போழ்தின்வஞ்சிப்பானமைச்சனுமோ. ()

மந்திரம்பயின்றுசாலவல்லவர்தமக்குப்பேய்கள்
மந்திரம்பூதிதன்னால்அன்றிமற்றொன்றிற்றீரா
வெந்துயர்நாகத்துய்க்கும்வேகத்துமோகப்பேயை
மந்திரப்பூதிநீயேன்றீர்த்திடாவாறிதென்றான். (௨௭௪)

நீர்மையுங்குணமுநின்றசாதியுநிறமுங்கல்விச்
சீர்மையுஞ்சாருவாகவறிந்துநீசெய்யுமாயம்
நேர்மைசெய்தரசன்கேட்டநாளின்கணிங்குமுந்தன்
கூர்மையுங்குணமுமெல்லாங்காட்டுவன்கோடவென்றான். ()

சொரிமதக்களிற்றுவேந்தன்செவியுறநாளும்வந்திப்
பரிசினாலழைப்பக்கேட்டுப்பருவரலன்றிவிட்டான்
சுரிகுழற்கருங்கட்செவ்வாய்த்துடியிடைப்பரவையல்குற்
றெரிவைமாதிராமதத்தைசித்தத்தொன்றெழுந்ததன்றே. ()

முன்புபின்பொன்றுந்தம்மின்மலைவிலாமூர்த்திநூல்போல்
பின்புமுன்பொன்றவென்றுவுரைக்கின்றான்தன்னைப்பித்தன்
என்பதொன்றன்றென்றெண்ணியவனைத்தானழைத்துராமை
ன்புநின்றுருவக்கேட்டுப்போயின்னமுறையிடென்றாள். ()

வேறு.

வாளார்தடந்தோண்மன்னர்மன்னர்தஞ்செய்கைவன்போர்
தோளால்விலக்கிமுறைகேட்டறம்போற்றலாகிற்
றாளானல்லாதிவன்றானிடுபூசனானுங்
கேளாதொழிவானிதுவென்னருளென்றுகேட்டாள். (உஎஅ)

மத்தக்களிற்றானழைப்பான்மத்தனென்னமங்கை
நித்தம்வந்தம்மரத்தப்பொழுதேநீதி
வைத்தவகையாலுழைப்பான்மத்தனல்லனென்ன
முத்தன்னபல்லாய்முறைநீயிதுகேண்மொவென்றான். (உஎகூ)

வேறு.

நீதியேபடித்தான்போலவழைக்கின்றான்வழக்குநின்ற
வேதியன்செயலுமெல்லாம்விளக்குப்போற்காட்டவல்லன்
சூதியான்பூதியோடுபொருதபின்னென்னச்சொன்னாள்
யாதுநீவேண்டிற்றெல்லாமிசைந்தனனென்றுசொன்னான். (உஅ0)

அரசனதருளினாலேமந்திரியவனைக்கூவிப்
பெரிதுபோதசதியாடிப்பின்னையொன்றைத்துடக்கா
வுரைசெய்தாள்சூதிலென்னேடொப்பவரில்லையென்றே
அரசன்மந்திரியைநோக்கவகோபெரிதழகிதென்றான். (உஅக)

வரையெனச்செறிந்தமார்பமந்திரிதன்னைவல்லே
யுரையொன்றுமுடியுமெல்லையுடைப்பணிப்போரிலென்னத்
திரைசெறிக்கடலந்தானைவேந்தயான்தேவிதன்னைப்
பொரவென்றும்பூட்டும்போழ்தேவெல்வனிப்போரிலென்றான். ()

முறைமுறைசபதஞ்செய்யவரசனுமுகிழ்முகிழ்த்துப்
பிறைநுதற்பேதைதன்பாலிருந்தனன்றேவிபின்னை
மறையவன்மார்பினாலுநாமமோதிரமுமீறாய்
முறைமுறைவென்றுகொண்டாள்மூர்ச்சியாவெய்துயிர்த்தான். ()

மயிலொடுபொருதுதோற்றவாளரிபோலமாழ்கிப்
புயலெனமேனிவேர்ப்புப்பொடிப்பவனிருந்தபோழ்திற்
குயின்மொழிவென்றுகொண்டதூட்டிச்செப்பதனைவாங்குஞ்
செயலெலாஞ்செவிலித்தாய்க்குச்செப்பிவிட்டினிதின்மீண்டாள்.

கரும்பைவென்றனையதீஞ்சொற்காவலன்றேவிதாயாம்
நெருங்கிநின்றெழுந்தகொங்கைநிபுணமாமதியும்போகிச்

சுரும்பிருந்துறங்குந்தொங்கல்அமைச்சன்றன்மாடந்துன்னி
விரும்பிவந்தடைந்தபண்டகாரிக்குவேறுசொன்னாள். (௨௮௫)

சித்திரமொத்தராமதத்தையுஞ்சீயசேனுஞ்
சத்தியம்வைத்தநாமன்றன்னைமுன்னாணையிட்டுப்
பத்திரமித்திரன்செப்புண்டெனிற்கொடுக்கப்பார்மேல்
நித்தலுமிட்டபூசல்நெடும்பழிவிளைக்குமென்ன. (௨௮௬)

மத்தகமொத்ததிண்டோண்மந்திரிசொன்னவார்த்தை
வித்தகருத்தமர்க்கும்வரும்பழிவிலக்கலாகாப்
பத்திரபாகுவல்லியாதற்கும்பழியொன்றாய
தித்திலத்தின்றுநின்றதித்திரோபேந்திரற்கும். (௨௮௭)

ஆதலாலென்கணின்றுமுளைத்தவிப்பழியும்போகி
யோதநீர்வட்டமெல்லாந்தடையின்றிப்படர்வதொன்றாய்த்
தீதிலாக்குணத்துவேந்தேசெப்பவன்வைத்துப்போயிற்றி
யாதும்யானினைந்திடாதேயில்லைச்செப்பென்றுசொன்னேன். ()

நினைத்தபின்சத்தியகோடனென்பதுநீங்கும்பின்பென்
வினைப்பயன்பெருமையாலேகொடுத்திவன்வேண்டவன்றிச்
சினக்களிற்றுழவமற்றுன்றிருவுள்ளமிருக்கவையத்
தெனக்கொன்றுமரியதில்லையினிச்செய்வதுரைக்கவென்றான். ()

மன்னவனதனைக்கேட்டுவரும்பழிவிலக்கொணாவே
யென்னுனக்கிங்குவந்தபழியொன்றுமில்லைமீண்ட
மின்மணிச்செப்பையீய்ந்தவ்வணிகனைவேண்டிக்கொள்ளென்
முன்னையென்பித்துத்தீர்த்தான்முனிவனென்றுரைக்கவன்றே. ()

மந்திரிநன்றதென்றுவரைபுரைமார்பின்நூலுந்
தன்பெயரங்கித்திட்டவாழியுந்தந்துசெப்புக்
குன்கணின்றென்னைவிட்டானொருவருமறியாவண்ண [டாள்.
மென்கையிற்செப்பைத்தாவென்றுரைத்துக்கொண்டினிதின்மீண்

மந்தித்தனோக்கத்தாலிம்மண்ணெலாம்வணக்கவல்லாய்
சிந்தித்தொன்றுரைத்துச்செய்யிற்றேவரும்பிழைக்கமாட்டார்
வந்திக்காறார்க்குமூத்தான்வைத்தசெப்பதனைவாங்கித்
தந்திட்டாள்முகத்தைநோக்காத்தாமரைக்கிழத்தியன்னாள். ()

முடிந்ததிக்கருமமென்னுமுறுவலித்தவளொடும்போய்
படங்கடந்தல்குற்பாவாய்பட்டதுபகர்கவென்ன

நுடங்குநுண்ணிடையினய்நீநுவலியநினைத்துப்போகி
மடங்கல்போலிருந்தவிந்தமந்திரிமாடம்புக்கேன். (உ௯௩)

புக்கபின்பண்டகாரிபுலியொப்பான்மெலியும்வண்ண
மொக்கநீயுரைத்தவெல்லாமுரைத்தடையாளஞ்சொல்லி
மிக்கவன்வெகுளிமார்பினாலுமோதிரமுங்காட்டித்
தக்கதொன்றுரைத்துப்பின்னைத்தந்தசெப்பிதுவென்றிட்டாள். ()

வேறு.

கறந்தபாலுமுலைபுகுநீகருதிநின்றுபெரியவர்கள்
நிறைந்தமதிபோல்முகத்தாயைநிபுணமதியென்றுரைத்தார்கள்
அறிந்தோர்சொல்லும்பொய்யாமோவரியகாலன்பாலுயிர்போ[ள்
விறந்தபொருளைக்கொடுவந்தாய்க்கென்னன்செய்வதெனவுரைத்தா

மந்தாரத்தைவந்தணையும்வல்லிபோலமன்னவனை
சந்தார்முலையாள்வந்தணுகித்தன்கைச்செப்புக்காட்டுதலுங்
கந்தார்களிற்றுவேந்தன்றன்கையைமறியாக்காரிகையை
சிந்தாமணியோநீயென்றான்சிறைவண்டெழுந்தமுடியானே. ()

வேறு.

மன்னவன்செப்பைக்காணுமற்றிவனமைச்சனுக்கு
முன்னமென்னரசுசெய்தபடியிதோவென்றுநக்காங்
கன்னமென்னடையினளைமந்திரத்தாகவென்னச்
சொன்னவவ்வணிகன்றன்னைச்சோதித்தற்குள்ளம்வைத்தான். ()

மணிச்செப்புநல்லவல்லேதருகெனவந்தவற்றிற்
குணிப்பற்றமணியைவாங்கிவணிகன்றன்மணியிற்கூட்டி
பணித்தன்னவணிகன்றன்னையழைக்கெனப்பணிந்துநின்று
னிணைத்தனவளைத்துச்சீறும்பன்னகர்க்கிறைவவென்றான். ()

கச்சட்டமுலையினளும்வேந்தனும்வணிககண்ட
விச்செப்பிலுன்செப்புண்டேலியம்புநீயென்னலோடும்
மெய்ச்செப்புமொழியினனும்வேந்தனைவணங்கிப்பாரா
விச்செப்பென்மணிச்செப்பென்றானெரிமணிகடகக்கையான். ()

உரைத்தவன்றன்னைப்பாராமன்னன்முன்னிவனையோரும்
பிரத்தயமின்றிநின்றார்பித்தெனப்பித்தனென்ன
உரைத்தவென்னரசுசென்றநிலத்தவருற்றதுன்பம்
மரக்கலத்தவற்குநாய்கன்வாரியின்மடிந்ததென்றான். (௩00)

பத்திரமித்திராவுன்சித்திரமணிச்செப்பிட்ட
முத்திரையுன்னதாகில்வைத்திடல்கொண்டுபோகென்
றத்திறமுற்றியானைமத்தகமறுக்குமன்ன
முத்திரையென்னதன்றுவித்தகரிட்டதென்றான். (௩0௧)

வேறு.

திறவெனத்திறந்துபார்த்தி
டிறைவமற்றென்னவல்லா
வறிவருவிலையகற்கண்
ணிறையவுங்கிடந்ததென்றான். (௩0௨)

வேறு.

மண்ணின்மிக்கவின்மணியைநின்மணியோடுகலக்கும்
அண்ணல்தானுளனேவறியாதுநீயுரைத்த
யெண்ணிலாவிலைமணித்தன்மையைப்பார்க்குங்
கண்ணுமோடினகாணெனக்காவலனுரைத்தான். (௩0௩)

மத்தனல்லவன்கருமத்தின்வரும்பயன்றெரிந்து
சித்தம்வைத்தலாற்செய்வதோர்தொழில்வையத்தில்லை
வைத்தவென்மணிமறந்துவைகலுமழைத்தனெற்
பித்தனென்றென்னையழைத்தவர்பிழைத்ததென்பெரியோய். ()

வேறு.

இப்பரிசுரைத்துச்செப்பிலிட்டமாமணியையெல்லாஞ்
செப்பரும்பரிசினீக்கித்தன்செழுமணிகையிற்கொண்டான்
மெய்ப்பரிசறிந்ததன்மைகைக்கொண்டுபிறிதுவிட்ட
வப்பிரமத்தனுயமுனியைப்போல்வணிகனின்றான். (௩0௫)

மணியிவைசிறிதுபூதிவைத்தனவாகுமுன்னைக்
குணியிலான்செய்தகுற்றந்தீரநீகொண்டிடென்ன
வணியிலாமகளிர்போலப்பிறன்பொருள்கொண்டுவாழும்
பணியிலேனரசவென்றான்பருமணிவயிரத்தோளான். (௩0௬)

மன்னியசுற்றமில்லான்பொருளினைவலிதின்வாங்கி
யின்னிலவனைப்பினென்றுநின்றிடும்பழியுமெய்தி
மின்னினுங்கடிதுவீயும்யாக்கையுங்கிளையுமோம்பன்
மன்னவப்பெரியதொன்றோமக்களிப்பிறவிக்கென்றான். (௩0௭)

தானத்திற்குரித்துமன்றுதன்கிளைக்கீயிற்சால
வீனத்துளுய்க்குநிற்குமெச்சத்தையிழக்கப்பண்ணும்

மானத்தையழிக்குந்துய்க்குமற்றவர்க்கடிமையாக்கு
மூனத்துநரகத்துய்க்கும்பிறன்பொருளுவக்கின்வேந்தே. (௩௦௯)

பேறிழவின்பந்துன்பம்பிணிபகைபிறப்பிவற்றின்
ஆறுந்தாமுன்னஞ்செய்தவினைவழிவருவதல்லால்
வேறொன்றலாவதுண்டோவினையென்பானின்றதொன்றாய்
மாறின்றாய்நின்றதல்லான்மற்றிவன்செய்ததுண்டோ. (௩௧௦)

நீதிநூலோதுவான்போனின்றவனன்றுசொன்ன
தீதிலாமொழியைக்கேளாத்திண்டிறற்சீயசேனன்
வேதவாணிகனேநீதிநூல்கண்டவேந்தனேவிக்
கோதிலாக்குணத்தினனென்றுவந்தனனிருந்துசொன்னான். ()

வையகம்பெறினும்பொய்யாவாக்கினன்மரணம்வந்தா
லுய்யலாமருந்தென்றாலும்பிறன்பொருட்குள்ளம்வையான்
றையலாய்தருமநீதிசமநிலைதயாவொழுக்கம்
வையகந்தன்னிலிந்தவணிகனாய்வந்தவென்றான். (௩௧௧)

என்றலுந்தேவிவென்றவாதிதன்பக்கத்தார்போல்
நின்றவளுவகைநெஞ்சினிறைந்தனளாகநீதிக்
கொன்றவப்பூதிதன்பாற்கோன்செட்டிப்பட்டந்தன்னை
மன்றலாந்தொங்கல்வேந்தன்வணிகனுக்கீய்ந்துசொன்னான். ()

மணிகளும்பொன்னுமுத்தும்வயிரமும்பிறக்கும்பூமி
மணிகளும்பொன்னுமுத்தும்வயிரமுமடக்குமாடம்
மணிகளுமுத்தும்பொன்னும்வயிரமும்வடித்துச்செய்த
வணிகளுந்துகிலுஞ்சந்துமல்லவுங்கைக்கொளென்றான். (௩௧௩)

வேறு.

இடம்பெரிதுடையவர்பழியில்காரியந்
தொடங்கியமுடித்தலால்விடார்களென்பது
மடங்கல்போனின்றிந்தவணிகன்மந்திரி
யிடைஞ்சலைக்கிடந்திதுமுடிந்ததென்றனர். (௩௧௪)

வேறு.

மத்தமால்களிறுபோகும்வழியினைக்குழித்துமாணப்
பொய்த்தறைசெய்துவீழ்த்துப்பிடித்திடும்புலையன்போலச்
சத்தியகோடனென்னுஞ்சடத்தினற்றன்னைத்தேறி
வைத்திந்தவையத்தோடும்வஞ்சித்தானென்னையென்ன. (௩௧௫)

கோபியாவரசனீதிக்குறைபடாவகையினான்மா
பாவியாமிவனைநூலின்படியினாற்கடிகவென்ன
நாபிகாலத்தினிப்பானடக்கின்றவழக்குநூலின்
தீபிகாமனத்தினார்கள்செய்வதுதெரிந்துசொன்னார். (௩௧௬)

மடித்துவாய்கடித்துமல்லர்முப்பதுசவட்டைத்திண்டோ
ளெடுத்திடாவடித்தெருத்தின்சாணாகமுத்தாலந்தீற்றிப்
படைத்தமாடனைத்துமாங்கொண்டிப்பதிநின்றும்போக
வடித்தலாந்தெண்டமென்றாராசனப்படிசெய்கென்றான். (௩௧௭)

குனிசிலைக்கடவுள்போலுங்கொற்றவன்குறிப்பைநோக்காப்
பனையின்வெஞ்சிலைகளேந்திப்பாடிகாப்பார்கள்சூழ்ந்தார்
நினைவரும்பெரியசெல்வம்நினைப்பதன்முன்னைநீறாய்ப்
பனியின்முன்மலர்ந்தசெந்தாமரைத்தடம்போன்றதன்றே. ()

மலைமிசைச்சிங்கவேற்றைவருத்துமான்கன்றுபோன்ற
மலைமிசைச்சவட்டையிட்டுச்சாணாகந்தீற்றியிட்டார்
புலையர்சென்றவனைச்சூழ்ந்துபோகெனவுரைப்பச்சுற்றம்
அலைகடற்கவிழ்ந்தநாவாயவருற்றதுற்றதன்றே. (௩௧௯)

முன்பகற்றேவனென்றுமொய்த்துடன்புகழப்பட்டான்
பின்பகற்பேயனென்றுபின்செலாதிகழப்பட்டான்
அன்புறுமிளமைமூப்பிலரிவையர்க்கொருவனொத்தான்
முன்புதான்செய்துவந்தவிதிமுறையுதையத்தாலே. (௩௨0)

மாயத்தாற்செப்பைவவ்விமந்திரிவணிகன்றன்னைப்
பேயொத்துச்சுழலப்பண்ணிப்பெருந்துயர்முன்னஞ்செய்தான்
மாயத்தாற்செப்புத்தன்கைவாங்கவும்பட்டுப்பின்னைப்
பேயொத்துச்சுழன்றுசாலப்பெருந்துயர்தானுமுற்றான். (௩௨௧)

மணியினால்வணிகனுக்கும்மந்திரிதனக்கும்வந்த
தணிவிலாத்துயரம்பற்றின்தன்மையைச்சாற்றக்கண்டும்
பணிவிலாத்துயரமாக்கும்பற்றினைப்பரியுநல்ல
துணிவிலாதார்களன்றேதுயரங்கட்கிறைவராவார். (௩௨௨)

பற்றினைப்பற்றினாலேபற்றெனப்பற்றினாரைப்
பற்றுத்தானிடும்பைநீருள்பழியட்டந்தன்னையாக்கும்
பற்றினைப்பற்றிலாமைபற்றெனப்பற்றினாரைப்
பற்றுவிட்டிடும்பைநீருட்பரியட்டமொழிக்குங்கண்டீர். (௩௨௩)

வேறு.

மோகமேபிறவிக்குநல்வித்தது
மோகமேவினைதன்னைமுடிப்பது
மோகமேமுடிவைக்கெடநிற்பது
மோகமேபகைமுன்னையுயிர்க்கெலாம். (௩௨௪)

மோகமேதிரியக்கிடையுய்ப்பது
மோகமேநரகத்தில்விழுப்பது
மோகமேமறமாவதுமற்றவும்
மோகமேயறமாசறநிற்பதும். (௩௨௫)

மோகமேநிறையந்நிறையாயதும்
மோகமேமூவுலகின்வலியதும்
மோகமேமுனிமைக்கிடையூறதும்
மோகமில்லவர்நல்லமுனிவரோ. (௩௨௬)

மேகவில்லொடுவீய்ந்ததுபோலவே
போகமுங்கிளையும்பொருளுங்கெடச்
சோகமுந்துயருந்துணையாகவன்
னேகநின்றவரின்னவியம்பினர். (௩௨௭)

அங்குநின்றவனேகலுமாயிடைச்
சங்கைதன்முறையென்றுதழுவலு
மெங்கும்வந்திருளாயதிடர்க்கடல்
நுங்கினுநெடியுநெடிதாயதே. (௩௨௮)

மதலைமாடமுமன்னியசெல்வமுங்
குதலைமென்மொழியாரையுநீத்தவன்
விதலைகொண்டுவிழுந்தனன்வேந்தன்மேல்
முதலதாகியவேரமுளைத்ததே. (௩௨௯)

என்றுதானிவையெய்துவதென்றெழா
நின்றவாதத்தினீளியவாயுவுங்
குன்றவந்துவிலங்கினுளாயுக
மன்றுகட்டியதாயுவுமுற்றதே. (௩௩0)

வேறு.

மிக்குநின்றெறிவிளக்குவீந்துழி
யக்கணத்திருளடையுமாறுபோல்
மக்களாயுகமாய்ந்தபோழ்தினே
திக்கவாயுகஞ்சென்றுதித்ததே. (௩௩௧)

ஆயுவக்கதியைம்பொறியுவ
வீயுநீசகோதமுநின்றுதித்திடப்
போயமன்னவன்பொன்னறையர
வாயினன்பெயரகந்தனுகுமே. (௩௩௨)

அரசன்மேற்கறுவிப்பொருளாசையின்
மரியமாயத்தின்மந்திரிமற்றிந்த
திரியக்காயினன்தீயவிச்செய்கையை
மருவுவாருளரோமதிமாந்தரே. (௩௩௩)

வேறு.

அளவிலாநிதியைவிட்டுப்பிறன்பொருளதனைமேவல்
களவுதானிரண்டுகூறுமியல்புகாரணங்கடம்மால்
அளவிலாப்பொருளுண்டாயுபிறன்பொருட்கிவறலாதி
களவுதான்கடையதாகும்கைப்பொருளற்றவர்க்கே. (௩௩௪)

இயல்பினுங்களவினர்கட்கினியவாஞ்செய்கையொன்று
முயலுருமனத்தராகிவாங்குவனிறையவாங்கிக்
குயலராய்க்கொடுப்பவெல்லாங்குறையவேகொடுத்தலாகு
முயலுருரிவைசெய்யாதேயொருபகலொழியுமேலும். (௩௩௫)

மீன்சென்றநெறியைப்போலும்விரும்பினர்வேட்கையாதி
தான்சென்றமனத்துமள்ளர்தாம்பொருளதனுக்காகக்
கான்சென்றநெறியின்மன்றிற்சுருங்கையிற்களவுநூலிற்
கூன்கொண்டுகொள்ளைகொள்ளகுறுகல்காரணக்களவுதானே. ()

பொருளினைப்போக்குங்கீர்த்திதன்னொடுபுகழைப்போக்கும்
அருளினைப்போக்குஞ்சுற்றந்தன்னொடுமாயுப்போக்கும்
பெருமையைப்போக்கும்பேறுதன்னொடுபிறப்பைப்போக்குந்
திருவினைப்போக்குந்தேற்றந்தன்னொடுசிறப்பைப்போக்கும். ()

அங்கத்தைக்களைந்துவீழ்க்குமருஞ்சிறைப்பிணியையாக்கும்
வெங்கயத்தடியின்வீழ்க்கும்வென்னுனைக்கழுவினேற்றுந்
தொங்குவித்தொழியுந்தூண்டிற்றூலினையுரிக்கப்பண்ணுங்
கொங்கையைக்குறைக்குமங்கைகண்ணினைக்குடையப்பண்ணும்()

விழுந்தெழுநரகத்துய்க்கும்வெருவுறுவிலங்கிலாக்கு
மழிந்ததிக்குலத்திலுய்க்குமட்டுணுவகத்துளாக்கு
மிழிந்ததஞ்சுற்றத்தார்க்கும்பிச்சையுமிடாமைகாக்குங்
கழிந்தநோயுடம்பையாக்குந்தாயருங்கடியப்பண்ணும். (௩௩.௬)

ஆதலாற்களவதாகாவிருமைக்குமொருமையொக்கத்
தீதெலாமாக்குமென்றுதேறநல்லறத்தைச்செப்பும்
பூதிதானுதியாயகளவினைப்பொருந்திப்பொல்லா
நீதியாலனம்மச்சுநீங்காச்செல்வமுங்கிளையுநீத்தான். (௩சo)

மந்திரிவடிவ்வெல்லாமன்னவன்மனத்திவ்வாறு
சிந்தியாவியந்துநோக்காத்தேறுவதாரையென்னு
வந்தணனறமுளானையவன்பதத்தமைச்சனுக்கி
மந்தரம்போலநின்றுமண்ணினைத்தாங்குமந்நாள். (௩சக)

திரைசெறிந்திலங்குமாழிப்படிமன்னன்றேவியோடும்
உரைசெறிந்திலங்குகீர்த்தியுவகையினேடச்செம்பொன்
வரைசெறிந்திலங்குதிண்டோள்வணிகன்மற்றொருநாள்வாடா
விரைசெறிந்திலங்குநீங்கவனஞ்சென்றுவிரகிற்புக்கான் (௩சஉ)

விமலகாந்தாரமென்னும்விலங்கலையிலங்கவேறி
யமலமாயிலங்குஞ்சிந்தையருந்தவன்வரதமாவின்
கமலமாயிலங்கும்பாதங்கைதொழுதிறைஞ்சிவாழ்த்தித்
திமிரமாம்வினைகடீரத்திருவறமருளுகென்றான். (௩சங)

அறிவுநற்காட்சிகாந்திசாந்திநல்லடக்கமைந்து
பொறிகளிற்செறிவுகுத்திச்சமிதியும்பொருந்தியாசை
வறுவியமனத்துத்தண்டங்காரவஞ்சனைவீய்ந்த
வுறுதவனுரைக்கலுற்றானுவந்தவன்கேட்கலுற்றான். (௩சச)

கருணையுமறிவுமுண்டியுறையுளுமீதல்காம
மருளிலாவிறைவன்பாதஞ்சிறப்பொடுவணங்கன்மைய
லிருளறத்தெளிதல்வென்றோர்க்கிறைவனதறத்தைச்சில
மருவினின்றொழுகன்மாற்றீற்சுழத்திநீர்மருந்திதென்றான் (௩சரு)

வதங்கள்பன்னிரண்டுமேவிவையகத்துயிர்கட்கெல்லா
மிதஞ்செய்துவருந்தில்வெங்கனலிடுவெண்ணெய்போன்றிரங்கிச்
சிதைந்தின்னுதன்செய்தார்க்குமினியவேசெய்துசிந்தை
கதங்கடிந்தொழுகனல்லோர்கருணையைக்கொடுத்தலாமே (௩சசு)

இங்கியமூடமென்னுமிருளினைத்துரந்துகொண்டு
வெங்கதிர்போலத்தோன்றிமெய்ம்மையைவிளக்கிநிற்கு
மங்கபூவாதிநூலினறிவினைச்செறியச்செய்தன்
மங்கலத்தொழிலினார்க்குமதியினைக்கொடுத்தலாமே. (௩சஎ)

உடம்புணர்வொழுக்கங்காட்சியுவகைநல்லின்பம்வாணான்
விடங்கொளிவீரம்வீடுமெய்த்தவந்தருமஞ்சில
மடங்கலுமீய்ந்தானுண்டியீய்ந்தவனதனால்வையத்
துடம்புகொண்டவர்கட்குண்டிபோல்வதோருதவியின்றே. ()

ஊனொடுதேனுங்கள்ளுமின்றிநன்றாயவுண்டி
தானுவந்தெவர்க்குமீதல்தானமாந்தானுமூன்று
மூனுனுங்கொடுமையார்க்குமுடன்பட்டுமூனுணர்க்கு
மானமாதவற்குமீதல்வரிசையாற்பெருகுமூன்றும். (௩௪௯)

புலைசுண்பானுண்டவுண்டிவலியனாலுயிரைப்பொத்தின்
மலையினும்பெரியவுண்டிவலியனாலுயிரைச்சாலு
நலியுமேநரகத்தாழ்த்துநடலைகள்படுமென்றாலிப்
புலைசுண்பார்க்குண்டியீதன்றுமாமன்றுமாமே. (௩௫0)

அகதிகளறத்தினின்றாரரும்பிணியாளர்மூத்தார்
குகதிகள்குருடர்மூகர்கொலைத்தொழின்மனத்துமில்லார்
அகல்கையினேந்தினோர்க்குமருளினாலீய்ந்தவுண்டி
மகரிகைமலிந்தபூணோய்மத்திமதானமாமே. (௩௫௧)

உறவியைப்பெரிதுமோம்பியொழுக்கத்தைநிறுத்தியுள்ளம்
பொறிவழிப்படர்ச்சிநீக்கிப்பிறர்க்குநன்றாற்றிப்பொய்தீர்
நெறியினைத்தாங்கிநீங்காவீட்டின்பம்விழைதல்செய்யு
முறுதவர்க்கீய்ந்ததெல்லாமுத்தமதானமாமே. (௩௫௨)

ஊனொடுதேனுங்கள்ளுமுவந்தவைபிறவுமீதற்
றானமென்றுரைத்துத்தம்மைக்கொன்றுயிர்க்கூனையீவார்
தானமுந்தயாவுமெல்லாந்தாங்கண்டவாறுகாண்க
வீனமென்றாலுங்கேளார்இயல்புவேறுலகத்தாரே. (௩௫௩)

அனகமாயனந்தமாயகுணம்புணர்ந்தார்வமாதி
தனையிலாதியல்பினின்றான்றன்மையைத்தன்கண்வைத்து
நினைதலுக்கேதுநல்லசிறப்பதுவினையைநீக்குங்
கனலிசேர்கனகந்தன்கண்காளத்தைக்கழற்றும்வேந்தே. (௩௫௪)

இறைவனுமுனியுநாலுமியாதுமோர்குற்றமில்லா
நெறியினைத்தெளிதல்காட்சியாமதுநிறுத்துவீட்டின்
னிறுகுமெண்மயமும்மூடமாறுதீவினயமின்றி
நெறிவிளக்குறுத்தலாதியெட்டங்கநிறைந்ததென்றான். (௩௫௫)

வே று.

பெரியகொலைபொய்களவுபிறர்மனையிலொருவல்
பொருள்வரைதன்மத்தமதுபுலசுணலிநீங்கல்
பெரியதிசைதண்டமிகுபோகம்வரைந்தாடல்
மரியசிகைநான்குமிவைமனையறத்தார்சிலம். (ந௫௬)

ந-வது பத்திமித்திரன்றன் கேள்விச்சருக்க முற்றும்.

நான்காவது

பூரணசந்திரன் அரசியற்சருக்கம்.

அமிர்கானொளியின் முனியறவுரைசென்றெறிப்பத்
திமிரமெனநின்றவினைதீர்த்தெழுந்தமதியிற்
குமுதமெனமலர்ந்துவந்தமாற்றுவனதொண்டே
யமலனடிமனகமலத்தருக்கனில்வைத்தெழுந்தான். (ந௫எ)

எழுந்தமுனியிருகமலபாதந்தொழுதேத்திச்
செழுங்கனகமாடமிசைசீயபுரம்புக்கு
முழங்கியெழுமுகிலிற்பொருண்முழுதும்வறியோர்க்கு
வழங்குமனத்தழுங்கியுரைத்தாளவன்றன்மாதா. (ந௫அ)

குலம்பெரியகுணமறிவுவடிவுகுடிப்பிறப்புப்
பொலங்கையுடையவர்க்கலதுபுகழ்ச்சியினையடையார்
இலங்குமனையாளும்பொருளில்லவிடத்திகழும்
அலங்கல்வரைமார்பபொருளாதலினியழியல். (ந௫௯)

காதன்மிகுதாய்மொழியிலாதரமொன்றின்றி
போதரவெஞ்துபொருள்முழுதுமவனியக்
கோதமெரிபோன்றவனைகொல்லும்படிச்சூழ்ந்து
தீதுதனக்காக்கிமனஞ்சிதைந்தொழுகும்வழிநாள். (ந௬0)

ஆங்கவன்றன்சொன்மறுத்தவழற்றியினும்பொருள்கள்
நீங்கவெழுமார்த்தத்தினுமவ்வுடம்புநீத்து
பூங்குழலியோங்கியவதிங்கவனம்புக்கு
வேங்கைமகவாய்மகன்கண்வேரத்தொடும்பிறந்தாள். (ந௬௧)

வே று.

அருளினலுயிர்கட்கீந்தவப்பொருணிமித்தமாக
வெருவினுள்மயங்கிவாழும்விலங்கலவ்வேழைதோற்றம்
இருளிலாதேவர்கோயிற்கிட்டதோர்விளக்கின்மேலே
மருளினல்விட்டில்பாய்ந்துமரித்ததேபோல்வுதன்றே. (ந௬௨)

அப்பச்சக்கரணமாயகோபலோபத்தினாலே
செப்பட்டபிறவியாளவ்வனத்திடைதிரியுநாளுட்
கைப்பட்டபொருளையெல்லாங்கருணையாலீயுமந்த
மெய்ப்பட்டபுகழினானவ்வனத்திடைவிரகிற்புக்கான். (௫௬௩)

காரணந்தானென்றின்றிக்கருமத்தின்பெருமையாலே
வாரணிந்திலங்குகொங்கைமங்கையரோடவ்வள்ளல்
தாரணிந்திலங்குஞ்சோலைத்தன்னுளேதிரியும்போழ்தின்
வேரநின்றிலங்குஞ்சிந்தைவேங்கைநின்றதனைக்கண்டான். ( )

கண்டவன்பெருமெல்லைக்கடியதோர்பசியினாலு
மெண்டிசையவருநிற்பவெழுந்தவேரத்துமோடி
விண்டெரிவிளக்கின்மேலேவிட்டில்பாய்ந்திட்டதேபோல்
தண்டிவர்தோளினான்மேற்றாய்ப்புலிபாய்ந்ததன்றே. (௫௬௫)

வேபியாப்பசியின்வாடிவிழுமுயிர்க்கீயக்கண்டுங்
கோபியாவஞ்சநெஞ்சிற்கருணையொன்றின்றிச்செத்துந்
தீபியாப்பிறந்துநின்றுமகனையுந்தின்றவிந்தப்
பாபியைப்போலகில்லார்கருணையைப்பயில்கவென்றார். (௫௬௬)

பிறவிகளனந்தந்தம்மிற்பெற்றதாய்சுற்றமல்லா
லுறவிகளொன்றுமில்லையூனினையுண்டுவாழ்வார்
மறமலிமனத்தராய்த்தம்மக்களைத்தின்கின்றாரொன்
றிறைவனையிவளுணாத்தாளீன்றுதன்மகனைத்தின்றாள். (௫௬௭)

கருதினார்கருதிற்றெல்லாங்கருணையாலீயுங்கற்பத்
தருவின்மேலுருமுவீழச்சாய்ந்ததுபோலமாய்ந்து
பருமதயானைவேந்தன்றேவிமேற்பற்றுளத்தாற்
றிருமகளனையராமதத்தைதன்சிறுவனானான். (௫௬௮)

கண்ணுடைவெளுப்பெலாம்போய்முகத்திடைமரக்கக்காணு
நுண்ணிடைதோன்றவிம்மாக்கண்முலைகறுத்துநோக்கிப்
பண்ணிடைக்கிடந்ததீஞ்சொற்பவழவாய்பாண்டுவாக
மண்ணிடைத்தோன்றமைந்தன்மதிபெற்றதிசையையொத்தான்.

வேயெனத்திரண்டமென்றோண்மெல்லியலோடும்வேந்தன்
ஆயிரக்கிரணன்சென்றதிசையொடுவானையொத்துப்
பாயிரும்பரவைஞாலம்பைம்பொனலாத்தினமஞ்
சேயசந்திரனென்றேகைத்திசைதொறும்போக்கினானே. (௫௭௦)

நலிவிலாத்தடத்துணின்றநளினம்போல்வளர்ந்துநண்ணூர்
குலமெலாமெலியவாங்குங்கொடுஞ்சிலைப்பயின்றகுன்றுக்
கலையெலாங்கடந்துகாமங்கனிந்தனகமலமொட்டின்
முலைநல்லார்சேர்த்தினர்கண்முருகுண்ணும்வண்டையொத்தான்.

சிலமயில்சூழ்ச்செல்லுஞ்சிங்கப்போதகத்தைப்போலக்
கலைபயிலல்குலாருங்குமரனுங்கழுமுநாளுட்
கொலைபயில்களிநல்யானைக்கொற்றவன்றேவிதன்பால்
மலைமிசைமதியம்போலமைந்தன்மற்றொருத்தன்வந்தான் (௩௭௨)

இரவலரொன்னமுன்னீரிடர்கெடவெழுந்தவந்தப்
புரவலன்குமரனுமம்பூரசந்திரனென்றூர்கள்
கரைபொருகடலந்தானைக்காவலகுமரர்வானத்
திரவியுமதியும்போலவிருநிலத்தியலுநாளில். (௩௭௩)

வேறு.

வாரிசூழ்வலையந்துயரொய்திடிற்
றூரியானதுதானுடனெய்திடு
மேரணிந்துலகின்புறினின்புறும்
மாரிபோற்கொடைவண்கையமன்னனே. (௩௭௪)

பொன்னுநன்மணியும்புனைபூண்களும்
மன்னும்பொன்னறைமற்றொருநாள்புகப்
பன்னகம்முன்னமாயவன்பார்த்திடா
மின்னின்வேரத்தின்வீழ்ந்தெயிறூன்றினன். (௩௭௫)

பையரவின்விடத்தேடுபார்மிசை
மையலுற்றுவிழுந்தனன்மன்னவன்
வெய்யவன்னரவத்தொடுமேதினி
வையனையவிழுந்ததுபோலவே. (௩௭௬)

கல்லெனேசைகடலுடைந்திட்டென
வெல்லையின்றியெழுந்தியாவருஞ்
சொல்லுமெய்யுமறந்தனர்சோர்ந்தனர்
மல்லியங்குபுயத்திறண்மைந்தரும். (௩௭௭)

இராமதத்தையுமின்னுயிரன்பினல்
விராமமுற்றதோர்மஞ்ஞையின்விழ்ந்தனள்
கராமலிக்கடல்சூழ்ப்படிக்காவலன்
இராமையாற்பகலுமிரவாயதே. (௩௭௮)

கருடனாயவன்காலிலிகட்கெலாங்
கருடதண்டனென்பானக்கணத்திலே
மருவிமந்திரமோதவுமன்னனுக்
கிருள்பரந்துயிரோகியதேகலும். (௩௭௯)

மையலுற்றவன்மந்திரமொன்றினால்
செய்யொழுக்கிநெருப்பையொழித்திடாப்
பையெனப்பணநாகமெலாமழைத்
துய்யவுநுமக்கொன்றுரைசெய்கின்றேன். (௩௮0)

குற்றமில்லவர்மற்றிந்நெருப்பினை
யுற்றபோழ்திதுநீரினையொத்திடும்
குற்றமில்லவர்போனடுவன்றெனி
லிற்றதுமுயிரொன்கையிலென்றனன். (௩௮௧)

அஞ்சிமற்றவனாணையிறந்திடா
நஞ்சுதாரிகணண்ணினதீயினைப்
புஞ்சுபூம்பொய்கைபுக்கனபோலவே
யுஞ்சுபோயினவொன்றொழியாமையே. (௩௮௨)

வந்துகந்தனன்மற்றநெருப்பினை
நின்றுபுக்கிடநீறதுவாயது
சென்றுகாளவனத்திலத்தீமையா
லன்றுலோபச்சமரமதாயினான். (௩௮௩)

ஆயுவுங்கிளையுமரசுமெலாம்
மாய்மென்பவன்போலமரித்திடாச்
சீயசேனனுந்தீவினைவன்மையா
லாயினன்சல்லகிவனத்தானையே. (௩௮௪)

அசனிகோடனெனும்பெயரானவன்
கசனிசெய்துகடாத்தயல்யானையை
விசனியாப்பிடிசூழவிலங்கன்மே
லசனமிங்குவதாகவமர்ந்தனன். (௩௮௫)

நாவிநாறுகுழல்கள்விரித்திடா
வாவிபோனகலர்விகிடந்தன
தேவியைத்தெருண்டாரொடுத்துத்துய
ரோவும்வண்ணமுரைத்திடனேம்பினர். (௩௮௬)

தோன்றிநன்னிலையாதுடனேகெட
வீன்றதாயருமீட்டுவைத்தேகலு
மான்றவரழிவெய்தலும்வையகந்
தோன்றினன்றுதுடங்கினவல்லவோ. (௩௮௭)

செல்வமுஞ்சிலநாளிடையேகெடு
மல்லலென்றுமுருதவருமிலை
மல்லைவென்றபுயத்தெழின்மன்னவ
ரெல்லையில்லையிம்மண்ணிலிறந்தவர். (௩௮௮)

வேறு.

இறந்தவர்க்கிரங்கிநாமுமழுதுமேலின்றுகாறும்
பிறந்தநம்பிறவிதோறும்பெற்றசுற்றத்தையெண்ணில்
இறந்தநாளலகையாற்ருதெவருக்கென்றழுதுமென்னத்
திறந்தெரிந்துணர்ந்துதேவிசிறிதுபோய்த்தேறினாளே. (௩௮௯)

தேறிநாள்மைந்தர்தம்மைத்தருகெனச்செப்பநொந்த
வேறுபோனடந்துவந்தாங்கிறைஞ்சிநின்றவனைநோக்கிப்
பேறிலேனும்மைச்சூட்டியரசனைப்பிரிந்ததென்ன
வாறிழிவனையைப்போலவழுதடிதொழுதுவீழ்ந்தார். (௩௯௦)

திருவனாளவனைத்தேற்றிச்சீயசந்திரனைநோக்கி
முருகுலாமகுடஞ்சூட்டிமண்முழுதாள்கவென்று
பொருவிலாளதனிற்பின்னைப்பூரசந்திரனைநோக்கி
யரசிளங்குமரனாய்நீயமர்ந்தினிதிருக்கவென்றாள். (௩௯௧)

இந்திரவிபவந்தன்னையிருவகிர்செய்துமைந்த
ரந்தரம்பிறிதொன்றின்றியின்பத்துளழுந்துநாளுட்
சிந்துரக்களிற்றுச்சீயசேனன்றன்வார்த்தைகேட்டு
வந்தனர்சாந்திரண்ணியமதியென்பார்துறந்தமாதர். (௩௯௨)

அங்கநூல்பயின்றுவல்லாரறவமிர்தளக்குஞ்சொல்லார்
சிங்கநற்பாய்ச்சலாதிநோன்பொடுசெறிந்துநின்றார்
தங்கியகருணைநெஞ்சிற்றறியினாலுயிர்கட்கெல்லாந்
திங்கள்வெண்குடையினான்றன்றேவியைக்கண்டுசொன்னார். ()

அங்கரவல்குலாரினருந்ததியனையநங்கை
மங்கலமிழந்ததெம்மனோர்கடம்பாவம்வாடிச்
செங்கயலனையகண்கள்சிதறநீயழுதபோழ்தும்
வெங்களியானைவேந்தன்வெளிப்படானொழிகவென்றார். (௩௯௪)

ஆர்வத்தினரற்றின்சிந்தையார்த்தமாயதனிற்பின்னை
வேரத்தையுடையவாயவிலங்கிடைப்பிறந்துதீமைப்
பாரத்தையடைந்துசென்றுநரகத்திற்பதைப்பர்கண்டாய்
நேரொத்தமனத்தையாகிநித்தமேநினைக்கவென்றார். (௩௯௫)

அழுந்திநீசோகந்தன்னிலரியவிப்பிறவியாலாஞ்
செழும்பயனிழந்திடாதேதிருவறஞ்செறிந்துசிந்தை
எழுந்தநல்விசோதிதன்னாலிடர்க்கடல்கடந்துபற்றி
லழுந்தியவினையைவெல்லுமறத்துவித்தமைக்கவென்றார். (௩௯௬)

துவர்ப்பசைநான்கிற்றீயவிலச்சைமூன்றாகினானை
யவத்தமேபோக்கிடாதேயம்மைநும்மாற்றற்கேற்ற
தவத்தொடுவிரதஞ்சீலந்தக்கனதாங்கிச்சிந்தை
யுவர்ப்பொடுவெறுப்பினொன்றியுறுதிக்கணுழக்கவென்றார். ( )

அருந்தவத்தார்கள்சொல்லைகேட்டலுமிராமைசித்தம்
அரும்பியதவத்ததாகவேந்தனுமகனைக்கூவிப்
பொருந்தியசெல்வஞ்சுற்றம்புற்புதம்போலமாயும்
திருந்தியகுணத்தினாய்நீதிருவறமறவலென்றாள். (௩௯௮)

என்றலுமஞ்சிநெஞ்சத்திளஞ்சிங்கநடப்பதேபோற்
சென்றவன்பணிந்தெழுந்துசெப்பியதென்கொலென்ன
மின்றிகழ்பூணினாய்மேல்விழுத்தவந்தொடங்கிநோற்றற்
கொன்றியதுள்ளமென்னவுருமுற்றநாகமொத்தான். (௩௯௯)

கடகமுமுடியுஞ்சிந்தகற்பகம்போலவீழ்ந்து
படிமிசைக்கிடந்தவீரன்பரிசனந்தேற்றத்தேறி
யடியனேன்பிழைத்ததென்கொல்அடிகணீர்துறத்தற்கென்ன
நெடிதுநீருறையநீங்கள்பிழைத்ததொன்றில்லையென்றாள். (௪௦௦)

மறம்புரிந்திலங்கும்வைவேல்மன்னவன்றேவியுள்ளந்
திறம்புரிந்தெழுந்தவண்ணமறிந்தபின்சீயசந்த்ரன்
துறம்புரிந்தடிகளென்றுதொழுதுடன்படலுநீல
நிறம்புரிந்தெழுந்தவைம்பானெறிமையினீக்கினாரோ. (௪௦௧)

அனிச்சப்பூப்போதுகொய்வார்போலணிமயிரைவாங்கிப்
பனிச்செப்பையனையகொங்கைப்பாணிறப்படத்தின்வீக்கித்
தனிச்சித்தம்வைத்தநங்கைதாமரைப்பூவிலன்னம்
பனிச்சுத்தஞ்சூட்டிவீழவிருந்ததோர்படியிருந்தாள். (௪௦௨)

அரசிளங்குமரன்பைம்பொன்னளவின்றியீந்தபின்னைப்
பிரசநின்றருதபிண்டிப்பிரான்றிருச்சிறப்பியற்றி
மரைரிருந்தவளைப்போலுமிராமைதன்னுறவைக்கண்டு
விரைமலர்சொரிந்துவாழ்த்திமீண்டுதன்னகரம்புக்கான். (சாoரு)

மத்தமால்களிறுவான்கையிழந்ததுபோன்றிராமை
தத்தையைப்பிரிந்துசீயசந்திரன்சாலவாடி
முத்தணிமுலையினார்தம்முறுவலுஞ்சிறியநோக்கும்
பித்தன்வாய்ப்பட்டநல்லபிரசம்போற்றிரிந்தவன்றே. (சாசு)

ஈன்றதாயென்பதன்றியிறந்தநாட்சிறந்தவன்பிற்
றோன்றினுதலானும்பிரிவின்மாதுயரமுற்ற
னன்றவற்காயநன்றியணுவுமாமேருவாகித்
தோன்றுமேழ்பிறவிதோறுந்தொடர்ந்துவீடெய்துகாறும். ()

பகைவர்தன்னன்புபோலப்பைந்தொடிப்பவழவாயார்
முகைமுலைக்கண்ணுந்தோளுமுறவலுஞ்செறியவந்த
வுவகையினேடுநாளிலுறுதவனெருவன்வந்தான்
புகரிலாநெறிவிளக்கும்பூரசந்திரனென்பானே. (சாoசு)

வந்தமாதவன்றன்செந்தாமரையடிவணங்கிப்பூத்தூஉய்
அந்தமிலுவகையெய்தியம்பொன்மங்கலங்களேந்தி
இந்துவாணுதலினுரோடெதிர்கொண்டுபணிந்துபுக்குச்
சுந்தரத்தலத்தினேற்றித்துகளடிதுகிலினீக்கி. (சாoஎ)

மணிமலர்க்கலசநீரால்மாசறக்கழுவிவாசந்
தணிவிலாமாலைசாந்தஞ்சருவினலருச்சித்தாற்றி
யிணையிலாமுனிவன்பாதம்பணிந்துநாலமிர்தமீய்ந்தாங்
கணியினற்பணியும்போழ்திலமாருஞ்சிறப்புச்செய்தார். (சாoஅ)

வந்தவனியமமுற்றியிருந்தமாதவனைவாழ்த்தி
யந்தமும்பிறவிக்குண்டோவில்லையோவருளுகென்ன
வந்தமுண்டாகும்பான்மைவணியலற்கருந்தவத்தான்
மைந்தமற்றவையிலார்க்குமாற்றிடைச்சுழற்றியேயாம். (சாoகூ)

பான்மையின்பரிசேனென்னிற்பழுத்தலுக்காற்றல்பிந்தல்
ஈனமாய்ப்பெருகிவந்ததிலையிடைக்கனியுமிவ்வா
றூனமொன்றிலாதபான்மையுயிரிடைக்கனியும்வீட்டைத்
தானம்பன்னிரண்டின்மெய்மைதவத்தெலையடுத்தபோழ்தே. ()

மெய்த்தவத்தன்மைதானும்வென்றவர்படிமந்தாங்கிச்
சித்தமெய்மொழிகள்மூன்றிலிருந்துடர்ப்பாட்டினீங்கிப்
பத்தறம்பன்னிரண்டாந்தவத்தொடுபயின்றுதன்கண்
ணித்தமக்காட்சிஞானவொழுக்கத்தையழுத்தல்கண்டாய். ()

தானெனப்படுவதெட்டுவினைவிட்டதன்மைத்தன்க
ஞானமிலனந்தநான்மையிருமையுமொருமையாக்கி
யானெனதென்னநீங்கும்வினையன்றியாக்கைச்சுற்றம்
யானெனதென்னைநீங்காதெண்வினைத்தொடருமென்றான். ()

என்றலுமெனதுமியானுமிவையென்மயங்கிக்கீழ்நா
ணின்றியான்கதிகணான்கின்சுழன்றனநெறியறிந்த
வின்றுநானிவற்றுநீங்காதொழிவனேலென்கணீங்கா
தொன்றினாலொன்றுநில்லாதொழிகவித் தொடர்ச்சியென்றான்.

நெருப்பிடைக்கிடந்தசெம்பிற்பட்டநீர்த்துள்ளிபோலும்
விருப்பிடைக்கிடந்தவுள்ளத்தெழுந்தவேதத்தினின்பந்
திருத்தியைச்செய்யுமென்றுபுலத்தினைச்செறியநிற்றல்
நெருப்பைநெய்தெளித்தவிப்பா னெழுந்தவனினைப்பினனாறே.

பூமியந்தரத்துவந்துபொருந்தியபுலத்தினாசை
யோவிலந்துய்த்தும்வேறோர்சுவையின்மையுணர்ந்துமீட்டும்
மேவுதற்கெழுதல்மென்றுவிட்டத்தைமென்றலன்றிக்
கூவன்மண்டூகம்போலுங்குணத்தமேனினைக்கினென்றார். (சுகரு)

பெறற்கரும்பிறவிகாட்சிபெருந்தவத்திருந்துமாற்றஞ்
சிறப்புடைக்குலநல்யாக்கைசெறிவித்தசெழுந்தவத்தை
மறப்பனேல்மாற்றையாக்குமிவையும்வந்தணுகாவென்று
திறத்துளிதெரிந்துதிங்கணுமற்குந்தெருளச்சொன்னான். (சுகசு)

முன்னஞ்செய்தவத்தின்வந்துமுடித்தநற்பயத்தைக்கண்டாற்
பின்னுமத்தவத்தைச்செய்துபெரும்பயனுகர்ந்திடாதே
மின்னஞ்சும்நுசுப்பினார்தம்வேட்கையின்வீழ்ந்துபோகும்
வன்னெஞ்சற்கில்லைகண்டாய்மாற்றிடைச்சுகமுமென்றான். ()

அருந்தவந்தானஞ்சீலமறிவனற்சிறப்பிவற்றாற்
றிருந்தியமனத்தினாத்திருவென்றும்பிரிதல்செல்லாள்
பொருந்தியேநிற்கும்பூமிபுகழொடுங்கீர்த்தியாகிப்
பரந்தென்றுமவன்கணீங்காப்பகைவரும்பணிவர்கண்டாய் (சுசஅ)

வேட்கையும்வெகுளிதானுவெஞ்சொலும்மஞ்சொலார்மேற்
ருட்சியுமுதலமன்னர்திருவினேத்தவறுசெய்யுஞ்
சூட்சியும்பெருமைதானுமுயற்சியுமமைச்சுமாதி
மாட்சியைச்செய்துமன்னர்செல்வத்தைவளர்க்குமென்றான். ()

இனையனபலவுஞ்சொல்லியெழின்முடிதம்பிக்கீய்ந்து
கனைகழலரசர்சூழக்காவலன்போகியந்த
முனிவரன்சரணமூழ்கிமுடிமுதற்றுறந்துநின்றான்
சினைமிசையணியைநீத்தசெறிந்தகற்பகத்தையொத்தான். (சஉ0)

பணமிசைமணிதோல்நஞ்சுபரிந்தோர்பணியைப்போல
மணிமுடியாடைகுஞ்சிமனத்திடைமாசுநீக்கி
குணமணியிலக்கமெண்பூத்தீரிரண்டணிந்துகோமான்
பணிவினுஞ்சீலமாலைபதினெண்ணுயிரந்தரித்தான். (சஉக)

தயாவெனுந்தையலாளைச்சாலவுஞ்செறிந்துதங்கண்
ணுசாவெனுமுறுதித்தோழனுடன்புணர்ந்துறக்கமென்னு
மயால்செயுமடந்தைதன்னைமனத்தகத்தகற்றிமாண்பி
னயாவுயிர்த்திருக்கைவைத்தானருந்தவக்கொடியையண்ணல். ()

வேறு.

வினைகளுக்குதிர்ச்சிவேட்கைநீக்கமெய்வசம்வரல்
புனைவரும்பொறிசெறிப்புயிர்க்கழிவுபோற்றுதல்
நினைவினதருக்கமும்நெறிவிளக்கமுஞ்செயும்
மனசனதவத்திேனாடருந்தவன்பொருந்தினான். (சஉங)

புகர்மிகிற்பொறிமிகும்மனசனம்பொருந்திடின்
னெகாவுடம்புடன்படாதநாட்கணீதிமாதவன்
புகர்வினைச்சுருக்கமெய்யுடன்படும்பொறிகளும்
மிகாவெனவிரும்பியாவமோதிரியமேவினான். (சஉச)

இருத்தல்போதல்நிற்றல்மண்ணிடைக்கிடந்தலில்லுயிர்
வருத்தமெய்திடாமையோம்புங்காயகுத்திமாதவன்
றிரப்பிகஞ்செல்தேசகாலபாவமெல்லைசெய்துணும்
விருத்திசங்கமமவெனும்விழுத்தவம்பொருந்தினான். (சஉ௫)

நவைக்கெலாமிடமிதென்றுநாவதன்புலத்தினிற்
சுவைக்கண்மேவல்விட்டறத்துறந்துநின்றவத்தினும்
உவத்தல்காய்தலின்றியொத்துநின்றசித்தமெய்த்தவன்
சுவைப்பரித்தியாகமாதுமார்தவத்தொடொன்றினான். (சஉகூ)

கவந்தமோரிகூகைபேய்நிவந்தகாடுபாழக
முவந்தியானைவாளரியுழுவைநின்றுழல்வனங்
குவந்தரவுவெம்புலிகுமிறுமால்வரைமுழை
யுவந்திராச்சியமொன்றுபோலவேறுறைந்தனன். (௬௨௭)

வேனல்வெம்புகான்மலைவெயின்னிலையின்மேவியும்
வானமாரிசோருநாண்மரமுதன்மருவியும்
ஊனுருக்கும்வன்பனிக்கடற்புறத்தும்வெள்ளிடைக்
கானயானைபோலமூன்றுகாலயோகுதாங்கினன். (௬௨௮)

அரியவாயுலகெலாம்விலையுலாவருங்கலத்
திரையமெய்யணிந்தவர்கள்செய்கைசொன்மரங்களால்
மரியமாசினைக்கெடுக்குமக்கிவாரமக்கிய
பெரியவர்மனங்கொளாப்பெருந்தவம்பொருந்தினன். (௬௨௯)

பெறற்கரியகாட்சிமெய்யுணர்ச்சிநல்லொழுக்கின்மே
லிறப்பெய்தாமைமெய்ம்மொழிமனத்துழந்திறைஞ்சுதல்
சிறப்புடையறத்தவற்கெதிரொழுச்சியாதியித்
திறத்தநால்வினையமுஞ்சிறந்துமாதவஞ்செய்தான். (௬௩௦)

பெருத்தநோன்புவன்பிணிகள்பீடைமூவியோகமாந்
திருத்தமேவினர்தியானநல்வதத்தொடொன்றினர்
விருத்தர்வாலர்மெல்லியரறத்தைமேவிநின்றவர்
வருத்தநீக்கியோம்பும்வையாவச்சமுமருவினன். (௬௩௧)

வேறு.

யாக்கைக்கணிச்சைநிற்குமெழுத்தின்மேற்பழுத்தசொல்லை
வாக்குநின்றுமிழுமச்சொல்வசத்ததாஞ்செவியுமுள்ளம்
நோக்குமப்பொருளின்மெய்ம்மைநுகர்ந்தெழுதெளிவிவற்றை
யாக்கும்நல்லொழுக்கிற்சாலவருந்தவன்விரும்பிசென்றான். ()

ஆர்த்தவுத்தரத்தசிந்தையறவெறிந்துயிரைமாற்றிப்
போற்றிமுத்திக்கண்வைக்கும்தருமசுக்கிலத்தியானத்
தோர்த்துடனுள்ளம்வைத்தானுதிர்ந்தனவினைகள்பின்னைப்
பார்த்திபகுமரன்சிந்தைபரமமாமுனிவனானன். (௬௩௩)

பொய்ச்சித்தமகற்றிஞானக்காட்சிநல்லொழுக்கம்போற்றி
மிச்சத்தவேதனுகியகத்தின்மேல்விருப்பைமாற்றி
வைத்துத்தன்காயதேசமுதற்புரத்தன்புமாற்றி
விச்சித்தியன்றிச்சென்றான்வியுறசக்கத்தவத்தினோடே. (௬௩௪)

அடக்கமீராறுஞ்சிந்தையாமிரண்டோடுமொன்றித்
துடிப்பறப்பரிசைவெல்லுந்தோன்றியவொழுக்கந்தன்னாற்
றடுப்பின்றியுலகமூன்றிற்றன்னெல்லைவிரியும்போழ்து
வடுப்படாவிபுலமென்னுமனப்பிரியத்தைப்பெற்றான். (௩௩௫)

சீரணியடக்கஞ்செய்தோர்பத்ததாகாயஞ்செல்லுஞ்
சாரணத்தன்மைபெற்றமாதவன்சரிக்குநாளுட்
போரணியானைவேந்தன்பூரசந்திரன்றன்சிந்தை
வாரணிமுலையினார்தம்வசஞ்சென்றுமயங்குகின்றே. (௩௩௬)

இசையின்மேலசுணமாவுமிளையவர்முலையிலின்பம்
பசையின்மாசுணமுங்கண்ணிற்புலங்களிற்பறந்துவந்து
விசையினால்விளக்கின்வீழுவிட்டிலும்போன்றுவேந்தன்
இசையுநாளிராமைதத்தைமுனியைவந்திறைஞ்சினளே. (௩௩௭)

வேறு.

புடையவர்மெலியப்பொங்குங்கடையவர்செல்வம்போல
விடையினைமெலியவீங்கியெழுந்திணைந்திருந்தகொங்கை
கடையவரிடருறத்தங்கீழடியடைவதேபோ
லிடையடியடையக்கண்டுதுறந்தவெம்மிறைவபோற்றி. (௩௩௮)

காம்பெனத்திரண்டுமைந்தர்உள்ளத்தைக்கனற்றுமென்றோள்
பாம்பினதுரியைப்போலப்பசையற்றுத்திரியக்கண்டுந்
தேம்பலின்மொழியினார்தந்திறத்துள்ளிவெறுத்துப்போந்து
காம்புடையடவிசேர்ந்தகாவலபாதம்போற்றி. (௩௩௯)

பெரியவர்பாதஞ்சேர்ந்தபேதையர்சிந்தைபோலக்
கரியமென்கூந்தல்காலத்தாற்கறுப்பொழியக்கண்டும்
புரவலசெல்வம்பார்க்கிற்புற்புதம்போலுமென்றும்
மருவியவரசுநீத்தமாதவபாதம்போற்றி. (௩௪0)

வேறு.

எற்றருங்குணனையிவ்வாறேற்றியவிராமதத்தை
பார்த்தறம்பகரக்கேட்டுப்பணிந்தனளிருந்துபின்னும்
வார்த்தையுண்டிறைவகேளுன்மாதவத்திடையூறேனும்
பார்த்திபகுமரன்பாலதெனமுனிபகரவென்றான். (௩௪௧)

மங்கலத்தொழில்கள்முற்றிமணிமுடிகவித்துவந்து
திங்கள்வெண்குடையினீழல்சீயவாசனத்திருந்தான்

பொங்குசாமரைகள்வீசப்பொன்மலைக்குவடுதன்னிற்
சிங்கவேறிருந்ததொத்தான்சீயமாசேனன்மைந்தன். (சசஉ)

இளஞ்சிங்கவேற்றைச்சூழ்ந்தவிரும்புலிப்போதகம்போற்
களங்கண்டுமுழங்குய்யானைக்காவலர்குமரர்சூழ்ந்தார்
உளங்கொண்டவமைச்சராதிசூழவந்தூர்கோள்வட்டத்
திளந்திங்களாகிப்பூரசந்திரனிருந்திட்டானே. (சசங)

வேறு.

காமத்திருவின்மஞ்சரியுங்கமலத்திருவுங்கடலமிர்தும்
பூமொய்த்தெழுந்தவிளங்கொடியும்புனமென்மயில்களனையார்கள்
வாமப்புருவச்சிலைகோலிமலர்க்கணம்புதெரிந்துமனக்
காமக்கோமான்வில்லிகள்போற்கடிதார்மன்னன்புடைசூழ்ந்தார்.

வேறு.

பார்த்திபர்தருதிறைகொண்டுபைம்பொனு
லார்த்தியிம்மண்ணினையமிர்தச்செப்பென
வார்க்கடங்காமுலையார்மகிட்சியிற்
போர்க்கடாயானையான்புரிந்துசெல்லுநாள். (சசரு)

கண்மிசையவ்வனையான்கண்டுகாவல
விண்மிசையின்பமும்வேந்தர்செல்வமும்
புண்ணியமிலாதவர்க்கில்லைப்பூமக
ளெண்ணுவதுஞ்செயாளென்றியம்பினேன். (சசசு)

உருவமுமழகுநல்லொளியுங்கீர்த்தியுஞ்
செருவிடைவெல்வலதிறலுஞ்சிந்தைசெய்
பொருளவைவருதலும்போகமுநல்ல
திருவுடையறத்ததுசெய்கையென்றனன். (சசஎ)

நிலத்திடையங்குரமவித்தைநீத்திலை
மலைத்தலைமழையிலாதாறுதான்வராப்
புலத்திடையின்பமுமில்லைப்புண்ணியந்
தலைத்தலைவரச்செயாதவர்கட்கென்றனன். (சசஅ)

காரணமில்லையேவில்லைகாரியம்
போரணிவேலினய்முன்செய்புண்ணியங்
காரணமாகநீருடுத்தகன்னியுஞ்
சீரணிசெல்வமுஞ்செறிந்ததுன்னையே. (சசகூ)

மண்ணின்மேல்மற்றிந்தச்செல்வமேல்வர
வெண்ணிநீபுண்ணியமீண்டச்செய்கெனப்
புண்ணின்மேற்பட்டவேல்போலவச்சொலை
யெண்ணிடாதிகழ்ந்தவனெழுந்துபோயினான். (சரு௦)

புலங்கள்மேற்புரிந்தெழுபொறிகளோம்பியே
விலங்குபோலேயவன்வீய்ந்துபோகுமே
யிலங்குசெம்பொன்னெயிலிறைவனல்லறத்
தலங்கல்வேலானவனடையுமோசொலாய். (சருக)

வேறு.

மாதவியுரைத்ததெல்லாமாதவன்மனத்தைநோக்கும்
போதியிலுணர்ந்தறத்தைப்புரவலன்புரிந்துகொள்ளும்
யாதுநீகவலவேண்டாமதனுக்கேயேதுவாகு
மோதுமிக்கதையைக்கேட்டுநீயவற்குரைக்கவென்றான். (சருஉ)

அடக்கத்தைப்பொதிந்துயிர்க்கணருளினையூறியாறித்
துடக்கமுமுடியுமொத்துத்தொடுத்தோர்மாலைதன்னை
யெடுத்துடனாற்றினாற்போன்றித்தைவெவ்வுயிர்க்குமாக்கும்
வடுப்பரிந்திருந்தசொல்லான்மாதவனுரைக்கலுற்றான். (சருங)

ச-வது பூர்ணசந்திரன் அரசியற்சருக்க முற்றும்.

ஐந்தாவது

நான்காம் சுவர்க்கமேறினசருக்கம்.

வாசநின்றறாதசோலைமழையெனமதுக்கள்பெய்து
மூசுதேன்முழங்கமஞ்ஞைமுகிலெனவகவிமுத்தின்
றாசுலாமல்குலார்போற்றொடங்கியநடங்களோவாக்
கோசலையென்பதுண்டிக்குவலையம்புகழுநாடே. (சருச)

திருத்தகுநாடிதற்குத்திலதமாய்த்திகழ்ந்துசென்றார்
வருத்தந்தீர்மாடமூதூர்மறையவருறையுமாண்ட
விருத்தநற்கிராமந்தன்னுள்மிருகாயணனென்றுமிக்கா
னொருத்தனங்குளனற்சாந்தியுருவுகொண்டனையநீரான். (சருரு)

அதிர்படநடத்தலில்லானவன்மனைக்கிழத்தியஞ்சொல்
மதுரையென்றுரைக்கப்பட்டாள்மகளும்வாருணியாமுத்தின்
கதிர்நகைக்கருங்கட்செவ்வாய்கால்பரந்தெழுந்துபொன்னின்
பிதிர்பரந்திருந்தகொங்கைப்பிணையனாளொருத்தியானாள். (சருகூ)

கதிர்மறைபொழுதிற்கான்றகமலமுங்குவளையும்போன்
மதுரையுமகளும்வாடமறையவன்மரித்துப்போகி
யெதிர்வருபிறவியில்லாரிடையருவயோத்தியாளும்
அதிபெலன்றனக்குத்தேவிசுமதிக்குமரிவையானான். (சருள)

இரணியவதியென்பாள்பேரிளமயிலனையசாயல்
வருசிலைபுருவச்செவ்வாய்வல்லிதான்வளர்ந்துபின்னைத்
தரணிமேலரசரெல்லாந்தையலைத்தருகவென்னச்
சுரமைநாடுடையதோன்றல்திண்புயந்துன்னுவித்தார். (சருஅ)

போதனபுரத்துவேந்தன்பூரசந்திரனுந்தோகை
மாதனம்புணர்ந்துவந்தவின்பத்துண்மயங்குநாளுட்
காதலாள்மதுரைவந்தக்காவலன்தேவிதன்பால்
மாதராளொருத்தியானாள்மற்றவணீகண்டாயே. (சருகூ)

அருந்தவனருளினாலப்பத்திரமித்திரன்முன்
றிருந்தியகுணத்துநின்பாற்சியசந்திரனென்றானேன்
வருந்துநுண்ணிடையினாளவ்வாருணிவந்துன்காதல்
பொருந்தியபுதல்வனாயபூரசந்திரனென்றானன். (சசுo)

வேறு.

ஆதலாலவன்கணீங்காக்
காதலையாயினாய்நீ
போதலர்வலங்கலானுங்
கோதிலாக்குணத்தனாமே. (சசுக)

வேறு.

வினையெனுங்குயவனம்மைவேண்டுருவியற்றல்கண்டாய்
அனகனாமுருவந்தன்னைப்பெண்ணுருவாக்கியங்கே
மனைவியைமகனுமாக்கிமகளையேமைந்தனுக்கி
நினைவினான்முடித்துநின்றார்நீதியார்கடக்கவல்லார். (சசுஉ)

பத்திரபாகுவென்னும்பரமமாமுனிவன்பாரில்
உத்தமன்பாதஞ்சேர்ந்துன்பிதாவின்றுமுனிவனாகி
யித்தலமேத்தநின்றானெனக்குவந்திதத்தையோதிச்
சித்தமெய்ம்மொழிகள்மூன்றுஞ்செறிவித்தகுரவனானன். (சசுந)

சாந்தமாமதியைச்சார்ந்துதையலாயுனைப்பயந்தாள்
காந்திதானாயினாளக்காவலன்சியசேனன்

பாந்தளான்மாய்ந்துபோகிச்சல்லகிவனத்துக்கைம்மா
வேந்தனாய்முனியவேடரிட்டபேரசனிகோடம். (சகூச)

நகார்ந்தத்தென்னைக்காணாமதத்தினாலந்தநாகம்
வேகாந்தத்தாலென்மேலேவெகுளியாலோடிவந்த
தாகாசத்தியானெழுந்தேனங்குவந்தென்னைக்காணா
தேகாந்தநெறிபுக்கின்மைகண்டவனொத்ததன்றே. (சகூரு)

வெங்கதங்கடாவக்கூற்றொத்தென்னைமேனோக்கிப்பார்க்கச்
சிங்கமாபுரத்துவேந்தேசீயமாசேனவோய்நீ
யிங்குவந்தியானையானாய்ப்பாவத்தாலிதனைவிட்டாற்
பொங்கிவீழ்நரகந்தன்னிற்பொருந்தவோமுயற்சியென்றேன்.

அரசனாய்ப்பெரியவின்பத்தழுந்தக்கண்டக்கணாலே
கரியதாப்பெரியதுன்பத்தழுந்தவிக்கானிற்கண்டேன்
பெரியதோர்பாவத்தாலிப்பிறவியைப்பெரிதுமஞ்சித்
திருவறமருவுயானச்சீயசந்திரனென்றிட்டேன். (சகூஎ)

என்றலுமெழுந்தபோதத்திறந்தவப்பிறவிதன்னை
யன்றவனறிந்துமூர்ச்சித்தருவரைபோலவீழ்ந்தான்
நின்றதோர்படியிற்றேறிநிறைதவன்போலநின்றான்
சென்றியானறத்தைக்கூறச்செவியினைத்தாழ்த்தலோடும். (சகூஅ)

யாக்கையுங்கிளையுமர்தியாவையுநின்றதில்லை
வீக்கியவினையின்றுன்பம்விலக்கலாமரணுமில்லைத்
தீக்கதிநான்கிற்சார்ந்துசெல்வுழித்துணையுமில்லை
நீக்கருங்குணங்களல்லால்நின்றநாளில்லையென்றேன். (சகூகூ)

உண்டுநாம்விட்டவல்லாப்புற்கலமொன்றுமில்லை
பண்டுநாம்பிறந்திடாதபரதேசமுலகிலில்லை
கொண்டுநாம்நின்றயாக்கைகுணமிலாப்பூதிகந்தம்
மண்டிநாம்புலத்தின்வீழ்தன்வினைவரும்வாயிலென்றேன். (சஎ0)

அரியதிவ்வுலகின்வென்றோர்திருமொழியதனைப்பெற்றாற்
பெரியநற்காட்சிஞானமொழுக்கமாமவற்றிற்பின்னை
வருவினைவாயிலெல்லாமடைக்கமுன்மிடைந்தபாவ
நிருசரைசெல்லுமிந்தநெறியைநீநினைக்கவென்றேன். (சஎக)

வெருவுறுதுன்பமாகும்விலங்கினுளெழுந்துவீழ்தல்
நரகிடைமருவுந்துன்பும்நரற்கெல்லாங்குடும்பமோம்பல்

மருவியதேவலோகின்வழுத்தரல்வானவர்க்காங்
துருவமாய்நின்றதுன்பஞ்சொன்னநாற்கதிக்குமென்றேன். ()

மனத்திடைபிறக்குந்துன்பம்வந்துறுமவற்றின்றுன்பம்
தனுத்தனிற்பிறக்குந்துன்பம்தானியல்பாயதுன்பம்
எனச்சொலப்பட்டநான்குமியாவர்க்குமாகுமின்ன
மெனத்திறம்புணரின்றதீக்கதிநீங்குமென்றேன். (சஎங)

வினயத்தோ டிறைஞ்சிக்கேட்கும் முனியைப்போல் விளம்பிற்றெல்லாம், மனம்வைத்து வணங்கிக்கேட்டு வதங்கள்பன்னிரண்டுமேவிப், பனையொத்த தடக்கைமாநல் லுயிர்களைப் பாதுகாக்கும், முனியொத்துக் கருணைவைத்தெவ் வுயிரையு மோம்பிற்றன்றே. சஎச

பொய்கொலைகளவுகாமம்புலைகுதுகள்ளகற்றி
மெய்யுறத்திசையினேடுபொருளினைவரைந்துமேனி
நையினும்வதங்களையாவகையினைகராசன்
சய்யமாசய்யமத்தின்றலைநின்றார்போலச்சென்றார். (சஎரு)

உவர்ப்பொடுவெறுப்பினென்றியுடம்பொடுபுலங்கடம்மேற்
றுவர்ப்பசைநான்கினிங்கிச்சொன்னபன்னிரண்டுமுன்னிச்
சவர்ச்செய்கையின்றிச்சித்தஞ்சாந்தியினன்மைத்தீமைக்
குவர்த்தல்காய்வின்றிப்பக்கந் திங்களுேன்பொன்றிச்சென்றான்.

வாரணந்தின்றுவிட்டவற்றியதுவலும்புல்லும்
பாரணையாகப்பார்த்தங்கருந்தவம்பயின்றுபான்மைக்
காரணமிதுவென்பான்போற்காலங்கள்பலவுநோற்று
நீரணைந்தோடும்யூபகேசரிநதியைச்சேர்ந்தான். (சஎஎ)

உரையினுக்கரியவண்ணமொருதிங்களுேன்புமுற்றி
வரையினைப்பிழிந்ததேபோல்வற்றியகாயத்தாற்றங்
கரையினைச்சார்ந்துநீருட்பகையினைநீட்டக்கைம்மா
நிரையினுக்கரசன்கால்கணிலத்திடைக்குளிப்பநின்றான். (சஎஅ)

அக்கணத்தமைச்சனுகஞ்சமரமாயதனைவிட்டுக்
குக்குடவடிவிற்பாம்பாய்ப்பிறந்தவக்குபதன்காணு
மிக்கெழுந்தனலுங்கோபத்தோடிமேலேறிநெற்றிச்
சிக்கெனக்கதுவத்திரன்காயமுந்தியர்கஞ்செய்தான். (சஎகூ)

மலையினைச்சூழ்ந்துமஞ்சினஞ்சுவந்தெங்குஞ்சூழ
நிலையினிற்றளர்தலின்றிநின்றுமாதவன்றன்பாதந்
தலைமிசைக்கொண்டுபஞ்சமந்திரஞ்சிந்தைசெய்து
நிலையிலாவுடம்புநீங்கிநெறியிற்சாசாரம்புக்கான். (௪௮0)

ஆயுவுங்கதியுமானுபுவ்வியுமக்கதிக்கே
யேயநல்வினைகளெல்லாமெழுந்தவற்றோடுஞ்சென்று
பாயநல்லமளிமேலோர்பார்த்திபன்பணிந்துவந்து
மேயினனெழுந்ததேபோல்வினையினன்முடித்தெழுந்தான். ()

ஆனைதன்னுருவுநீங்கியிரவிமுற்பிரபைத்தோன்றி
வானத்துவில்லைப்போலவடிவெலாஞ்சமைந்துமூழ்த்திற்
றேனைத்தவலங்கலான்போற்சீதரனென்பதாகும்
மானைத்தநோக்கினார்தம்வடிக்கணுக்கிலக்கமானன். (௪௮௨)

முடியுங்குண்டலமுந்தோடுமாரமுங்குழையும்பூணுங்
கடகமுங்கழலும்பட்டுங்கலாபமும்வீமுநூலும்
உடனியல்பாகித்தோன்றியொளியுமிழ்ந்திலங்குமேனி
படரொளிபரப்பமஞ்சிற்பருதியினிருந்தபோழ்தின். (௪௮௩)

காரொனமலரமாரிகற்பகமரங்கள்வீழ்த்த
வாரணிமுரசமெங்குமுழங்கிநந்தனவனத்தில்
வேரியுந்தாதுமேந்திமந்தமாருதங்கள்வீசச்
சிரணிகொங்கையாருந்தேவருஞ்சென்றுசேர்ந்தார். (௪௮௪)

எத்திக்கும்பார்த்திதென்னேயாவரோயான்பினுரோ
சித்தத்துக்கினியதேசம்யாருதோவென்றிருந்து
தத்துறும்போழ்திலந்தப்பவத்தைச்சார்ந்தெழுந்தவோதி
கைத்தலப்படிகம்போலக்கண்டதுகருதிற்றெல்லாம். (௪௮௫)

தந்தியைத்துடக்கமாயவறிந்தியான்முன்புசெய்த
மந்தமாதவத்திற்பெற்றதுறக்கமந்தாரஞ்சூழ்ந்த
விந்திரவிமானமென்னையெத்திக்குஞ்சூழவோதி
வந்துநின்றிறைஞ்சுகின்றார்வானவர்தாங்களென்றான். (௪௮௬)

பாடுவார்மதுரகீதந்தேவிமார்மின்னுப்போனின்
றாடுவாரரம்பையார்களரிவையர்மிலையத்தோடும்
ஊடுதானெழுந்தவோசைதுந்துபியோசையென்று
நீடியாதவதியாற்பார்த்தறிந்தவனிருந்தபோழ்தில். (௪௮௭)

வேறு.

வென்றியுந்திருவும்பரமாயுவும்
ஒன்றிவையகமுள்ளளவுஞ்செல்க
வென்றுசொல்லியிறைஞ்சியவானவர்
நின்றுபின்செயுநீதிகளோதினார். (௪௮௮)

மஞ்சனஞ்சமைத்தார்மதிபோன்முகத்
தஞ்சொலாரதுமுன்னமமர்ந்துநீ
பஞ்சகாயம்பணித்தபிரானடிக்
கஞ்சலிசெய்தமர்ந்துசிறப்புநீ. (௪௮௯)

தாவிலாத்தவத்தின்பயனாகிய
தேவர்தந்தொகைசெய்வதறிந்துபின்
நாவினோசைநரம்பினெழுகுரற்
றாவிலாவிலயம்பியல்சாலைகாண். (௪௯0)

படங்கடந்தணிதங்கியவல்குலார்
நுடங்குநுண்ணிடைநோவநுவலரும்
வடஞ்சுமந்தவனமுலையின்பயன்
றொடங்குபின்னெனமற்றவர்சொல்லினார். (௪௯௧)

நீதியைக்கடவார்பெரியோர்கடாம்
ஆதலாலமரன்னவைசெய்தபின்
காதியைக்கடியுந்திருமாலடி
போதுகொண்டுபுகழ்ந்துபணிந்தனன். (௪௯௨)

வேறு.

அரணடைந்தவெங்கானத்தானையாய்நின்றுன்
சரணடைந்தேனின்றிந்தச்சாசாரணனாற்
கரணமெலாம்வென்றுன்னைக்கண்டவர்கள்காம
மரணமிலாவீடெய்தன்மற்றோர்பொருளோ. (௪௯௩)

நிழற்போலநின்றுன்னைவந்தடைந்தார்மாற்றா
மழற்போக்கியந்தமிலாவின்பத்தையாக்கி
வழுத்தராமுத்தியின்கண்வைக்குநின்பொற்பாத
நிழற்சேரார்மாற்றார்நெடுவழியைச்செல்வார். (௪௯௪)

காமனையுங்காலனையும்வென்றுலகமூன்றினுக்குஞ்
சேமநெறியருளிச்செந்தாமரைப்புல்லிப்

பூமுதிராப்பிண்டிக்கீழ்ப்பொன்னெயிலுள்மன்னியநின்
நாமநவிற்றுதார்வீட்டுலகநண்ணுரே. (௪௯௫)

வேறு.

இப்படித்துதித்தேகியபின்னரோ
துப்படுந்தொண்டைவாயவர்துன்னினர்
ஒப்பிலாதவின்பத்துக்குளித்தனன்
எப்படிதுறக்கத்தியல்பென்றியேல். (௪௯௬)

ஒன்றின்மேல்வைத்தமுப்பத்தேழ்நான்கிரண்
டொன்றின்மேலொன்றுமூன்றுமூன்றுன்பது
மொன்றுமேலொன்றுமாந்துறக்கப்புரை
நின்றமேலுறக்கீழ்நின்றநீதியால். (௪௯௭)

இரண்டுமேழுமீரைந்துமீரேழுமா
இரண்டின்மேற்சென்றிருபத்திரண்டெய்தத்
திரண்டவற்றின்மேலொன்றுசென்றுயுக
முரண்டெழுங்கடல்முப்பத்துமூன்றுமேல். (௪௯௮)

கடற்கோராயிரத்திரண்டுகடந்தமிர்
துடற்றும்வெம்பசிதீரமனத்துணுக்
கடற்குநாள்பதினைந்துகழிந்துயிர்
அடக்கமில்லவின்பத்தரத்தேவரோ. (௪௯௯)

ஏழுமுழமுதற்கேழுமாவீழ்ந்திடை
யோழிமுழங்கற்பத்துச்சியின்மூன்றரை
வீழுமுழமரையைந்திடைவீழ்ந்துமே
லோழிமுழமொன்றணுத்தரத்தொக்கமே. (௫௦௦)

சோதமீசானர்தம்மேலிருவர்தம்
மோதிமண்ணென்றிரண்டைம்முறையுறும்
நீதியாநிலங்கிழ்மூன்றுநாலைஞ்சா
லோதியால்மேல்முன்னல்வருணர்வரோ. (௫௦௧)

ஆறதாவதைக்கெவச்சமாய்ந்திடு
மீறிலவ்விருவர்க்குமெழாவதாம்
மாறிலாச்சவ்வசித்தியில்வானவர்
ஊறிலாவோதிநாளிகையுட்கொளும். (௫௦௨)

மிடையில்மேனியைத்தீண்டலிற்காண்டலி
லடையுமுன்சொல்லிற்சிந்தையின்மேவலின்
மடநலாரின்வரும்பயனெய்துவர்
அடைவிலோதியிற்சொன்னமுன்னவரும். (௫0௩)

பல்லமைந்தின்மேற்பன்னிரண்டாவதை
யெல்லையாகவிரண்டிரண்டேறிடும்
மல்லநால்வருக்கேழுமிக்கைம்பதம்
பல்லமாந்தேவியர்பரமாயுவே. (௫0௪)

வேறு.

மோகமின்முனிவனதின்பம்போலவே
தோகையையனையவர்தொடர்ச்சியின்றியே
சோகமோடுறுதுயரின்றித்தானியல்
பாகுநல்லகமிந்திரத்தவரின்பமே. (௫0௫)

சோதமன்சிறுமைசோதிடருத்தம
மோதியவரைக்கடலுற்றவுத்தமம்
நீதியாற்கீழ்மேலவற்குநின்றதா
மேதமில்லிடையெனைப்பலவுமாகுமே. (௫0௬)

இதுவமருலகுதனியல்விதன்கணச்
சதுரமைசாசாரகற்பத்தின்வழி
யதிர்பெறவவணருமத்தியாயுகம்
மதுரநின்மொழிவருமின்பமேவினன். (௫0௭)

பதினறுகடன்மிசைப்பட்டவாயுகம்
பதினறுவருடமாயிரங்கடந்துணைப்
பதினறுபதினைநாள்விட்டுயிர்த்திடாப்
பதினறுபாவனையாரைப்படுமேபிழையிலே. (௫0௮)

நாலரைமுழமியவ்வாமோர்மாத்திரை
மால்வரையணுவளவாய்நினைத்துழிச்
சாலவுநனியவர்போலவெய்தலு
மாலுறுமுருப்பலவாகுமேனியான். (௫0௯)

வாசமோர்யோசனைநின்றுநாறிடும்
தேசுமோர்யோசனைசென்றெறித்திடும்
தூசணிமாசெயார்மேனியின்குணம்
பேசலாம்பிடியதுவன்றுபீடினல். (௫௧0)

முன்செயநல்வினைமுகிலின்மின்னன்னார்
இன்செய்வானவரோந்துகொங்கையர்
வந்திடைசூழ்ந்திடவணங்கவானவர்
அந்தமிலின்பத்துவமான்மேவினன். (ருகக)

மந்திரிதம்மிலனுமரித்துமால்வனத்
தந்தரமின்றிவானரமதாகினன்
சிந்துரக்களிற்றின்மேற்செறிந்தவன்பினல்
வெந்துயராருவரவத்தைவிட்டினன். (ருகஉ)

உரகவானரத்தினலுயிரிழந்துபோய்
நரகமூன்றுவதைநண்ணியெண்ணரும்
பெரியமாதுயரமதுற்றதாற்றவும்
விரகினல்வினைகணின்றுதையஞ்செய்யவே. (ருகங)

ஒட்டகங்கழுதைநாய்பாம்புவாசியூ
னிட்டதோர்குழியின்மிக்கெழுந்துநாறிடும்
மட்டிடைவீழ்ந்ததிலமைந்தயாக்கையான்
சுட்டதோர்பனைத்துணிபோலத்தூங்கினன். (ருகச)

முடையுடம்பதுவொருமுழத்தமேகலும்
படையிடைபூமிமேற்பதித்தபோழ்தினே
தடியொடுதெண்டுவாளேந்திச்சூழ்ந்திடாக்
கடையறவதுக்கினர்காளமேனியார். (ருகரு)

திரித்தினர்செக்குறலுட்பெயர்ச்சியி
லுரித்தனர்கிழிகளையொப்பச்சுற்றிடா
வெறுத்தனர்நிறைத்தமுள்ளிலவமேற்றிநின்
றுறைத்தனரொதிரொதிர்விளைந்தமுள்ளின்மேல். (ருகசு)

தீக்குழியுட்புகநூக்கினர்சிலர்
வாக்கினற்செம்பினையுருக்கிவாயிடை
தூக்கிமுன்மத்திகையாற்புடைத்திரு
பாக்கதாய்ப்பிளந்திடுவாருமாயினர். (ருகஎ)

மலையெனப்பெரியதோரிருப்புவட்டினை
யுலையெழற்பொற்கணத்துருகச்சுட்டிடு
நிலையெழக்குட்டத்துவெந்துநீடியா
துலையில்வெம்புலியெனவெழுந்துவீழுமே. (ருகஅ)

பஞ்செழவுலந்துநாப்பரந்தவேட்கையான்
நஞ்சினைமடுத்துடனடுங்கிவீழ்ந்திடாத்
துஞ்சினுந்துஞ்சிடாத்துயரமாக்கட
லெஞ்சலிலாயுகமிறக்கமொன்றிலான். (௫௧௯)

நின்றுநின்றடற்றும்வெம்பசியைநோக்குவா
னென்றிநின்றவர்நினைந்திட்டவக்கணம்
சென்றுநஞ்செத்திசையுஞ்சென்றெரிந்திடாப்
பொன்றநின்றுடற்றிடுங்கணந்தோறும்புகா. (௫௨0)

முழமிசைமுப்பதோர்வில்லுயர்ந்தவன்
எழுமிசைபுகைமுப்பத்தொன்றுகாதமும்
விழுமுடன்வெங்கனல்வெண்ணெய்போன்றுடைந்
தெழுகடருனுமீதவ்வியற்கையே. (௫௨௧)

நெருப்பினையுமிழ்ந்திடுநிழல்கள்புக்கிடில்
விருப்புறுமவைவிபரீதமாய்வருஞ்
செருச்செயாதாரிலைத்திரியுந்தீவளி
யுரைப்பதென்னவனினரகத்துற்றதே. (௫௨௨)

வேறு.

நாகத்தைப்போலுநாகநாகத்தானரகமெய்த
நாகத்தைநாகந்துய்த்துநாகத்தானரகமெய்த
மேகத்தினெடுந்திங்கள்வீழ்ந்துடன்கிடந்ததென்ன
நாகத்தின்கொம்புமுத்துநரியென்னுங்குறவன்கொண்டான். ( )

தந்தமுமுத்துங்கொண்டுதனமித்ரன்றன்னைக்கண்டு
வெந்திறல்வேடனீந்துவேண்டுவகொண்டுபோனான்
சுந்தரமுத்துங்கொம்புங்கொண்டுபின்வணிகன்பூர
சந்திரன்சரணஞ்சார்ந்துசாலவுஞ்சிறப்புப்பெற்றான். (௫௨௪)

பைம்பொனுமணியுமும்பவழமும்பயின்றமஞ்சிற்
கொம்பிரண்டினையுநாலுகால்களாய்க்கடைந்துகூட்டி
வம்பணிமுலையினார்கள்சூழமற்றதனையேறிக்
கொம்பிடைப்பிறந்தமுத்தமாலைகொண்டணிந்திருந்தான் (௫௨௫)

இங்கிந்தமாற்றந்தன்மைகேட்டபின்யாருமில்லை
பொங்கியபுலத்தினீங்கியறம்தலைப்படாதுபோவார்
சிங்கவேறனையகாளைக்கிதனைநீசெப்புத்தீமைப்
பங்கநல்லறத்தினாகுமெனப்பணிந்துவந்துபோனாள். (௫௨௬)

மாதவன்பாதமேற்றிமனோகரவனத்தினின்று
மாதரத்தோடும்போகியரசனாமகனைக்கண்டு
காதலுங்களிப்புநீங்குங்கதையினையுரைப்பக்கேளா
மேதினிக்கிறைவன்சாலவெய்துயிர்த்தவலமுற்றான். (௫௨௭)

மண்ணினுக்கிறைவனாயுமறத்தினைமறந்துமுன்னைப்
புண்ணியமுலந்தபோழ்தின்விலங்கிடைப்புக்குவீழ்ந்தான்
விண்ணினுக்கிறைவனானான்விலங்கினின்றறத்தைமேவி
யண்ணலுன்றாதைநீயுநல்லதீங்கறிந்துகொள்ளே. (௫௨௮)

இலங்கொளிமகுடஞ்சூடியிருநிலக்கிழவனாயு
புலங்கள்மேற்புரிந்தெழுந்துவிலங்கிடைப்புரிந்துவீழ்ந்தான்
விலங்கிடைப்புலங்கடம்மைவெறுத்துவிண்ணுலகிற்சென்றான்
நலங்கலந்தாரினாய்நீயறிந்துகொணல்லதென்றாள். (௫௨௯)

பற்றினாற்பூதிப்பாம்பாய்சமரமாய்க்கோழிப்பாம்பாய்
செற்றத்தாற்றீயில்வெம்புநரகத்தைச்செறிந்துநின்றான்
கொற்றவேற்குமரநீயிப்பிறவியைக்குறுகவஞ்சிச்
செற்றமும்பற்றுநீங்கித்திருவறம்புணர்கவென்றாள். (௫௩௦)

அரசவுன்றாதையுற்றதருந்தவன்சீயசந்தன்
திரிவித்வுலகமேற்றுந்திருவடிபணிந்துகேட்டேன்
ஒருவிநீமறந்தையிந்தப்பிறப்பைநீருகுத்திடாதே
மருவுநீயறத்தையிந்தமாற்றதுவடிவிதென்றாள். (௫௩௧)

ஆங்கவளுரைத்தவின்சொலறவிளக்கெறிப்பவுள்ளம்
நீங்கியதிருளுநீங்கிநெறியினைச்சிறிதுகண்டான்
தாங்கருந்துயரமுற்றான்றாதைபாற்காதலாய்ப்பின்
திங்கெலாநீங்கமுத்தைக்கொம்பொடுதீயின்வைத்தான். (௫௩௨)

பான்மையங்குதித்தபோழ்திற்பைந்தொடிப்பவழவாயார்
நீர்மையங்குரித்தலாமைமனத்தகத்தகன்றுநிற்பச்
சீர்மையங்குதிப்பநன்மைசெறிந்தனன்செறியுந்தோறுங்
கூர்மையங்குதிக்கும்வைவேற்குமரனுக்குரகர்கோவே. (௫௩௩)

கலையரவல்குலார்தங்காதலிற்கழூமல்காமன்
வலைமலையனையசெல்வநரகத்துவீழ்க்குமாயம்
மலைவிலாநெறியைவிட்டுமயங்கினார்நெறியைப்பற்றி
னிலையிலாமாற்றினின்றுசுழற்றகுநிமித்தமென்றான். (௫௩௪)

அஞ்சினன்மாற்றைச்சாலவடங்கினன்புலங்கடம்மை
நஞ்சையேபோலுமென்றுநடுங்கினன்றொடங்கல்செய்யான்
வஞ்சமும்படிறும்பற்றுஞ்செற்றமுங்களிப்புமாற்றிப்
பஞ்சணுவதங்களோடுசீலங்கள்பயின்றுசென்றான். (ருகரு)

சித்தமெய்ம்மொழிகள்மூன்றிற்சினவரன்செழும்பொற்பாதம்
மத்தகத்தணிந்துநான்குமங்கலம்பயின்றவையத்
துத்தமர்தம்மையேத்திச்சரணம்புக்குயிராயோமபித்
தத்துவம்பயின்றுதானந்தவத்தொடுதயாவிற்சென்றான். ()

இறைவனதறத்தையேந்தல்சேர்ந்தபினிராமதத்தை
கறைகெழுவேலினனைக்கைவிடாதிருந்துநோற்று
நிறையழிகாதலாலேநிதானத்துணின்றுசென்றாள்
கறையிலாவாயினீங்கிக்கற்பமாசுக்கிலத்தே. (ருகஎ)

பாகரப்பிரபையென்னும்விமானத்துப்பரிதிபோலப்
பாகரப்பிரபனென்னுந்தேவனாய்ப்பாவைதோன்றி
நாகர்வந்திறைஞ்சவின்பமூர்த்தியாய்நடுவிருந்தான்
சாகரம்பத்தோடாறுதனக்குவாழ்நாளதாக. (ருகஅ)

ஈரொட்டாமாயிரத்தாண்டிடைவிட்டின்னமுதமுண்ணு
வீரொட்டாம்பக்கந்தன்னையிடையிடைவிட்டுயிர்த்தும்
ஓரொட்டின்பாதியாயநரகத்தினவதியொட்டா
வோரொட்டுக்குணங்கள்வல்லவுடம்பைந்துமுழமுயர்ந்தான். ()

மின்னரிச்சிலம்பினோசைமிளிறுமேகலையினோசை
யின்னரம்பிசையினோசையெழுந்தகீதத்தினோசை
மின்னுடங்கிடையினார்தம்விளைந்திலாமொழியினோசை
தன்னுளங்கவரவின்சொல்வீசாரத்தோடுநாளில். (ருச0)

கொற்றவன்பூரசந்திரன்குணக்கடற்றோன்றிப்போகி
மற்றந்தவிமானத்தின்கண்வைடூரியப்பிரபைதன்னுட்
பெற்றியாற்றோன்றித்தானும்வைடூரியப்பிரபனானான்
முற்றுமுன்னுரைத்தவாயுமுதலவிம்மூர்த்திக்காமே. (ருசக)

வேறு.

பாடலின்மயங்கியும்பவழவாயினர்
ஆடலின்மயங்கியுமரம்பைமாரொடு
மாடமுஞ்சோலையுமலையும்வாவியும்
மூடிபோய்நீடவமுகந்துவைகுநாள். (ருசஉ)

தூயசந்திரன்கலைபெருகநாடொறுந்
தீயவன்காளகன்தேயுமாறுபோல்
சீயசந்திரன்றவம்பெருகநாடொறும்
காயமுங்கசாயமுங்கரிசமானவே. (ருசங)

ஈற்றிலாராதனைவிதியிலேந்தரு
ஞற்றலுக்கேற்றவாறன்னபானமும்
சாற்றியவகையினூற்சுருக்கிச்சையமே
லேற்றினான்றன்னைநின்றிலங்குஞ்சிந்தையான். (ருசச)

சித்தமெய்ம்மொழிகளிற்செறிந்துயிர்க்கெலா
மித்திரனயபின்வேதனைதியி
லொத்தெழுமனத்தனையுவகையுள்ளுலாய்த்
தத்துவத்தவத்தினூற்றனுவைவாட்டினான். (ருசரு)

திருந்தினார்தேய்வுகண்டெழும்னீசர்போ
னரம்பெலாமெழுந்தனநல்லமாந்தரி
லரங்கினநயனமுள்ளருந்தவக்கொடி
யிருந்தமைகாட்டிநின்றிலங்குநீரவே. (ருசசு)

தவத்தழலெழுந்துயிராம்பொற்றூதுவைத்
துவக்கறச்சுடச்சுடத்தோன்றுநீரொளி
நிவத்தலாநின்றொளிதுளும்புமூர்த்தியான்
உவத்தலுங்காய்தலுமொருவினனரோ. (ருசஎ)

தனுவதுதனுவதாய்த்தனுவதாயதும்
மனநிறைபொறைதவமகிழ்ச்சியெய்துவம்
நினைவதுவினையினைநின்றுதீர்த்தது
முனிவனுந்தனதுமேற்கோளின்முற்றினான். (ருசஅ)

எரியினுண்மூழ்கியதென்னதன்னதாய்ப்
பரிசையைவென்றவப்பரமமாமுனி
யருகனையிருதயகமலத்துள்ளிரீஇத்
தெரிவருஞ்சித்தரைச்சென்னிசேர்த்தினான். (ருசகூ)

சென்னியிலிடுங்கவசத்தொடத்திரம்
பன்னருமூவரும்பாங்கினயபின்
றன்னுடம்புயிரினைத்தடறுள்வாளென
வுன்னினின்றைம்பதமுன்னியோதினான். (ருரு௦)

கண்ணினுற்களங்கமிலிலையைக்கண்டிடாப்
பண்ணுறப்பெரியவர்பாதஞ்சேர்ந்தவப்
புண்ணியச்சுருதியைச்செவியிற்பூரியா
விண்ணுலகடைந்தனன்வென்றிவீரனே. (ருருக)

பொருவிலாவுலகெனும்புரவலற்குநற்
கிரிவமாங்கேவச்சத்தொன்பதாவதை
மருவினன்மாலொளிவிமானமற்றதிற்
பிரிதியங்கரத்தினைப்பெரியவீரனே. (ருரு௨)

முப்பத்தோராழியான்முடிந்தவாயுகம்
முப்பத்தோராயிரத்திரண்டுவிட்டுண
முப்பத்தோர்பக்கத்தைக்கடந்துயிர்த்திடா
முப்பத்தோர்நான்கதிசயமைவாழ்த்துமே. (ருருங)

அவதியானரகமாருவதாய்ந்திடா
வுவதியால்வரும்பயன்ஒன்றுமின்றியே
சிவகதியவர்க்குப்போலிவர்க்குநல்வினை
யவதியினுதையத்தாலாகுமின்பமே. (ருருச)

அஞ்சிறப்பயர்வுழியறிவனாணையா
லஞ்சிரண்டடிநடந்திறைஞ்சலல்லது
அஞ்சிவந்தொருவர்தம்மாணையிற்செலா
ரஞ்சொலாரின்மையாலகநல்லிந்திரர். (ருருரு)

இன்பமேயிடையறாதெழுதலல்லது
துன்பமுங்கவலையுந்தோகையன்னவர்க்
கன்புநண்பிலாவகமிந்திரத்தவன்
முன்புபின்பழிந்தெய்தாமூர்த்தியாயினன். (ருருசு)

அருந்தவம்பொருந்தியசீலமாதியிற்
றிருந்தியநால்வருந்தேவராயினர்
பெருந்துயர்விலங்கிற்றீவினையில்வீழ்ந்துபின்
பொருந்தினனிாயத்துப்பூதிபோகியே. (ருருஎ)

வேறு.

பகைவனுந்தனக்குத்தானேபாவங்கள்பயின்றுசொல்லின்
நகையமைநண்புந்தானேநல்வினைக்கேதுவாயிற்
பகையுறவிரண்டும்பாவபுண்ணியப்பயன்களாதல்
இகல்மதயானைபாந்தளிரண்டினுந்தெளிந்ததன்றே. (ருருஅ)

வாளரியுழுவைகைம்மாமலையிடைப்பட்டுமுய்வர்
நீளரணாகுநல்லவினையதுநின்றபோழ்திற்
கோளரியேறுதன்னைக்குறுநரியேனுங்கொல்லும்
நீளரணயநல்லவினையதுநீங்கினுங்கே. (ருசூ0)

தீக்கதிச்செல்வினைமாற்றிச்சிந்தையின்
நோக்கிலாப்பொருளையுநோக்கியின்பத்தை
வீக்கியிம்மாற்றினைநீக்கிவீட்டினை
யாக்குநல்லறத்தினையமர்ந்துசெய்ம்மினே. (ருசூக)

ரு-வது நால்வரும் சுவர்க்கமேறினசருக்க முற்றும்.

பிழை திருத்தம்.

பக்கம்.	பாட்டு.	பிழை.	திருத்தல்.
க	ச	போய்	போய
உ	கச	சிலம்பலாடி	சிலம்பவாடி
ங	கசு	காமவல்லி	காமர்வல்லி
ச	உஅ	பலிபெய	பலிபெய்
அ	சு0	வல்லுவனம்	வல்லிவனம்
கூ	சுக	யணைய	யனைய
கக	எஎ	ரனுதிசாணு	ரணுதிசானு
கங	கூச	ணமுதல்	கணமுதல்
கரு	க0கூ	விட்டுக	வீட்டுக்
கரு	ககஉ	கறந்து	காந்து
கரு	ககச	மாற்றி	மாறறிது
கஎ	கஉரு	விளகசின்	விளக்கின்
உக	கருஎ	யீண்டனு	யீண்டநா
உஉ	கசுசு	வியக்களந்	வியக்கவந
உங	கசுஅ	வுருதைவ	உறுத்தைவ
உஎ	ககூகூ	நாளோன்று	நாளொன்று
உஎ	உ0சு	மணைத்தினும்	மனைத்தினும்
உஅ	உ0எ	யெம்மை	மெய்ம்மை
ஙக	உஙஉ	தாங்கிருவரும்	தாங்கவ்விருவரும்
ஙரு	உசுஎ	கொடிக்கரப்	கொடிநகாப்
ஙசு	உஎஎ	ன்பு	முன்பு
ஙஅ	உஅகூ	கொடுத்திவன்	கொடுத்திலேன்
ச0	ங0ரு	கையிற்கொண்	கைக்கோண்
ச0	ங0ரு	சறிந்ததன்மை	சறிந்துதன்மை
சங	ஙஉரு	மற்றவும்	முற்றவும்
சரு	ஙசசு	தன்செய்	தன்செய்
சசு	ஙசஅ	வாணன்	வாணள்
ருச	சகக	ணித்த	ணுத்தமக்
ருரு	சஉரு	கீடந்தல்	கிடைத்தல்
ருசு	சஉஎ	யுவந்திராச்	யுவந்திராச
ருஎ	சஙஎ	இன்பம்	இன்பப்
ருக	சருங	இத்தை	இதத்தை
சுரு	சகூகூ	துயிர்அடக்க	துயிர்க்கடக்க
சுரு	ரு0உ	மெழா	மேழா
சுசு	ரு0அ	படுமேபிழையிலே	பாடுமே
சுஅ	ருஉ0	சென்றெறிந்திகா	செறிந்திடா
சுஅ	ருஉ0	கணந்தோறும்புகா	கணந்தொறும்புகா
சுஅ	ருஉரு	மணியுமும்	மணியுமுத்தும்